# தமிழரசு

டிசம்பர் 1-31, 1999 ரூ. 10









## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

## அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்


மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.


Mudra:TNSACS:6259:98

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030
கார்த்திகை – மார்கழி
டிசம்பர் 1–31, 1999
மலர் : 31 இதழ் : 11 & 12
விலை ரூ.10



## இந்த இதழில்...

★ மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு ---- 2
★ எங்கள் ஊர் பிரச்சினை ---------------14
★ உழவர் உயர நுகர்வோர் மகிழ உழவர் சந்தைகள் ------------------17
★ மறத்தமிழனின் மணிமண்டபம் --------- 27
★ மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி --- 29
★ கூட்டுறவு வீட்டுவசதி இணையம் --------31
★ முன்னோடி கணினி மாவட்டம் --------- 33
★ கூட்டுறவு சர்க்கரை இணையம் -------- 36
★ வேளாண்மைப் பொறியியல் ----------- 38
★ பெண்டிர் பெருஞ்சிறப்புப் பெற மகளிர் திட்டங்கள் ----------------41
★ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் ---------- 46
★ அபூர்வ தஞ்சாவூர் தட்டு ------------- 48
★ சிறுவணிகக் கடன் திட்டம் ----------- 50
★ மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப நவீன தொழில்நுட்பத்துடன் உணவு உற்பத்தி – 56
★ மகாகவி பாரதிக்கு ----------------- 58
★ கைவினைஞர் பயிற்சித் திட்டம் -------- 60
★ இதயம் மகிழ்ந்திட வா புதிய ஆண்டே! -- 63
★ புத்தாண்டே வருக! ---------------- 64

### திருக்குறள்

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

**தூ**ய்மை என்பது பேராசையற்ற தன்மையாகும். அத்தூய்மை வாய்மையை நாடுவோர்க்கே வாய்க்கும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*



# மாவட்ட ஆட்சியர்கள் மாநாடு

மாவட்ட ஆட்சித்தலைவர்களின் இரண்டு நாள் மாநாடு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாவது தளத்தில் 23–12–99 அன்று காலை 10 மணியளவில் தொடங்கியது.

இம்மாநாட்டில் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் தலைமைச் செயலாளர் முத்துசாமி வரவேற்றுப் பேசினார்.

மாநாட்டினைத் தொடங்கி வைத்து, முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

1996 மே திங்கள் 13–ஆம் நாள் பொறுப்பேற்ற இந்த அரசு மூன்றரை ஆண்டுகாலப் பணிகளை மனநிறைவுடன் ஆற்றி முடித்துள்ள வேளையில் இந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாடு இன்று (23.12.99) தொடங்குகிறது.

2000–ஆவது ஆண்டு தொடங்கவிருக்கும் வேளையில் நாம் கூடியுள்ளோம். உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் – பல்வேறு துறைகளிலும் நாம் ஆற்றியுள்ள பணிகள் நமக்கு மனநிறைவை அளித்தாலும், அவைகளில் முக்கியமானப் பணிகளில் தற்போது நிலவும் குறைநிறைகளை – அரசுப் பணிகளைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்காகச் சுட்டிக்காட்டிட வேண்டியது என் கடமை என்ற முறையில் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**நியாயமான கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை**

நியாயமான கோரிக்கைகளை நேர்மையுடன் சொல்லும் போது, அவற்றைக் களைவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதும், குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் சொல்லும் போது அவற்றை ஆராய்ந்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதும் இந்த அரசு பின்பற்றி வரும் நடைமுறையாகும். பொல்லாங்குச் சொல்ல வேண்டும் என்பதற்காகப் பொத்தாம் பொதுவில் புழுதி வாரித் தூற்றும்

---

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த இடங்களைத் தேர்வு செய்வதில் தற்போதுள்ள விதிமுறைகளை மீறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், எந்த அளவுக்கு மக்களுடைய தேவைகளை நிறைவு செய்கிறது. எந்த அளவுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்குகிறது என்பதை மாவட்ட ஆட்சியர் கருத்தில் கொள்ள வேண்டும்.

தரமான சாலைகள் இல்லாத குடியிருப்புகளே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும்

மோசமான நிலையில் உள்ள சாலைகளை மேம்படுத்தும் பணியினை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், பின்னர் படிப்படியாக பிற சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும், கிராமத் தெருக்கள், சந்துகள், நடைபாதைகள் ஆகியவை உள்ளாட்சிகள் கட்டுப்பாட்டில் உள்ளதால் மாவட்ட



## மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டின் முடிவுகள்

செயலில் ஈடுபடுவோர் எவராக இருந்தாலும், அவர் சொல்பவற்றில் கவனம் செலுத்திக் காலத்தை வீணாக்கிடவும் இந்த அரசு விரும்பவில்லை.

*"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி"*

— என்னும் குறளில் ''உலகம் மழையை எதிர்நோக்கி வாழ்கிறது. அதுபோல, குடிமக்கள் நல்லாட்சியின் பணிகளை எதிர்நோக்கி வாழ்கிறார்கள்'' என்று திருவள்ளுவர் கூறுகிறார். அதுபோல், சமுதாயத்தில் நலிந்த பிரிவு மக்கள் அரசின் உதவிகளை உரிய காலத்தில் எதிர்பார்த்துக் காத்துள்ளார்கள். நிர்வாகப் பணியில் உள்ளவர்கள் மறந்திடக்கூடாத குறள் இது.

**மகளிர் சிறுவணிகக் கடனுதவித் திட்டம்**

மகளிர் நலத் திட்டங்களிலும், மகளிர் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, நகர்ப் புறத்திலுள்ள ஏழை மகளிர்க்குச் சிறு வணிகம் செய்ய கடன் உதவி வழங்க வேண்டுமென்று அறிவித்து, 1.1.1999 முதல் கூட்டுறவு வங்கிகள் மூலம் சேமிப்புடன் இணைந்த சிறுவணிகக் கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கமே ஏழை, எளிய மகளிர் கந்து வட்டிக்காரர்களிடம் அதிக வட்டி விகிதத்தில் கடன் பெற்று அவர்களிடம் அடிமைப்படும் அவல நிலையிலிருந்து மீட்பதற்காகக் கூட்டுறவு வங்கிகள் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் அளித்து, அவர்களை சேமிக்கவும் ஊக்குவித்து அவர்களின் வாழ்வை வளப்படுத்துவதாகும்.

இதுவரை 45,000 மகளிர் 4 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வசதிப் பெற்றிருப்பதுடன் 2.25 கோடி ரூபாய் அளவிற்கு சேமிக்கவும் செய்துள்ளனர். இந்த நிதியாண்டு முடிவிற்குள் குறைந்தது ஒரு இலட்சம் மகளிர்க்கு கடன்வசதி வழங்கிட வேண்டுமென்பதே நம்முடைய இலக்கு ஆகும். இத்திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆய்வு செய்து கூட்டுறவு வங்கிகளுடன் பேசி முனைப்புடன் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மகளிர் சுயஉதவிக் குழுக்கள்**

1989–ஆம் ஆண்டு 75 வட்டாரங்களில் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், இடையில் ஏற்பட்ட தொய்வை நீக்கி 1996–97–ஆம் ஆண்டு முதல் மகளிர் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் தமிழ்நாடு அரசு தலைமைப் பங்கேற்று, மிகுந்த கவனத்துடன் 159 அரசு சாரா

---

ஆட்சியர்கள் உள்ளாட்சி மன்றங்களை அணுகி அவர்கள் மூலம் சாலைகள் போட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மண் சாலைகள், கிராவல் சாலைகள், ஓரடுக்கு சாலைகள், ஈரடுக்கு சாலைகள் ஆகியவற்றை ஒரு நிலை தரம் உயர்த்தும் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திற்கான நிதியிலிருந்து சாலை மேம்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும், இந்த ஆண்டு முடிவிற்குள் தரமான சாலைகள் இல்லாத குடியிருப்புகளே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த கவனத்துடன் இப்பணியில் ஈடுபட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.



**'நமக்கு நாமே' திட்டம்**

★ சென்ற ஆண்டைவிட நடப்பு ஆண்டில் பொதுமக்களின் பங்களிப்பும் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கையும் சற்று குறைவாக உள்ளது. இந்தக் குறையை நீக்கி முழு அளவில் பணிகள் எடுத்துச் செய்யப்பட வேண்டும் என்றும்;

★ இத்திட்டத்தில் பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கினை உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அமைப்புகள் மற்றும் வணிக வங்கிகள் ஆகியவற்றுடன் இணைந்து 30.11.99 வரை 19,815 சுயஉதவிக் குழுக்கள் 3,76,618 உறுப்பினர்களுடன் அமைத்து அதன் மூலம் மகளிர் தங்களுடைய தொகுப்புச் சேமிப்பில் 27 கோடியே 35 இலட்சம் ரூபாய் சேமித்துள்ளனர். இந்த நிதியாண்டு முடிவுக்குள் தற்போதுள்ள பயனாளிகள் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

எப்பொழுதெல்லாம் சாத்தியமாகிறதோ அப்பொழுது மாவட்ட ஆட்சித்தலைவர்கள் சுயஉதவிக் குழுக்கள் கூட்டும் கூட்டத்தில் பங்குகொள்வதைக் குறிப்பாகக் கொள்ள வேண்டும்.

நபார்டு, வணிக வங்கிகள், பொன்விழாத் திட்டம் ஆகியவற்றின் மூலமாக அதிகபட்ச பலன்களை இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெறுவதற்கான வாய்ப்புக்களை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உருவாக்கித் தரவேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கடன் வசதி ஏற்பாடு செய்வதுடன் சுகாதாரம், நலவாழ்வு, தாய்–சேய் நலம், தடுப்பு ஊசிகள், அயோடின் உப்பு, உடல்நலம் பேணுதல், ஊட்டச்சத்து போன்றவற்றைப் பற்றியும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கூடும்பொழுது கலந்து பேசுவது பொதுவாக சமுதாயத்திற்கு நல்ல பலனைத் தருவதாக அமையும். எனவே, இதனை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

அரசுத் தரப்பில் வெளியிடப்படுகின்ற மக்கள் சாசனம் உள்பட அனைத்துக் கையேடுகளையும் மகளிர் குழுக்களுக்கு விநியோகிக்க வேண்டும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள தரம் எந்தக் காலக்கட்டத்திலும் நீர்த்துப் போகாமல் இருக்கிறதா என்பதையும் மாவட்ட ஆட்சியர்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

**உழவர் சந்தை**

தமிழ்நாட்டில் 100 இடங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப்படும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதல் உழவர் சந்தை மதுரையில் 14.11.99 அன்றும், தொடர்ந்து திருவண்ணாமலை, திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர், திருச்சி மற்றும் சேலம் மாவட்டத்தில் சூரமங்கலம், அம்மாப்பேட்டை, ஆத்தூர் ஆகிய இடங்களிலும், ஆக எட்டு உழவர் சந்தைகளையும் நானே நேரில் சென்று தொடங்கி வைத்துள்ளேன்.

உழவர் சந்தையைப் பொறுத்தவரை, அதை நகராட்சிப் பகுதிகளில் சரியான இடத்தில்




**சமத்துவபுரம்**

- ★ இதுவரை அமைக்கப்பட்டுள்ள 58 சமத்துவ புரங்களில் நான்கைந்து இடங்களில் அமைக்கப் பட்டுள்ள சமத்துவபுரங்கள் பற்றிய புகார்களும் அது குறித்த புகைப்படங்களும் வந்துள்ளன என்றும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் உடனடியாக தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தப் பட்டது.
- ★ சமத்துவபுரங்களில் உள்ள வீடுகளில் மழைநீர் ஒழுகாமல் இருக்க மேல்கூரைகளில் ஓடுகள் பதிப்பதற்கு வீடு ஒன்றுக்கு ரூபாய் 2,000 வீதம் அளிக்க 1 கோடி ரூபாய் வழங்க முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள்.

**குடிநீர் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள்**

- ★ உள்ளாட்சி அமைப்புகளின் முயற்சிகளை பலப்படுத்தும் வகையிலும் குடிநீர் வழங்கல், தெருவிளக்குகள் 100 சதவீதம் இயங்கும் வகையில் சிறப்பு நடவடிக்கைகளை ஒவ்வொரு காலாண்டிலும் முதல் வாரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

அமைத்தால் தான் வெற்றிப் பெறும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இத்திட்டத்தினை செயல் படுத்தும் போது, இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையான விவசாயிகள் பயன்பெறும் வகையில் விவசாயிகளின் தேர்வும் கவனத்துடன் செய்யப்பட வேண்டும். அப்போது தான் இடைத் தரகர்கள் விவசாயிகளிடையே வந்து புகுந்து விடாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

அத்துடன், மாவட்ட ஆட்சியர்கள் தத்தம் மாவட்டங்களில் உள்ள வாய்ப்புகளைப் பொறுத்துக் காய்கறிகள், பழங்கள் மற்றும் மலர்களின் உற்பத்தியை அதிகரிக்க அனைத்து முயற்சிகளும் எடுத்திட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். இதில் தோட்டக்கலைத் துறையின் பங்கு முக்கியம்.

**'வருமுன் காப்போம் திட்டம்'**

ஏழை எளிய மக்களுக்குப் பன்முனை இலவச மருத்துவப் பரிசோதனைகளும் சிகிச்சைகளும் அளித்திடும் "அரசு நலவாழ்வு – வருமுன் காப்போம் திட்டத்தை'' அரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது.

துணை சுகாதார நிலைய அளவில் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தி – ஏழை எளிய மக்களின் பல்வேறு நோய்களைக் கண்டறிந்து – மருத்துவ சிகிச்சை அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அரசு நலவாழ்வு – ''வருமுன் காப்போம் திட்டத்தைப்'' பொறுத்த வரையில் முகாம்கள் நடக்கும்போது பரிசோதனைக்கும், சிகிச்சைக்கும் வருகிற ஏழை, எளியோருக்கு உரிய சிகிச்சைகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல், தொடர் சிகிச்சை தேவைப்படுகிறவர்களுக்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் இன்னொரு முக்கிய நோக்கமாகும். உரிய காலத்தில் நடத்தப்பட்டால் தான் தொடர் சிகிச்சை எதிர்பார்க்கும் பலனைத் தரும்.

கிராமத்தில் உள்ள அனைவரும் பயனடையும் வகையில் மருத்துவ முகாம்களைச் சிறப்பாக நடத்துவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்துரைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**'வாழ்வொளி' திட்டம்**

பள்ளி செல்லும் குழந்தைகளின் நலத்தைப் பேணி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் உயரிய நோக்கத்தில் இந்த ஆண்டு அரசு – பள்ளிகளில் "வாழ்வொளித் திட்டம்" ஒன்றினை அறிவித்து

* மாவட்ட ஆட்சியர் இப்பணிகளில் ஊராட்சிகள், நகராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியம் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து. செயல்பட வேண்டும்.
* முதற்கட்ட சிறப்பு நடவடிக்கையை சனவரி 2000ஆம் ஆண்டில் முதல் வாரத்தில் மேற்கொள்ள வேண்டும்.
* இப்பணிகளை சிறப்பு மேற்பார்வையிட்டு, அரசுக்கு அறிக்கை தரும் வகையில், சென்னையில் இருந்து அலுவலர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சனவரி 2000ஆம் ஆண்டில் 8–10 தேதிக்குள் அனுப்பி வைக்க முடிவெடுக்கப்பட்டது.

**நெடுஞ்சாலை**

* நெடுஞ்சாலையில் ஃபுளூரசன்ட் (Fluorescent) ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருப்பது இரவு நேரங்களில் போக்குவரத்தைப் பொறுத்தவரை மிக பயன் உள்ளதாக இருப்பதாலும், அதற்கு கிலோ மீட்டருக்கு ரூ.500 தான் செலவாகும் என்பதாலும், அதை நிறைவேற்றலாம்



4 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கி செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டம் மக்கள் நல்வாழ்வுத் துறையும், பள்ளிக் கல்வித்துறையும் இணைந்து செயல்படுத்த வேண்டிய திட்டமாகும். எங்கெல்லாம் பள்ளி ஆசிரியர்கள் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் இந்த திட்டத்தைச் செயல்படுத்த முயல்கின்றார்களோ, அங்கெல்லாம் இத்திட்டம் பயனுள்ள வகையில் அமைந்து வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும், பள்ளிக் கல்வித்துறைக்கும் தேவையான ஒருங்கிணைப்பை உருவாக்கி, ஏழை எளிய மாணவர்களுக்கு நல்ல பலனைத்தரும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**ஆரம்பச் சுகாதார நிலையப் பணிகள் மேம்பாடு**

தமிழ்நாட்டில் மொத்தம் 1,399 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 51 கோடி ரூபாய் செலவில் இதுவரை 606 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பார்வையிட்டுச் சிகிச்சை முறையில் மேம்பாடுகள் செய்ய தக்க ஏற்பாடுகள் செய்யுமாறும், பணிநேரம் முழுவதும் ஊழியர்கள் நிலையங்களில் இருந்து, வரும் நோயாளிகளுக்கு உரிய உதவிகளைச் செய்கிறார்களா என்பதையும் கண்காணித்து மாவட்ட சுகாதார அதிகாரிகளோடு கலந்து பேசி ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாட்டினை மேம்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும்.

**கணினி பாடம்**

21–ஆம் நூற்றாண்டின் தகவல் தொழில் நுட்பம் இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு இந்தியாவிலேயே முதல்முதலாக தமிழ்நாட்டில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் கற்பிக்கும் திட்டத்தை 112 கோடி ரூபாய் செலவில் அரசு தொடங்கியுள்ளது. இதனை நான் இரண்டொரு மாவட்டங்களில் நேரில் சென்று மாணவர்களின் உற்சாகத்தைக் கண்டு களித்தேன்.

அடுத்த கல்வி ஆண்டு முதல் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் அரசு கலைக் கல்லூரிகளிலும் இத்திட்டம் செயல்பட உள்ளது. மாவட்ட ஆட்சியர் பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் இத்திட்டம் செயல்படுகின்ற பள்ளிகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொள்வதோடு,

---

என்றும், ஃபுளுரசன்ட் ஸ்டிக்கர் ஒட்டுவதில் பிரச்சினைகள் ஏற்படுமென்றால் ஃபுளுரசன்ட் பெயின்ட்டை பயன்படுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது.

**மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் உழவர் சந்தைகள் தொடங்க நடவடிக்கை**

★ தூத்துக்குடியில் தற்போது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள இடம் நகராட்சி மன்றத்தால் தடுக்கப்பட்டு, அந்தப் பிரச்சினை நீதிமன்ற வழக்கில் உள்ளதால் உடனே இதுகுறித்து வேறு ஒரு இடத்தை மாற்ற மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்றும்;

★ எல்லா மாநகராட்சிப் பகுதிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும் உடனடியாக 'உழவர் சந்தை' ஆரம்பிக்க மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும்; ஏற்கெனவே உழவர் சந்தைகள் தொடங்கப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் அனுபவங்களை புதிதாக உழவர் சந்தை தொடங்கவிருக்கும் மாவட்ட ஆட்சியர்கள் தெரிந்து கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.



மாணவர்களிடம் கற்கும் திறன், பயிற்சியாளர்களுடைய ஈடுபாடு, கணினிப் பொறிகளுடைய பராமரிப்புக் குறித்தும் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாதமும் கல்வித்துறை அதிகாரிகளுடன் இத்திட்டம் செயல்படுகின்ற பாங்கினைக் குறித்து கலந்துரையாட வேண்டும். இத்திட்டம் செயல்படுத்துவதில் எங்கேயினும் தொய்வு ஏற்படுமேயானால் அதனை உடனடியாக நீக்க வேண்டும்.

**புகார்களுக்கு இடம் கொடுக்காமல் பொது விநியோகம்**

பொது விநியோகத் திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 1,300 கோடி ரூபாயை மானியமாக அரசு செலவிடுகிறது. தமிழ்நாட்டில் மட்டும்தான் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்கள், மேலே உள்ளவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் மூன்று நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி, கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலையில் வழங்கப்படுகிறது.

கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் 3 ஆயிரத்து 378 நியாய விலைக்கடைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட கடைகளுக்கு நவீன முறையில் புதிதாகக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

பொதுவிநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படுவதற்கு ஏற்கனவே துறை வழியாக பலமுறை ஆணைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. புகார்களுக்கு இடம் கொடுக்காமல் பொதுவிநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய முக்கியப் பொறுப்பாகும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கியிலிருந்து நியாய விலைக்கடைக்கு அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படும் போது, அவைகள் சரியான எடையில், குறிப்பிட்ட நேரத்தில் நியாயவிலைக் கடைகளுக்குப் போய்ச் சேருகின்றனவா என்பதை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும்.

ஒவ்வொரு தாலுக்கா கிடங்கியிலிருந்து, எந்தத் தேதியில், எந்த ஊர் நியாயவிலைக் கடைக்கு, எவ்வளவு அளவு எடுத்துச் செல்லப்படுகிறது என்ற தகவலை முன்கூட்டியே பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் கால அட்டவணை (Fixed Calender) ஒன்றைத் தயார் செய்து அதைப் பிறழாமல் கடைப்பிடிப்பது குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நியாயவிலைக் கடைகளைத் தணிக்கை செய்வதோடு

**அரசு நலவாழ்வு - 'வருமுன் காப்போம் திட்டம்'**

★ அரசு நலவாழ்வு - 'வருமுன் காப்போம்' திட்டத்தின்படி நடத்தப்படும் சிறப்பு முகாம்கள் ஸ்பெஷலிஸ்ட் மருத்துவர்கள், ஈ.சி.ஜி., ஸ்கேன் போன்ற உபகரணங்கள் கொண்டு நடத்தப்படுவதால் பெரிதும் நன்மை பயப்பனவாக உள்ளன என்ற கருத்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப் பட்டது. 2000ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் எல்லா மாவட்டங்களிலும் இம்முகாம்களை சிறந்த முறையில் தொடங்கி நடத்துவதற்கு திட்டம் ஒன்றை வகுத்துச் செயல்படுத்துவதென்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதந்தோறும் 20 முதல் 25 மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் முடிவெடுக்கப் பட்டது.



கிடங்கிகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் குறிப்பிட்ட அட்டவணையின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு போய்ச் சேருகின்றனவா என்பதைத் திடீர் தணிக்கையின் போது ஒப்பீடு செய்வது நல்ல பலனைத் தரும்.

சிறப்பாக இயங்குகின்ற மகளிர் குழுக்களைக் கண்டறிந்து சரியாக இயங்காத நியாயவிலைக் கடைகளை அவர்களிடம் ஒப்படைத்து, இத்திட்டத்தை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தலாம்.

**சமத்துவபுரங்கள்**

சாதி சமய பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கி மத நல்லிணக்கம் மற்றும் மனித நேயத்தோடு அனைத்து தரப்பினரும் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழும் வகையில் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் உருவாக்கப்பட்டது. இதுவரை 52 கோடியே 50 இலட்சம் ரூபாய் இத்திட்டதிற்கென அனுமதிக்கப்பட்டு 58 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சமத்துவபுரங்களில் வாழும் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வது எதிர்கால சாதி சமயமற்ற சமூகத்திற்கான நல்ல அறிகுறியாகும். சமத்துவபுரத்தில் குடியிருப்பவர்களிடம் அங்குள்ள வீடுகளைப் பராமரிக்கவும், அவர்கள் தங்கள் குறைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளவும் ஊக்குவிக்க வேண்டும். சமத்துவபுரத்தில் உள்ள சமுதாயச் சொத்துக்களைப் பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**கல்நார் வீடுகள்**

1999–2000–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், அடிக்கடி தீ விபத்துக்களுக்கு ஆளாகி அல்லல்படும் மாநகர குடிசைப்பகுதி மக்களின் நீண்ட நாளைய இன்னலை நிரந்தரமாகத் தீர்க்கும் வண்ணம், ஓலைக்கூரைகளை மாற்றி கல்நார் தகடுகளாலான கூரைகளை அரசு அமைத்துத்தரும் என அறிவிப்பு செய்யப்பட்டது.

1998–99–ஆம் ஆண்டில் 7,936 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 5 கோடி ரூபாய் செலவில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மாநகரங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

1999–2000–ஆம் ஆண்டில் 20,611 குடும்பங்களுக்கு 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுப்புறச் சுவர்களுடன் கல்நார் தகடுகளமைந்த கூரைகள் அமைத்துத் தரத் திட்டமிடப்பட்டு, இதுவரை 8800 வீடுகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிதியாண்டில் மேலும் 12 ஆயிரத்து 82 குடும்பங்களுக்கு 15 கோடியே 10 இலட்சம் ரூபாய்

**வாழ்வொளித் திட்டம்**

★ இத்திட்டம் மாணவர்களின் உடல்நிலையை பரிசோதனை செய்ய ஏற்படுத்தப்பட்ட நல்ல திட்டம் என்பதாலும், இளம் வயதில் பள்ளி மாணவர்கள் உடல்நலக் குறைபாடு தெரியாமலேயே இருந்துவிடும் பரிதாப நிலையை அகற்ற இந்தத் திட்டம் மிக அவசியமான திட்டம் என்பதாலும், மாவட்ட ஆட்சியர்கள் கருணை உள்ளத்தோடு அணுகி அனைத்துப் பள்ளி மாணவர்களின் மருத்துவப் பரிசோதனைக்கும் ஆவன செய்ய வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

★ ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் ஏழை எளிய மக்கள் பெருமளவில் பயன்பெறும் வகையில் அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழங்கியுள்ள ஆலோசனைகளின் அடிப்படையில் பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

★ மருத்துவர் பணியிடங்களில் காலியிடங்களை நிரப்புவதில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்; அவர்கள் குறிப்பிட்ட காலம் ஓரே ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்ற ஆணையிடப்படும்.

★ ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்தை காலியிடங்கள் தொடரும் மாவட்டங்களில் ஓராண்டுக்குப் பின்னரும் தொடர்வது பற்றி தக்க முடிவு எடுக்கப்படும்.

★ குடியிருப்பு இருக்குமிடங்களில் மருத்துவ அலுவலர்கள் தங்கியிருக்க வேண்டு மென்பதை கட்டாயப்படுத்த வேண்டும்.

★ அறுவை அரங்குகளை செயல்பாட்டுக்கு கொண்டு வர உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ மலைப் பகுதிகளிலும், பிற பின்தங்கிய பகுதிகளிலும் கிராம சுகாதார செவிலியர்களை நியமித்துக் கொள்ள மாவட்ட அளவிலான குழுவிற்கு அதிகாரம் வழங்க தக்க பொதுவான விதிகளை ஏற்படுத்தி செயலாக்க வேண்டும்.

★ தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்படும் மருத்துவர்களை மாவட்டங்களுக்கு ஒதுக்கி மாவட்ட அளவிலான குழு மூலம் காலியாக

செலவில் சுற்றுப்புறச் சுவர்களுடன் கல்நார் தகடுகளிலான கூரைகள் அமைக்க வேண்டியுள்ளது.

இந்த வீடுகளை பயனாளிகளே பேணிக் காக்கவும், பொதுக் கழிப்பிடம் போன்ற சமுதாயச் சொத்துக்களை பயனாளிகள் குழுக்கள் முன்வந்து பராமரிக்கும் முறையையும் ஏற்படுத்திட வேண்டும்.

குடிசைவாழ் மக்களுக்கு உடனடிப் பலன் தரும் இத்திட்டத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு, பணிகளை விரைவுபடுத்திடவும், தரத்தை உறுதி செய்து கொள்ளவும் வேண்டும்.

**அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கிராம வளர்ச்சிப் பணிகளுக்கு முன்னுரிமை**

1997–ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில்" கிராம வளர்ச்சிப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 1997–98–ஆம் ஆண்டில் 172 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 29 ஆயிரத்து 641 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1998–99–ஆம் ஆண்டில் 179 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 23 ஆயிரத்து 655 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1999–2000 ஆண்டிற்கு 163 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 ஆயிரத்து 59 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 4 ஆயிரத்து 346 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர்கள் நிலுவையாக உள்ள பணிகளை இந்த நிதியாண்டு இறுதிக்குள் முடிப்பதற்குத் தேவையான அனைத்து அவசர நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமம், மாதிரி கிராமமாக மேம்பட வேண்டும் எனும் அடிப்படையில், அந்த கிராமங்கள் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற்றுத் திகழ்வதற்குக் கருத்துச் செலுத்தப்பட வேண்டும்.

**நமக்கு நாமே திட்டம்**

1997–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 1997–98–ஆம் ஆண்டு சுமார் 7 கோடி ரூபாயாக இருந்த மக்கள் பங்களிப்பு படிப்படியாக உயர்ந்து 1998–99–ஆம் ஆண்டு 12 கோடியே 50 இலட்சம் ரூபாயாக வளர்ந்திருப்பது இத்திட்டத்தின் நோக்கத்தில் மக்கள் ஈடுபாட்டினை உணர்த்துகிறது. இத்திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பும், ஆதரவும் பெற்றுள்ளதால் மற்ற திட்டங்களாகிய ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், 10–வது நிதிக்குழு மானியம் ஆகியவற்றையும் நமக்கு நாமே கொள்கை அடிப்படையில் மக்கள் பங்கோடு செயல்படுத்துவதற்கு ஏற்றபடி

---

இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நியமிக்க தக்க ஆணை வழங்கப்படும்.

★ ஆரம்ப சுகாதார நிலைய அளவில் பராமரிப்பு நிதி ஏற்படுத்தி, அதைச் செலவிடும் அதிகாரத்தை மருத்துவ அதிகாரிக்கு வழங்குவது பற்றி பரிசீலித்து விரைவில் முடிவு செய்யப்படும்.

★ 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரவு நேர மருத்துவர் பணியிடத்திற்கு பதிலாக செவிலியர்களை நியமித்து, அந்த மருத்துவர் பணியிடத்தை வேறு சேவைக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

★ ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல் பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவ்வப்போது பார்வையிட்டும், ஆய்வு செய்தும் மேம்படுத்தி, ஏழை எளிய மக்களுக்கு சிறப்பான சேவை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பொது விநியோக திட்டம் சம்பந்தமாக வாரந்தோறும் அலுவலர்களுடன் கூட்டம்**

★ அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் வாரந் தோறும் திங்கட்கிழமைகளில் குறைந்தது ஒரு மணி நேரமாவது பொது விநியோகத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கூட்டம் நடத்தி கிட்டங்கிகளில், கடைகளில் இருப்பு, போலி அட்டைகள் நீக்குதல் ஆகியவற்றை பரிசீலனை செய்து வாரந்தோறும் நுகர்பொருள் ஆணையருக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டது.

★ ஒவ்வொரு தாலுகா கிடங்கியிலிருந்து, எந்தத் தேதியில், எந்த ஊர் நியாய விலைக் கடைக்கு எவ்வளவு அளவு எடுத்துச் செல்லப்படுகிறது என்ற தகவலை முன்கூட்டியே பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் கால அட்டவணை (Fixed Calender) ஒன்றைத் தயார் செய்து அதை பிறழாமல் கடைபிடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

**மகளிருக்கான சிறுவணிகக் கடன் திட்டம்**

★ மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த செய்திக்குறிப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அடிக்கடி வெளியிட வேண்டும். மகளிர் பயனாளிகள் சரியாக தேர்ந்தெடுக்கப்பட்டு கடன் வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆட்சித்தலைவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**கிராமச் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்ற உரிய நடவடிக்கை**

சாலைகள் முக்கிய உள் கட்டமைப்பாக இருப்பதால் மற்ற வளர்ச்சிப் பணிகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனை அரசு நன்கு உணர்ந்துள்ளதால், கிராமச்சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றுவதற்கு உரிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

1988–89–இல் 4 ஆயிரத்து 418 கிலோ மீட்டராக இருந்த ஊரகச் சாலைகள் 1995–96 வரை 5 ஆயிரத்து 674 கிலோ மீட்டர் வரைதான் தார்ச்சாலைகளாக மாற்றப்பட்டு இருந்தன. இந்த அரசு மேற்கொண்ட முயற்சியால், 1995–96–இல் உள்ளாட்சி பராமரிப்பில் இருந்த 5 ஆயிரத்து 674 கிலோ மீட்டர் தார்ச்சாலைகள், 31.3.1999–இல் 22 ஆயிரத்து 574 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. வரும் ஒன்றரை ஆண்டுகளில் 11 ஆயிரத்து 651 கிலோ மீட்டர் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றுவதற்கும், 5000 கிலோ மீட்டர் தெருக்களையும், குறுக்குத் தெருக்களையும், மேம்படுத்துவதற்கும், 889 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் முன்னுரிமை அடிப்படையில் பணிகளைத் தேர்வு செய்து பணிகள் பற்றிய விவரங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கணினியில் பதிவு செய்து, முக்கியமான கட்டங்களில் பணிகளைப் பார்வையிட்டு அவற்றின் தரத்தை உயர்த்த வேண்டும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அடுத்து வரும் ஓர் ஆண்டில் ஏறத்தாழ 200 கோடி ரூபாய் செலவில் பல்வேறு சாலைகளும், தெருக்களும் மேம்படுத்தப்பட உள்ளன.

தெருவிளக்குகள் 100% எரிகின்றனவா என ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சரிபார்ப்பீர்.

கடந்த 3 ஆண்டுகளில் 70,000–க்கு மேற்பட்ட தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவைகளின் பராமரிப்பு மிகவும் அவசியமாகும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் தெருவிளக்குகள் 100 சதவீதம் எரிகின்றனவா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.

**குடிநீர் வசதி**

தமிழகத்திலுள்ள 66,631 குடியிருப்புகளில் கடந்த 3 ஆண்டுகளில் இந்த அரசு எடுத்த பெரும் முயற்சியின் காரணமாக குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகளே இல்லை என்ற நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.



★ இத்திட்டத்தைக் கூர்மைப்படுத்தி பெண்கள் அதிக அளவில் பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அடிக்கடி நேரடி ஆய்வு நடத்துவதோடு கூட்டுறவு வங்கியாளர்களுடன் கூட்டங்கள் நடத்திடவும், நிறைய வெற்றிச் சம்பவங்களை (Success Stories) முதலமைச்சர் செயலகத்திற்கு அனுப்பி இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

★ இதுவரை இத்திட்டத்தினால் பயன்பெற்றுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 45,000 என்பதை இந்நிதியாண்டு இறுதிக்குள் ஒரு இலட்சமாக உயர்த்த வேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டது.

**மாவட்ட நிர்வாகப் பணிகளை கணினி மயமாக்கல்**

★ திருவாரூர் மாவட்டத்தில் நிர்வாகப் பணிகள் கணினி மயமாக்கப்பட்டு முன்னோடி மாவட்டமாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. வேறு சில மாவட்டங்களிலும் முன்னோடி திட்டங்கள் சில வட்டங்களில் தொடங்கப் பட்டுள்ளன. இதே போன்று அனைத்து மாவட்ட

மேலும் 49,629 குடியிருப்புகளில் முழுமையாகக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

குடிநீர்வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப் படுகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், நீர்த்தேக்கத் தொட்டிகள் குறித்த கால அட்டவணைப்படியும், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அந்தந்த நடப்பாண்டிலும் செய்து முடிக்கப்படுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மேற்கொள்கின்ற ஆய்வும், தணிக்கையும் மிகவும் முக்கியம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நிலுவைப் பணிகளை முடுக்கி 31.3.2000–க்குள் முடித்து விடவும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பதில் தாமதத்தைத் தவிர்க்கவும், கட்டி முடிக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு துரிதமாக மின் இணைப்பு வழங்கவும் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாகவே நடத்தப்பட இயலும். இப்பணிகள் சிறிதும் பிசகாமல் அவற்றுக்குரிய பலன்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

**முறையான குடிநீர் விநியோகம்**

பொதுவாக இந்த ஆண்டு பருவமழைச் சிறப்பாகப் பெய்திருந்தும், ஒருசில இடங்களில் தேவையான மழையின்மை காரணமாக அடுத்த ஆண்டு கோடைப்பருவத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்பதைக் கவனத்தில் கொண்டு இப்பொழுதிருந்தே முறையான குடிநீர் விநியோகத்திற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

**சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டுத் திட்டம்**

1997–98–இல் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், இதுவரை 258 கோடி ரூபாய் ஒதுக்கீடுச் செய்யப்பட்டுப் பலவித பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நிலுவையில் உள்ள அனைத்துப் பணிகளையும் விரைவில் முடிக்க மாவட்ட ஆட்சித்தலைவர்கள் முனைந்து செயல்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1998–99–ஆம் ஆண்டு பெறப்பட்ட தொகைச் சற்றுக் குறைவாக உள்ளது. 100% ஒதுக்கீட்டினைப் பெற்று தொகுதி மேம்பாட்டுக்காகச் செலவழிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

---

ஆட்சியர்களும் முழு முயற்சி மேற்கொண்டு நிர்வாகப் பணிகளை கணினி மயமாக்க வேண்டும்.

★ பல்வேறு மாவட்டங்களிலும் உருவாக்கப் பட்டுள்ள மென்பொருள்களை ஆய்வு செய்து டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள வல்லுனர் குழு இது குறித்து பரிசீலித்து ஆலோசனை வழங்கும். அதன் அடிப்படையில் முடிவெடுக்கப்படும்.

**மகளிருக்கான திட்டம்**

★ மகளிர் குழுக்களின் செயல்பாடுகளுக்கும், மாவட்ட நிர்வாகத்தின் பணிகளுக்கும் ஒரு நல்ல ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும்,

★ உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளோடு இக்குழுக்களின் நோக்கத்தை ஐக்கியப் படுத்தவும்,

★ பெண்கள் குழுக்கள் சேமிப்புக் கடன் என்பதோடு நிற்காமல் தாய்சேய் நலம், தடுப்பு ஊசி, சுகாதாரம் போன்றவற்றிலும் கவனம் செலுத்தவும்,

★ மகளிர் குழுக்களுக்கு அரசுச் செய்தி, மக்கள் சாசனம், நலத்திட்ட கையேடுகள் போன்றவற்றை வழங்கிடவும்,

★ குழுக்களாக பெண்கள் செய்யும் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கவும்,

★ மாவட்ட ஆட்சியர்கள் நேரடியாக இக் குழுக்களின் செயல்பாடுகளைக் குறித்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு மாதம் ஒரு முறை விவாதிக்கவும்,

★ அனைத்துத் துறை அலுவலர்களையும் மகளிர் குழு உறுப்பினர்களையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஒருங் கிணைந்து கருத்தரங்குகள் நடத்தவும்,

★ அமைச்சர்களின் சுற்றுப்பயணத்தின்போது, மகளிர் குழுக்களை சந்தித்து கலந்துரையாடு வதற்கான ஏற்பாட்டினைச் செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

★ கணினி அறிவியல் புதுமையாக இருப்பதால், இப்பாட முறையை ஆய்வு செய்வதற்கு ஏதுவாக முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், தலைமை

நபார்டு திட்டம் மூலம் நிறைவேற்றப்படும் சாலை மற்றும் பாலம் மேம்பாட்டுப் பணிகள், தரமான முறையில் செயல்படுகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கண்காணித்திட வேண்டும்.

**சிறு சேமிப்பு**

பொதுமக்களிடையே சேமிக்கும் பழக்கத்தைத் தோற்றுவித்து அவர்களுக்கு நிதி ஆதாரத்தில் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதோடு அந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு அரசு நலத்திட்டங்களை நிறைவேற்றி, அந்தப் பலன்கள் பொதுமக்களுக்கே சென்று சேர்வதற்குச் சிறுசேமிப்புத் திட்டம் ஓர் சிறந்த வாய்ப்பாக அமைந்திருக்கின்றது.

இந்த நிதியாண்டில் சிறுசேமிப்புத் திட்டத்திற்குரிய நிகர இலக்கு 1,600 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் 1999—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை 631 கோடியே 83 இலட்சம் ரூபாய் திரட்டப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பு வசூல் பணியில் சில மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளனர்.

சிறுசேமிப்புத் திட்டத்தை மக்கள் இயக்கமாக உருவாக்கி அதன் மூலம் மாநிலத்தின் நிகர வசூலைப் பெருக்கும் வகையில். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் சாதனங்கள் வழங்கல், அஞ்சலகத் துறையையும், சிறுசேமிப்பு முகவர்களையும் ஊக்குவித்தல், விளம்பரத்தில் புதிய உத்திகளைக் கையாளுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசு பல திட்டங்களைச் செயலாற்றி வருகிறது.

மாவட்ட ஆட்சியர்கள் இவற்றை நன்கு பயன்படுத்திச் சிறுசேமிப்பு வசூலை மேம்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இதன்மூலம் போலி நிதி நிறுவனங்களின் பிடியிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பும் நிறைவேறும் என்பதை நீங்கள் மனதில் கொள்ளலாம்.

**மாதம் ஒரு முறை பத்திரிகையாளர் பயணம்**

இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் எல்லா மாவட்டங்களிலும் ஏராளமான பணிகள் நடைபெற்றுள்ளன. அதன் மூலம் நிரம்பச் சாதனைகளை இந்த அரசு படைத்து வருகிறது என்றாலும், நாம் செய்துள்ள சாதனைகளுக்குப்

ஆசிரியர் ஆகியோர்களுக்கு ஒரு அறிமுகப்பயிற்சி (Orientation Programme) அளிக்க வேண்டும் என்றும்,

★ மாணவர்களுக்கு எளிதில் விளங்கும் வண்ணம் பாடநூல்களை எளிமையாக வடிவமைத்து வெளியிடுவதுடன், மாணவர்கள் தாமே பயிற்சிகளை மேற்கொள்வதற்கான



போதுமான விளம்பரம் இல்லை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். அதற்குக் காரணம் திட்டமிட்டு முறையான விளம்பரப்பணிகள் மேற்கொள்ளப் படாததுதான். எனவே, வரும் காலத்திலாவது மாவட்ட அட்சித்தலைவர்கள் மாதம் ஒருமுறை பத்திரிகையாளர்களைச் சந்திக்க வேண்டும். அந்த மாதத்தில். மாவட்டத்தில் நடைபெற்றுள்ள பணி விவரங்களை அவர்களுக்குத் தர வேண்டும். அத்துடன், மாதம் ஒரு முறை பத்திரிகையாளர் பயணத்திற்கு (Press Tour) ஏற்பாடு செய்ய வேண்டும்.

பல்வேறு திட்டங்களை ஒரே நேரத்தில் பார்ப்பதைவிட, மாதம் ஒரு முறை குறிப்பிட்ட திட்டத்தில் எடுத்து நிறைவேற்றப்பட்டு வரும் இடங்களுக்கு அழைத்துச் சென்று பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால், பணிகளும் நல்ல முறையில் நடைபெறும். அதைப்பற்றி மக்களும் விளக்கமாகத் தெரிந்து கொள்வார்கள். இதைப்பற்றிய விவரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஒவ்வொரு மாதமும் முதலமைச்சரின் செயலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்கள் முனைப்புடன் பணியாற்றி அங்கிருக்கும் பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், சீர்மரபினர் மற்றும் ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த இவ்வரசு செயல்படுத்தும் திட்டங்களைச் சிந்தாமல் சிதறாமல் கொண்டு சேர்க்க அரும்பாடு படவேண்டும்.

நாட்டு மக்களின் தேவையை, குறிப்பாக ஏழை எளியோர், நலிந்த பிரிவினர் ஆகியோருக்குத் தேவைப்படுவனவற்றைத் தேடித்தேடிக் கண்டு, அவற்றின் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி, செம்மையாகச் செயல்படுத்துவதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வருவது இந்த அரசு. திட்டங்களைத் தீட்டுவதிலும், அவற்றைச் செம்மையாக நிறைவேற்றுவதிலும், திட்டத்தின் பயன்கள் முழுமையாக மக்களைச் சென்றடைவதை உறுதி செய்து கொள்வதிலும் மாவட்ட ஆட்சித்தலைவர்களாகிய நீங்கள் மகத்தான பங்கு பணியாற்றி வருகிறீர்கள். சொன்னதைச் செய்து, செய்வதைச் சொல்லி தூய வழியில் தொடர்ந்து பணியாற்றுவதற்கு உங்கள் அனுபவங்களையும், ஆலோசனைகளையும் எந்த வித அச்சத்திற்கும் ஆட்படாமல் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

---

செய்முறைப் புத்தகமும் (Work Book) உருவாக்கப்பட வேண்டும் என்றும்,

★ இத்திட்டத்தினை செம்மையாக நடைமுறைப் படுத்துவதற்கும், பிரச்சினைகளை அறிந்து அவற்றை நீக்குவதற்காகவும் 3 மாதங்களுக்கு ஒரு முறை அனைத்து தனியார் கணினி நிறுவனங்களுடனும், எல்காட் நிறுவனத்துடன் இணைந்து ஒரு கூட்டத்தினை பள்ளிக் கல்வித் துறைச் செயலர் நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

★ அடிக்கடி தீக்கிரையாக்கும் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் (Prioritazation of fire prone slums).

★ கட்டுமானத்தில் பயனாளிகளை ஈடுபடுத்த வேண்டும்.

★ அடிப்படை கட்டுமானத்தை மட்டும் அரசு செய்துதர, மீதமுள்ள வசதிகளை பயனாளிகள் மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் குழுக்களை அமைத்து பொதுக்கழிப்பிடங்கள், சாலைகள், துப்புரவு போன்றவற்றை அவர்களாகவே பராமரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

– இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

★ ★ ★



தமிழ்க்கலை உயர்ந்ததாய் இருக்க வேண்டுமானால், கலைக்குக் காரணமான எண்ணங்களும் உயர்ந்தவையாய் இருக்க வேண்டும்.

— பாரதிதாசன்

**பிரச்சினை :**

திருநெல்வேலி மாவட்டம் சாம்பவர் வடகரை பேரூராட்சியில் உலக வங்கி உதவியுடன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டது. [2 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் 2 தொட்டிகள்] 1990–இல் நிறைவேற்றப் பட்ட பொழுது 1000 வீட்டு இணைப்புகள்கொடுக்கப்பட்டு நன்றாக இயங்கி வந்தது.

இந்நிலையில் 1997–இல் பதவியேற்ற பஞ்சாயத்து தலைவரும், உறுப்பினரும் சேர்ந்து சுமார் 60 இணைப்புகளை லஞ்சம் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு கொடுத்தார்கள். இதனால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது.

பஞ்சாயத்து நிர்வாகம், 1998–இல் ஏப்ரல் மாதம் 9வது வார்டு, 7வது வார்டு மற்றும் 8ம் வார்டில் ஒரு பகுதி ஆக சுமார் 200 இணைப்புகளுக்கு 1998 மே மாதத்தில் பழைய பாதுகாப்பற்ற நீர்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கினார்கள். அவ்வாறு இணைப்பு வழங்கக் கூடாது என பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தும், தங்களது முறைகேட்டை மறைக்க அந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த அக்டோபர் மாதம் 7, 8, 9 வார்டு பகுதியில் உள்ள சுமார் 500 மக்கள் வாந்தி, பேதி நோயினால் பாதிக்கப்பட்டார்கள். சுகாதாரத்துறை அலுவலர்கள் நன்முறையில் செயல்பட்டு நோய் பரவுவதைத் தடுத்துவிட்டார்கள்.

நாங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்தொட்டி மூலம் தான் இனிமேல் எங்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமெனச் சுகாதாரத்துறை அதிகாரிகளிடமும், பஞ்சாயத்து அலுவலர்களிடமும், வேண்டுதல் கடிதங்கள் கொடுத்தோம். அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது மீண்டும் பழைய பாதுகாப்பற்ற குடிநீர்த் தொட்டி மூலம் தான் குடிநீர் விநியோகம் செய்து வருகிறார்கள்.

இதனால் மீண்டும் வாந்தி–பேதி நோய் வருமோ என பொதுமக்கள் பீதியுடன் இருந்து வருகிறார்கள்.

அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்து உலக வங்கி உதவியுடன் செயல்பட்டு வரும் பாதுகாப்பான குடிநீர்த் தொட்டியுடன் எங்களுக்கும் இணைப்பு கொடுத்து, பொதுமக்களை வாந்தி–பேதி நோயிலிருந்து காப்பாற்றுமாறு தாழ்மையுடன் பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

*பொது மக்கள் சார்பாக ஏ, வேலாயுதம்,*
*சி.பி.எம். திருநெல்வேலி மாவட்டம்*

**தீர்வு :**

1. *சாம்பவர் வடகரை பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் மூலம் நல்ல முறையில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.*

2. *தலைவரும் உறுப்பினரும் சேர்ந்து 60 இணைப்புகள் லஞ்சம் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது பொய்யான தகவல் ஆகும். அப்படி இணைப்பு வழங்கவில்லை. முறையான குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

3. *வார்டு 9, வார்டு 7 மற்றும் 8ம் வார்டுகளுக்கு அலுவலகம் முன்பு இருக்கும் பாதுகாப்பு குடிநீர்த் தொட்டியிலிருந்து (டேங்கிலிருந்து) மூன்று வார்டுகளுக்கு இணைப்பு கொடுத்து, தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு இருந்தது. மேற்படி மூன்று வார்டுகளுக்கு தண்ணீர் விழாத காரணத்தால் 7வது வார்டு பொதுமக்கள் வேண்டுகோளுக்கு இணங்க 1996 முதல் 7வது வார்டுக்கும் 8, 9 வார்டு கவுன்சிலர் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோளின்படி 8வது வார்டு 9வது வார்டு பழைய பஞ்சாயத்து குடிநீர்த் தேக்கத்தொட்டி மூலம் 1998 முதல் குடிநீர் இணைப்புகளும், தண்ணீர் சப்ளையும் செய்து வருகிறோம்.*

4. *நீர்த் தேக்கத்தொட்டியில் மற்றும் கிணற்றில் மூடி போட்டு பாதுகாப்பு செய்யப்பட்டு லைனை ஓட்டை இல்லாமல் தண்ணீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அந்தப் பகுதிக்கு தினசரி 1.25 மணி நேரம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.*

*இப்போது 7, 8, 9 ஆகிய வார்டுகளில் குடிநீர் விநியோகம் நல்ல முறையில் பாதுகாப்புடன் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர்த் தேக்கத் தொட்டி மாதம்*

# எங்கள் ஊர் பிரச்சினை

ஒரு முறை பிளீச்சிங் பவுடர் போட்டுச் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் பேரூராட்சி, குடிநீர்த் தொட்டியிலும், கிணற்றிலும் மாதம் இருமுறை பிளீச்சிங் பவுடர்களை அளவுப்படி போட்டு வருகிறது. இதனால் பொது மக்களுக்கு சுத்தமான தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே சாம்பவர் வடகரை பேரூராட்சியில் வாந்தி–பேதி வர வாய்ப்பு இல்லை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சுகாதார ஆய்வாளர் அவர்களால் சுகாதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் நல்ல முறையில் சாம்பவர் வடகரை பேரூராட்சிப் பகுதியில் நடந்து வருவது கவனிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி. சுடலை முத்தையா, நிர்வாக அதிகாரி,
பேரூராட்சி, சாம்பவர் வடகரை,
திருநெல்வேலி மாவட்டம்.

★ ★ ★

**பிரச்சினை :**

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் தச்சூர் கிராமத்தில் கடந்த 3.7.98 அன்று நடந்த சாதிக் கலவரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பெரிதும் பழுதடைந்துள்ளது. இதனால் காலனி மக்கள் குடிநீருக்கு மிகவும் அவதிப்படுகின்றனர். வயல்வெளி பகுதியில் தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர். கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் கிடைத்தது. வாட்டர் டேங்கும், போர் போட்ட இடம் தாழ்த்தப்பட்டோர் பகுதியில் உள்ளது. அதனால் அவர்கள் தண்ணீர் விட மறுக்கின்றனர். இது குறித்து யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுகுறித்து பலமுறை மனு செய்தும் பயனில்லை. யாரும் கண்டு கொள்ளவில்லை. தங்கள் மூலமாக எங்கள் ஊர் காலனி பொது மக்களது தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா?

கிராம பொது மக்கள் சார்பாக,
எம். செல்வம், தச்சூர், திட்டக்குடி வட்டம்
கடலூர் மாவட்டம்

★ ★ ★

**தீர்வு :**

மங்களூர் ஊராட்சி ஒன்றியம் தச்சூர் கிராமத்தில் 3.7.98 அன்று சாதிக்கலவரம் நடைபெற்றபோது, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மின்மோட்டார் பழுதடைந்திருந்ததை தற்சமயம் பழுதுநீக்கம் செய்து, தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று உள்ளது. இதில் 92 குடும்பங்களுக்கு தண்ணீர் இறைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

மார்க் 2 கைப்பம்பு 5 உள்ளது. இதில் 3 நல்ல முறையில் இயங்கி வருகிறது. பொது உபயோகத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து தண்ணீர் கட்டைகளின் எண்ணிக்கை ஆதிதிராவிட காலனியில் 14 இடங்களிலும் கிராமத்தில் 13 இடங்களிலும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது தண்ணீர்ப் பிரச்சினை ஏதும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. பொன்னுசாமி, கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
மங்களூர் ஊராட்சி ஒன்றியம். கடலூர் மாவட்டம்

★ ★ ★

**பிரச்சினை :**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், நெல்லிக் குப்பம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேல்பட்டாம் பாக்கம் பேரூராட்சியின் 6வது வார்டு கடலூர்–சித்தூர் மெயின் ரோட்டின் ஓரத்தில் குடியிருப்போர் வெளியேற்றும் கழிவுநீர், புதியதாகப் போடப்பட்டுள்ள தார் சாலைகளில் வழிந்தும், தேங்கியும் உள்ள நிலையில் பொதுமக்கள் பெரிதும் சுகாதாரக் கேட்டிற்கு உள்ளாவதாலும், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவதாலும், அரசு இந்தப் பகுதியைக் கவனத்தில் கொண்டு உடனடியாக வடிகால் அமைக்க ஆவன செய்திடுமாறு தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்கள் சார்பாக, என்.ஜெயக்குமார், எம்.சி.,
ஊராட்சி ஒன்றியத் தலைவர்
பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்.

**தீர்வு :**

மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி மெயின் ரோட்டில் மழை காலங்களில் மழைநீர் தேங்கி ரோடு வீணாவதால், இதனை தடுப்பதற்காக நெடுஞ்சாலைத் துறையினரால் ஒரு வடிகால் வாய்க்கால் கட்டப்பட்டது. இந்த வாய்க்கால் மீது மேல்பட்டாம்பாக்கம் முஸ்லீம் தெரு பிரியும் இடத்தில் பாலம் கட்டுவதற்குப் பதில் துளையிடப்பட்ட கருங்கல் பலகை போட்டு மூடிவிட்டனர். இதன் மீது பாரமான வாகனங்கள் சென்ற போது இந்த கருங்கல் பலகைகள் உடைந்து தண்ணீர் வடிவதற்கு வழியில்லாத நிலையில் வாய்கால் தூர்ந்து விட்டது. இதன் காரணமாக மழைநீரும், கழிவுநீரும் வடிவதற்கு வழியின்றி தேங்கி நின்று ரோட்டின் மீது வழிந்து, தேங்க ஆரம்பித்து விட்டது. இதனை தற்காலிகமாக நிவர்த்தி செய்யும் பொருட்டு, இப்பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம், வாய்க்காலில் இருந்த இடர்பாடுகளை அகற்றிச் சீர்செய்து, பாலம் அமைக்கப்பட்டு, தண்ணீர் சாலையில் வழியாமலும் தேங்காமலும் இருக்கின்ற வகையிலே வடிகால் வசதி செய்யப்பட்டு விட்டது.

மேலும் மழைகாலங்களில் ஏற்படுகின்ற உவரி நீர் தேங்காமல் இருக்க நிரந்தர ஏற்பாடாக இந்த வடிகால் வாய்க்காலில் நீர் தங்கு தடையின்றி வழிந்தோடுவதற்கு வசதியாக, இந்த வாய்க்காலில் இருந்து, தொடர்ச்சியாக முஸ்லீம் தெருவில் வடிகால் வாய்க்கால் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, இப்பணி முடிக்கப்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ச. இரா. பாட்சா, செயல் அலுவலர்
பேரூராட்சி மேல்பட்டாம்பாக்கம்
கடலூர் மாவட்டம்.

★ ★ ★

**பிரச்சினை :**

கல்லிங்கரை சிவன் கோயிலில் இருந்து கோளூர் அம்பளவயல் செல்லும் நடைப்பாதையில் ஒரு பாலம் உள்ளது. பல காலமாக உபயோகித்து வரும் இந்த சாலையில் உள்ள இப்பாலம் தற்காலிக மூங்கில் பாலமாகும். ஆதலால் 98-99 பட்ஜெட்டில் மூங்கில் பாலத்தை மாற்றி உறுதியான புதுப்பாலம் கட்டித்தர அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், இதுவரையிலும் எந்த வேலையும் ஆரம்பிக்கவில்லை. மழைக்காலம் நெருங்கி வருவதால் இப்பாதையில் செல்லும் ஊர்மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆதலால் மதிப்பிற்குரிய தாங்கள், பஞ்சாயத்து மூலமாக பாலம்கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகப்பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*5வது வார்டு ஊர் மக்கள்*
*கூடலூரர் வட்டம், தேவர் சோலை பஞ்சாயத்து*
*நீலகிரி மாவட்டம்*

**தீர்வு :**

*நீலகிரி மாவட்டம் கல்லிங்கரையிலிருந்து கோவிலுக்குச் செல்லும் நடைப்பாதையில் நடுவே பாலம் கட்ட 1998-99ஆம் ஆண்டில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைப்பாலம் கட்ட மதிப்பீடு பெற்று, டெண்டர் பெறப்பட்டு, திரு கே.முகமதுகுட்டி ஒப்பந்ததாரருக்கு வேலை ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மழை நீரால் ஆற்றில் வெள்ளம் அதிகமாக உள்ளதால் வேலை ஆரம்பிக்கக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது வேலை ஆரம்பிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*பொ.ஆனந்ததாசு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,*
*உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.*

* * *

**பிரச்சினை :**

திருவள்ளூர் மாவட்டம், சென்றாயன்பாளையம் கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் நடந்த குடிதண்ணீர் பைப்புலைன், கிணறு வேலையும் முடிந்து 8 மாதம் ஆகிறது. மின் இணைப்பு கொடுக்காததால், இன்னும் குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறோம். ஆகையால் தாங்கள் தயவு செய்து உடன் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படி மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*தலைவர், சென்றாயன்பாளையம் ஊராட்சி*
*பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்*

**தீர்வு :**

*திருவள்ளூர் மாவட்டம், சென்றாயன்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட கீரின்வேல் நத்தம் கிராமத்தில் உள்ள மேல்நிலை குடிநீர் தொட்டிற்கு மின் இணைப்புவேண்டி டிசம்பர் '98-இல் மனு பதிவு செய்யப்பட்டு, புதிய மின் மாற்றிஅமைக்க வேண்டி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மேற்பார்வை பொறியாளர், காஞ்சிபுரம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.*

*அதன் மீது பணி ஆணை வழங்கி, தேவையான தளவாடங்கள் ஒதுக்கி, விரிவாக்கப் பணிகள் முடிக்கப்பட்டு, குடிநீர்த் தொட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*நி.நா.கிருஷ்ணன், செயற்பொறியாளர்/இ&ப, திருவள்ளூர்.*

* * *

**பிரச்சினை :**

எங்கள் ஊர் ஏரி சுமார் 2000 ஏக்கர் நிலப்பரப்பு உடைய ஏரியாகும். இந்த ஏரியில் மூன்று மதகுகள் உள்ளன. மூன்று மதகுகளும் பழுது அடைந்துள்ளது. அதனைச் சரிப்படுத்தித் தருமாறு கோரியிருந்தும் சரிப்படுத்தவில்லை. கால்வாய்களைத் தூர்வாரி இரு கரைகளையும் கல் கட்டிடத்தில் கட்டித்தரத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*பொது மக்கள் சார்பாக வி.சபாபதி,*
*ஊராட்சி மன்ற உபதலைவர் பெருங்கட்டூர்,*
*செய்யார் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்*

**தீர்வு :**

*செய்யார் வட்டம், வெம்பாக்கம் ஒன்றியம் பெருங்கட்டூர் ஏரியில் மூன்று மதகுகள் உள்ளது. இந்த ஏரியின் மொத்த ஆயக்கட்டு 523 ஏக்கர் ஆகும். ஏரிக்கரை நீளம் 1590மீ. இந்த ஏரிக்கு வடமணப்பாக்கம் ஏரி வழிந்தோடியிலிருந்து கால்வாய் மூலம் தண்ணீர் வருகிறது.*

*இந்த ஏரிக்கு மராமத்துச் செய்ய உலக வங்கி நிதியுதவியுடன் இப்பிரிவில் நடைபெறும்* ``Rehabilitation of tank feeder channels' tank bunds, sluices and construction of bypass channels under Dusi Mamandur Channel'' *(மதிப்பீடு ரூ.80 இலட்சம்) மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. பெருங்கட்டூர் ஏரியின் கரைபலப்படுத்தும் பணி மற்றும் மதகு எண்.2 மீளக்கட்டும் பணி ஆகியவை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏரிக்கரை பலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. மதகு எண்.2 பள்ள மதகு ஆகையால், தண்ணீர் வற்றவில்லை. எனவே மதகு எண்.2க்கு பதில் மதகு எண்.3 மீளக்கட்டப்பட்டது. மேலும் மதகு எண்.1 சுமாரான நிலையில் உள்ளது. எனவே ஏரியில் தண்ணீர் வற்றிய உடன் மதகு எண்.2 மற்றும் வரத்துக்கால்வாய்க்கு வரும் நிதியாண்டில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உடன் பழுதுபார்ப்புப்பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*ஆ.சண்முகம்., செயற்பொறியாளர், பொ.ப.து.,*
*கீழ் பாலார் வடிநிலக்கோட்டம், காஞ்சிபுரம்*

* * *

# உழுவோர் உயர

நமது நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படை ஆதாரமாகத் திகழ்கின்ற வேளாண்மை சிறக்க வேண்டும்; அதோடு வேளாண் பெருமக்களின் வாழ்க்கை வசதியும் உயரவேண்டுமென்பதில் தனியானதொரு ஆர்வத்தையும் அக்கறையையும் முதலமைச்சர் கலைஞர் காட்டி வருகிறார். மேலும் காய்கறி, கனிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிட்டவேண்டும் என்பதோடு, பொதுமக்களுக்கும் குறைந்த விலையில் கிடைத்திட வேண்டுமென்ற அடிப்படையில், விவசாயிகளும் நுகர்வோரும் மகிழும் வகையில் ஒரு சமரசத் திட்டமாக உருவாக்கப்பட்டதுதான் 'உழவர் சந்தை' எனும் உன்னதத் திட்டமாகும்.

# நுகர்வோர் மகிழ

முதல்வர் கலைஞர் அவர்களால் 14-11-99 அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டம் சில நாட்களுக்குள்ளேயே ஒரு மகத்தான வெற்றியை பெற்றுவரும் அருமையான திட்டமாக திகழ்கிறது.

சிறப்புமிக்க இந்த உழவர் சந்தைகள் 14-12-99 அன்று திருவண்ணாமலையிலும், 15-12-99 அன்று திருத்துறைப்பூண்டியிலும், 16-12-99 அன்று தஞ்சாவூரிலும் மற்றும் திருச்சி மாவட்டம் அண்ணா நகரிலும், 21-12-99 அன்று சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டை, ஆத்தூர் மற்றும் சூரமங்கலத்திலும், 30-12-99 அன்று திண்டுக்கல்லிலும், தேனியிலும் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. இந்த விழாக்களில் முதலமைச்சர் ஆற்றிய உரைகளின் சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

### திருவண்ணாமலை உழவர் சந்தை

''17-3-1999 அன்று தமிழக சட்டப் பேரவையில் நான் படித்த நிதிநிலை அறிக்கையில் உழவர் சந்தை தமிழகத்திலே பல பகுதிகளில் அமைக்கப் படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தேன். அதனையொட்டி 25-10-1999 அன்று உழவர் சந்தைகள் வெகுவிரைவில் தமிழகத்தில் எல்லா நகரங்களிலும் உருவாகும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி 14-11-1999 அன்று மதுரை மாநகரத்தில் உழவர் சந்தை தொடங்கி வைக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் பரவலாகப் பாராட்டுகளை அந்த ஒரேயொரு உழவர் சந்தை பெற்றிருக்கின்றது.

இன்றைக்கு இங்கே தொடங்கப்பட்டுள்ள இந்தச் சந்தை மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 60 கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே வெண்டைக்காய், கருணைக் கிழங்கு, சேம்பு, கத்தரிக்காய், தக்காளி, மிளகாய், கீரை வகைகள், முள்ளங்கி, புடலங்காய், பாகற்காய், பீர்க்கங்காய், கொத்தவரை, வாழைக்காய், புதினா, கொத்தமல்லி ஆகிய விளைபொருட்கள் இந்த உழவர் சந்தைக்கு வருகின்றன. பெரும்பான்மையாக வருகின்ற விளை பொருட்களை மாத்திரம் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலையைச் சுற்றி அமைந்துள்ள அரும்பாக்கம், கோணலூர், உதயசூரியபுரம்,

# உழவர் சந்தைகள்




உடையானந்தல், தேவனந்தல், ஏந்தல், சம்பந்தனூர், சின்ன காங்கேயனூர், நானாபீனா தேனேந்தல், இசுக்கழிக் காட்டேரி, நல்லான் பிள்ளை பெற்றாள், செல்லங்குப்பம், தென்மாத்தூர், மேக்களூர், வழுதலங்குணம், காட்டுமலையனூர், காணலாபாடி, ஆராஞ்சி, துர்க்கை, நம்மியந்தல், ஊசாம்பாடி, சோமாசிபாடி, நெடுங்காம பூண்டி, இனாம் காரியந்தல், வெங்காய வேலூர், குமரகுடி, கீழ்கச்சிராப்பட்டு உட்பட ஏறத்தாழ 40 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், இந்த உழவர் சந்தை மூலம் பயன்பெறக்கூடும் என்று நான் நம்புகிறேன்''.

### திருத்துறைப்பூண்டி உழவர் சந்தை

''உழவர்களுக்காக - விவசாயப் பெருங்குடி மக்களுக்காக என்றென்றும் கடமைகளை ஆற்ற வேண்டுமென்று கருதுகின்றவன். அப்படி கருதிய காரணத்தால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு என்னுடைய ஆட்சியிலே விவசாயிகள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு இலவச மின்சாரம் திட்டத்தை அறிவித்து அதைச் செயல்படுத்தி வருகிறேன் என்பதையும் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

அதனுடைய மற்றொரு கட்டம்தான் இன்றைய தினம் பல நேரங்களில் உங்களுக்கு ஏற்பட்ட இயற்கைச் சீற்ற விபத்துக்கள் - ஆபத்துக்கள். இவைகளையெல்லாம் கடப்பதற்கும் நிவாரணம் அளிப்பதற்கும் இயன்ற அளவிற்கு சட்டத்திற்குட்பட்டு எங்களால் முடிந்த அளவுக்கு உங்களுக்கு உதவிகளைச் செய்திருக்கிறோம். அதையும் நீங்கள் அறிவீர்கள். உதவிகளை செய்ய வேண்டுமென்று யாரும் எனக்கு வேண்டுகோள் விடுத்தாலும் அப்படி வேண்டுகோள் விடுப்பவர்கள் யாராக இருந்தாலும் - எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உடனடியாக அந்த உதவிகளை எல்லாம் அளித்த அந்தக் கடமையை நிறைவேற்றிய பெருமையும் இந்த ஆட்சிக்கு உண்டு.

அந்தப் பட்டியலிலே ஒன்றுதான் உழவர் சந்தை. உழவர்கள் விளைவிக்கின்ற காய்கறிகள் - கனிகளுக்கு உரிய விலை இடைத்தரகர்களால் கிடைக்காமல் போகிறது. இடைத்தரகர்கள்



கமிஷன் பெற்று அவர்கள் இடையிலே வியாபாரிகளுக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை அவர்கள் பறித்துக் கொள்கிறார்கள். பொதுமக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. எனவேதான் உழவர்கள் விளைவித்த பொருளை உழவர்களே நேரடியாகக் கொண்டு வந்து பொதுமக்களுக்கு விற்று அந்தப் பயனை அடைய வேண்டுமென்பதற்காகத்தான் உழவர் சந்தை. விற்போரும் உழவர், வாங்குவோர் நுகர்வோர் அவர்கள் இருவருக்கும் இடையிலேதான் வியாபாரம் இன்றைக்கு நடைபெறுகிறது''.

**தஞ்சாவூர் உழவர் சந்தை**

இந்த உழவர் சந்தை ஏறத்தாழ நாற்பது கிலோ மீட்டர் சுற்றளவுக்குள்ள கிராமங்களையெல்லாம் இணைக்கத்தக்க வகையில் அந்த கிராமத்து விவசாயிகளெல்லாம் பயன்பெறத்தக்க அளவில் இங்கே உருவாகியிருக்கிறது.

விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருளை தானே கொண்டுவந்து விற்றால் அதற்குரிய நியாயமான விலையை, உற்பத்திக்கான விலையையும் தனக்குக் கிடைக்கவேண்டிய இலாபத்தையும் சேர்த்து ஆதாயத்தைப் பெற முடியும். அதே நேரத்தில் அந்த விலை கட்டுபடியான விலையாகவும் பொதுமக்களுக்கு - நுகர்வோருக்கு கிடைக்கக்கூடிய வகையிலே அது அமையக்கூடும். அதை நிரந்தரமானதாகவும் ஆனால் அன்றாடம் ஏற்படுகின்ற விலை மாற்றத்திற்கேற்ப வசதியானதாகவும் மாற்றி யமைக்கக்கூடிய வகையில் ஒவ்வொரு உழவர் சந்தையிலும் ஒரு குழு அமைக்கப்படுகிறது. அந்தக் குழுதான் ஒவ்வொரு நாளும் காய்கறியின் விலையை நிர்ணயம் செய்கிறது.

இன்னொன்று, விற்பனைக்கு கொண்டு வருகின்ற காய்கறிகளை வைத்து விற்பனை செய்கின்ற இடம் அரசாங்கத்தால் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. வாடகை இல்லாமல் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் யார் முன்னால் வருகிறார்களோ அவர்களுக்கு இடங்களில் முன்னுரிமை தரப்படும். ஏழாவதாக வந்துவிட்டு நான் முதலிடத்திலே கடை போடுவேன் என்று சொல்ல முடியாது. யார் முந்திக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கு வரிசைப்படி கடைகள் வைப்பதற்கு ஒவ்வொரு நாளும் உரிமை வழங்கப்படுகிறது. விவசாயிகள் தான் வியாபாரிகள். இப்படிச் சொல்வதால் வியாபாரிகளுக்கு நான் விரோதமாக பேசுவதாக யாரும் தவறாகக் கருதக்கூடாது. வியாபாரிகள் இருக்கவேண்டிய இடத்திலே வியாபாரிகள் இருக்க வேண்டும். விவசாயிகள் இருக்க வேண்டிய இடத்திலே விவசாயிகள் இருக்க வேண்டும்.



ஏனெனில் வியாபாரிகள் விற்கின்ற பொருட்கள் அன்றாடம் விலை மாறக்கூடிய பொருட்கள் அல்ல, கடுகோ, மிளகோ, வெந்தயமோ, உளுந்தோ இவைகளை வியாபாரம் செய்கின்ற வர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பதற்கான அத்தனை உரிமையும் படைத்தவர்கள். விவசாயிகள் அப்படி அல்ல. வாடிவிடக்கூடிய பொருட்களை வைத்து விற்கக்கூடிய விவசாயிகள் அவர்களே நிர்ணயித்துக் கொள்கின்ற அந்த விலையின்படி தான் விற்க வேண்டும். இதற்கு ஒரு ஏற்பாடு தக்க முறையிலே மாவட்ட ஆட்சித்தலைவரின் மேற்பார்வையிலும் மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகளின் மேற்பார்வையிலும் செய்யப் பட்டிருக்கின்றது.

கடைகளுக்கு வாடகை கிடையாது. அது மாத்திரமல்ல, அந்த கடைக்கு கொண்டுவந்து செய்கின்றவர்கள் யாரும் அந்தச் சுமைகளை இறக்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அது உழவர்களுக்கு ஏற்படக்கூடிய மற்றொரு உரிமை ஆகும்''.

### திருச்சி உழவர் சந்தை

''உழவர் சந்தையைப் பொருத்தவரையில் திருச்சி நகரில் இருக்கின்ற பல பகுதிகளில் வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், புறநகர்களில் வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், ஒரு 20 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கள் விளைவித்த காய்கறிகளை கொண்டுவந்து, சொல்வார்களே சுடச்சுட என்று இது சூடாக இல்லாவிட்டாலும் அதே பசுமையோடு, அதே குளிர்ச்சியோடு



விற்கின்ற காய்கறிகள் இருக்கின்றதே அதை ஏற்றிவரும் பொழுது பேருந்துகளில் அதற்கு லக்கேஜ் வசூலிக்கப்பட மாட்டாது. பேருந்துகளில் இலவசமாகவே அவைகளை கொண்டு வரலாம். காய்கறிகளை மாத்திரம்தான் கொண்டு வரவேண்டும். மற்றொன்று முக்கியம், காய்கறிகளை கடைத் தெருவிலே கொண்டுவந்து இறக்கும்பொழுது விவசாயிகளே இறக்கிக் கொள்ளலாம். நான் இறக்குவேன் என்று போட்டி போட்டுக்கொண்டு அங்கே கூலித் தகராறு இப்பொழுதுதான் பறிக்கப்பட்ட பச்சைப் பசேல் என்று இருக்கின்ற காய்கறிகள் என்று சென்று வாங்குகின்ற தாய்மார்கள் பாராட்ட, மகிழக்கூடிய அளவிற்கு அந்தக் காய்கறிகள் உழவர் சந்தைக்கு ஒவ்வொரு நாளும் வரும். காலை 5 மணி 6 மணியிலிருந்து மாலை 7 மணி வரையில் இந்த உழவர் சந்தைகள் திறந்திருக்கும். அந்தக் கடைகளை வைப்பதற்கு உழவர்களுக்கு அந்த இடம் இனாமாக வழங்கப்படும். ஒவ்வொரு நாளும் வருகின்ற உழவர்கள் வருகின்ற நேரத்தைப்



பொருத்து, வசதியைப் பொருத்து அவர்களுக்கு அந்தக் கடைகள் எல்லாம் தரப்படும்.

அதுமாத்திரம் அல்ல. ஒவ்வொரு நாளும் விலை மாறும். தங்க விலை வெள்ளி விலையே மாறுகிறது. காய்கறி விலையா மாறாது. ஆகவே அப்படி விலை மாறும்போது எந்தெந்த காய்கறி விலை இன்றைக்கு என்ன விலை என்ற அந்த பட்டியலை ஒரு குழு அமர்ந்து தயாரிக்கும். அந்தக் குழு தயாரிக்கின்ற விலைப் பட்டியல் பொதுவான இடத்தில் மாட்டிவைக்கப்படும். ஒவ்வொரு கடை முகப்பிலும் அந்தப் பட்டியல் இருக்கும். வாங்கிச் செல்கின்றவர்களுக்கு சுலபம், வாய்ப்பேச்சே இல்லாமல் அந்தப் பட்டியலை பார்த்துவிட்டு கத்தரிக்காய் ஒரு கிலோ வேண்டுமென்கிறவர்கள் அதற்குரிய பணத்தை கடையிலே கொடுக்கலாம். அந்த உழவர் பெருமக்களும் அந்தப் பணத்தை பெற்றுக்கொண்டு காய்கறிகளை அவர்களுக்கு நிறுத்துக் கொடுத்து பாக்கிச் சில்லறையும் கொடுத்து வழியனுப்பி வைக்கலாம். இருவருடைய முகத்திலும் புன்னகை மாத்திரமே ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்கின்ற அளவிற்கு இருக்கும். அவர்களுடைய முகத்திலே மகிழ்ச்சி ததும்பும். அந்த மகிழ்ச்சியைக் கண்டு நான் மகிழ்ச்சியடைவேன். உழவர்களுடைய மகிழ்ச்சியிலேதான் இந்த உலகமே வாழ்கிறது என்ற திருவள்ளுவரின் குறள் உழவர் சந்தையில் இனிமேல் ஒவ்வொரு நாளும் மெய்ப்பிக்கப்படும்''.

### அம்மாப்பேட்டை உழவர் சந்தை

''அம்மாப்பேட்டை உழவர் சந்தையிலே காமராஜர் நகர் நெசவாளர் காலனியில் இன்றைக்கு வந்துள்ள மொத்த காய்கறி விபரம், அதனுடைய விலை விபரம் இதே காய்கறிகள் வெளிச் சந்தையிலே என்ன விலைக்கு விற்கிறது என்ற வேறுபாடுகளை நீங்கள் உணர்ந்து கொண்டால் இந்த உழவர் சந்தையின் பயன் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இங்கே இன்றைக்கு 1440 கிலோ தக்காளி வந்திருக்கின்றது. உழவர் சந்தையிலே இந்தத் தக்காளியின் நிர்ணய விலை கிலோ 6 ரூபாய். வெளிச்சந்தையிலே இதே தக்காளி ஒரு கிலோ ரூ.8.75,



கத்தரிக்காய் இந்த உழவர் சந்தையிலே ஒரு கிலோ இன்றைய விலை 9 ரூபாய். வெளிச்சந்தையிலே ரூ.11.25.

அதைப்போலவே வெண்டைக்காய் உழவர் சந்தையிலே ஒரு கிலோ 9 ரூபாய். வெளிச்சந்தையிலே 11 ரூபாய்.

சுரைக்காய் உழவர் சந்தையிலே விலை 4 ரூபாய். வெளிச்சந்தையிலே விலை 8 ரூபாய்.

பூசணிக்காய் உழவர் சந்தையிலே விலை 5 ரூபாய். வெளிச்சந்தையிலே இன்றைய விலை 11 ரூபாய்.

அவரைக்காய் உழவர் சந்தையிலே விலை 9 ரூபாய். வெளிச்சந்தையிலே விலை 10 ரூபாய்.



பப்பாளி உழவர் சந்தையில் 3 ரூபாய் 60 காசு. வெளிச்சந்தையில் 6 ரூபாய். கொய்யா உழவர் சந்தையிலே 50 காசு. வெளிச்சந்தையில் ஒரு ரூபாய்.

எலுமிச்சை உழவர் சந்தையில் 15 காசு. வெளிச்சந்தையில் ஒரு ரூபாய்.



பச்சை மிளகாய் உழவர் சந்தையிலே விலை 12 ரூபாய் 60 காசு. வெளிமார்க்கெட் விலை ஒரு கிலோ 15 ரூபாய்.

வெங்காயம் உழவர் சந்தையிலே விலை 8 ரூபாய் 60 காசு. வெளி மார்க்கெட்டிலே விலை 10 ரூபாய்.

அதைப் போலவே பழவகைகளை எடுத்துக் கொண்டால், வாழைப்பழம் உழவர் சந்தையில் 1 ரூபாய். வெளிச்சந்தையில் 1 ரூபாய் 50 காசு.

வாழை இலை உழவர் சந்தையிலே 75 காசு. வெளியில் ஒரு ரூபாய்.

இப்படி விலையிலேகூட ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைக் காணுகிறோம். இதில் முக்கியமாக தான் உற்பத்தி செய்த பொருள்களுக்கு தானே நேரடியாக பொதுமக்களிடத்திலே அதற்குரிய விலையைப் பெறுகின்ற ஒரு மாட்சிமை பொருந்திய திட்டமாக இந்தத் திட்டம் இன்றைக்கு அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. பல வசதிகள் இந்த சந்தைக்குள்ளே



இன்றைக்கு செய்யப்பட்டிருக்கின்றன. அவை களை எல்லாம் நீங்கள் நேரடியாகவே இந்தச் சந்தையைப் பயன்படுத்துகின்றவர்கள் வியாபாரிகள் ஆனாலும், விவசாயிகள் ஆனாலும் அல்லது பொதுமக்களானாலும் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

இதுவரையிலே ஆரம்பிக்கப்பட்டுள்ள உழவர் சந்தைகள்; மதுரையிலே தொடங்கி கடந்த வாரம் திருச்சி வரையிலே 5 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டுள்ளன. இன்றைக்கு சேலத்தில் மாத்திரம் மூன்று உழவர் சந்தைகள் தொடங்கப் படுகின்றன.

ஒவ்வொரு உழவர் சந்தையும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக்கொண்டு வியாபாரத்தில் அதிகமாக இன்றைக்கு விற்பனையாகிக் கொண்டிருக்கின்ற காட்சியை நான் காண்கிறேன்.



இதற்கு பொதுமக்கள் ஆதரவு ஏராளமாக உள்ளது. இதிலேயும் சிலர் அரசியல் நடத்தப் பார்க்கின்றார்கள். வேண்டாம், இது பொதுமக்கள் பிரச்சினை. உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்று கவலைப்படுகின்ற உழவனுடைய பிரச்சினை.

*'ஓதுவாரெல்லாம் உழுவார் தலைக் கடையில்'*

*'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'*

- என்று வள்ளுவர் உழவர்களுக்காகப் பாடினார். அந்த வள்ளுவருக்கு சவால் விடுகின்ற அளவிற்கு, இதை யாரும் அரசியலாக ஆக்காதீர்கள். குறைகள் இருந்தால் சொல்லுங்கள். இந்தக் கடையிலே ஒரு பத்து பைசா அதிகமாக விற்றார்கள். வெளிச்சந்தையை விட உள்ளே 10 காசு அதிகமாக விற்கப்படுகிறது என்றால் அதை சுட்டிக் காட்டுங்கள். உடனடியாக அங்கே இருக்கின்ற குழுவே அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கும். அதிகாரிகள் இருக்கிறார்கள். தக்க நடவடிக்கை எடுப்பார்கள். அதையும் மிஞ்சினால் அமைச்சர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவீர்களேயானால் உடனடியாக அத்தகைய தவறுகள் தவிர்க்கப்படும் என்பதை நான் எடுத்துக் காட்டி தயவுசெய்து இதை யாரும்

அரசியலாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்''.

**ஆத்தூர் உழவர் சந்தை**

''இந்த உழவர் சந்தைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை நீங்கள் ஏடுகள் மூலமாகக் கண்டிருப்பீர்கள். உழவர்கள் வியாபாரிகளிடத்திலே அவர்களை இடைத்தரகர்களாகக் கொண்டு தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை - காய்கறி, கனி, பூ ஆகியவற்றை விற்பனை செய்யாமல் தாங்களே சந்தைக்குக் கொண்டு வந்து விற்கின்ற முறைதான் இந்த உழவர் சந்தையின் மூலாதாரமான திட்டமாகும். ஒவ்வொரு சந்தைக்கும் அந்தப் பகுதியிலே உள்ள பயிரிடும் விவசாயிகளை தேர்வு செய்து அவர்களுக்கு புகைப்படத்தோடு கூடிய அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. அடையாள அட்டையிலே சம்பந்தப் பட்டுள்ள விவசாயிக்குப் பதிலாக சில சமயம் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை எடுத்துவர ஏதுவாக அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் புகைப்படங்களும் அந்த அடையாள அட்டையிலே அச்சிடப்பட்டிருக்கிறது. அடையாள அட்டையோடு விவசாயிகள் கொண்டு வரும் காய்கறிகள், பழங்களுக்கு பேருந்துகளில் லக்கேஜ் கட்டணம் கிடையாது.



அது மாத்திரமல்ல; இங்கே கடை வைக்கின்ற இடங்களுக்கு வாடகை கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. கேட்கவும் மாட்டார்கள்''.

**சூரமங்கலம் உழவர் சந்தை**

''இந்த உழவர் சந்தையில் வியாபாரம் செய்ய வருபவர்களுக்கு அடையாள அட்டை தரப்படுகிறது. அந்த அடையாள அட்டை இருந்தால்தான் அவர்கள் இந்த சந்தைக்குள் நுழைந்து வியாபாரம் செய்ய முடியும். ஒவ்வொரு நாளும் அவர்கள் வரும்போது யார் முதலில் வந்தார்களோ அவர்களுக்குத்தான் முதலிடம் தரப்படும். அவர்கள் கொண்டு வருகின்ற காய்கறிகளுக்கு பேருந்துகளில் கட்டணம் கிடையாது. அவர்கள் வருவதற்குத்தான் டிக்கெட் கட்டணம் வசூலிக்கப்படுமே தவிர, பேருந்துகளில் கொண்டு வருகின்ற காய்கறி லக்கேஜ் கட்டணம் கிடையாது. அது மாத்திரமல்ல; இங்கு விற்பனை செய்கிற இடத்திற்கு வாடகை கிடையாது. சுமையை தூக்குவதற்கு யாரும் ஆள் வரக்கூடாது. அவர்களே சுமையைத் தூக்கி 'நமக்கு நாமே' இங்கே செயல் படுத்தவேண்டும். வேறு யாரும் வந்து நான் தான் சுமையை தூக்குவேன் என்று சொல்வதற்கு முடியாது.

இப்படி இவ்வளவு வசதிகளும், உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டு இந்த உழவர் சந்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை மேலும் வளர்க்க நீங்கள் உங்களுடைய அன்பான ஆதரவைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உழவர் சந்தை மக்களுடைய சந்தை- பொதுமக்களுடைய சந்தை-உழவர் பெருங்குடி மக்களின் சந்தை. இது யாருக்கும் சொந்தமான ஒரு தனி இடம் அல்ல. இது பொது இடம். ஆனால் பொது இடம் என்றால் அதற்காக எல்லா உரிமைகளையும் யாரும் எடுத்துக் கொள்ள முடியாது. தேவையான உரிமைகளை, நல்ல உரிமைகளை, அனுமதிக்கப்பட்ட உரிமைகளை தாராளமாக எடுத்துக் கொண்டு உழவர் சந்தையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு நடைபோட வேண்டுமென்று உழவர் பெருமக்களையும், பொதுமக்களையும் கேட்டுக் கொள்கிறேன்''.

### திண்டுக்கல் உழவர் சந்தை

''இந்தத் திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் இவ்வளவு சிறப்போடு தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேறு சில மாநிலங்களில் 'Farmers Market' என்ற பெயரால் கடைத்தெருவோடு கடைத்தெருவாக, வீதிகளின் நடைபாதைகளில் உழவர்கள் கடைபோட்டு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கேதான் உழவர்களுக்கென்று எல்லா வசதிகளோடும் கூடிய இந்தச் சந்தை அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சந்தைக்கு 61 சென்ட் பரப்பளவிலே இடம் தரப்பட்டு, பதினோரு இலட்ச ரூபாய் கட்டுமான மதிப்பீட்டில் 80 கடைகள் கட்டப்பட்டுள்ளன. இந்த உழவர் சந்தைக்கு திண்டுக்கல், வேடசந்தூர், நத்தம், நிலக்கோட்டை, பழனி, கொடைக்கானல் ஆகிய 233 இடங்களிலிருந்து 390 உழவர்கள் தங்களது காய்கறிகள், பழங்கள், கீரைகள் போன்றவைகளை கொண்டு வந்து விற்க ஆயிரம் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சந்தையில் நான் முதலில் சொன்னதைப்போல 80 கடைகள், அலுவலகக் கட்டிடம், ஓய்வறை, வாகனம் நிறுத்தும் இடம், சிற்றுண்டிச் சாலை, கட்டப்படவிருக்கின்ற புறக்காவல் நிலையம், தகவல் நிலையம், கழிப்பறைகள் ஆகிய அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

எந்தவொரு நல்ல காரியத்தைப் பற்றியும் விமர்சனங்கள் வருவதுண்டு. விமர்சனங்களுக்கு பயந்து நல்ல காரியங்களை நிறுத்திவிடக்கூடாது. நிறுத்தினால் சந்தைக்கு மாடு விற்கச் சென்றவன் கதையாக ஆகிவிடும். மாடு ஒன்றை ஓட்டிக் கொண்டு சந்தைக்கு தகப்பனும் மகனும் சென்றார்கள். இரண்டு பேரும் சந்தைக்குச் செல்லும்போது வழியிலே போனவன் ஒருவன் பார்த்து ''ஏப்பா, இரண்டு பேரும் நடந்து போறீங்க! அந்த மாட்டில் ஏறிப்போகக் கூடாதா'' என்றான். உடனே பையனைத் தூக்கி மாட்டுல உட்கார வைத்து அப்பன் மாட்டை ஓட்டிச் சென்றான். இன்னொருத்தன் வழியில் பார்த்தான். ''சின்னப்பையனுக்கு எவ்வளவு திமிரு அப்பனை நடக்கவிட்டுட்டு இவன் ஏறிப் போறானே'' அப்படி என்றான். உடனே பையன் ''அப்பா, அப்பா எனக்கு கெட்ட பேரு வருது உன்னால! நீயும் ஏறிக்கோ'' என்றான். உடனே அப்பனும் ஏறிக் கொண்டான். இரண்டு பேரும் ஏறிச் செல்லும்போது இன்னொருத்தன் சொன்னான் ''இரண்டு பேரையும் இந்த மாடு தாங்குமா? என்னடா அக்கிரமம். உங்களுக்கு கொஞ்சம் கூட ஜீவகாருண்யம் இல்லையா'' என்றான். இரண்டு பேரும் கீழே இறங்கிக் கொண்டார்கள். ''இவ்வளவு நேரம் அந்த மாடு சுமந்து கொண்டிருந்ததே அதை இப்படி நீங்கள் தூக்கிக் கொண்டு போகக்கூடாதா?'' என்றான்



இன்னொருத்தன். உடனே மாட்டை தலைக்கீழாக படுக்கவைத்து கம்பைக் கட்டி மாட்டி நான்கு கால்களையும் கட்டி இரண்டு பேரும் அந்த மாட்டை தூக்கிச் சென்றார்கள். ஆற்றுப் பாலத்தில் செல்லும்போது அந்த மாடு துள்ளி ஆற்றில் விழுந்துவிட்டது. இதுதான் கதை.

வருகிறவன் போகிறவன் பேச்சையெல்லாம் கேட்டால், சந்தைக்கு மாடு ஓட்டினவன் கதை ஆகிவிடும். நல்ல பேச்சாக இருந்தால் கேட்கலாம். அதை எல்லாம் எண்ணிப் பார்த்துதான் எதுஎது நல்ல வார்த்தைகளோ நல்ல விமர்சனங்களோ, அதையெல்லாம் எடுத்துக் கொண்டு, சொல்வார்களே உதாரணம் பாலையும் தண்ணீரையும் சேர்த்து வைத்தால் அன்னப்பறவை தண்ணீரை விட்டுவிட்டு பாலை மாத்திரம் அருந்தும் அதைப்போல வருகின்ற விமர்சனங் களில் நல்ல விஷயங்கள் சொல்லப்பட்டால், குறைகளைக் கண்டு அந்தக் குறைகளை எப்படி களைய வேண்டுமென்று நல்ல அறிவுரைகள் சொல்லப்பட்டால் அந்த அறிவுரைகளை ஏற்றுக் கொள்கிற அரசுதான் இந்த அரசு. மக்களோடு தொடர்பு கொண்டுள்ள பல காரியங்களை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அதிலே ஒன்று உழவர் சந்தை.

### தேனி உழவர் சந்தை

இதுவரையிலே தமிழகத்திலே திண்டுக்கல்லில் தொடங்கி வைத்த உழவர் சந்தை உட்பட ஒன்பது சந்தைகள் தொடங்கப்பட்டுள்ளன. இது பத்தாவது உழவர் சந்தை. இந்த எட்டு உழவர் சந்தைகளில் நேற்று வரை மொத்த விற்பனை 12,01,186 கிலோ. ஒவ்வொரு நாளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் நான் தொடர்பு கொண்டு இந்தக் கணக்கை கேட்டறிந்த வரையில் நேற்று மாலை வரை விற்பனையான காய்கறிகள்தான் இவை. இந்த விற்பனையான பொருட்களின் மதிப்பு 1,01,11,664 ரூபாயாகும். எட்டு சந்தைகளில் மட்டும் நேற்று வரை இவ்வளவு ரூபாய் மதிப்புள்ள காய்கறிகள் விற்பனையாகியிருப்பதென்பது இந்த உழவர் சந்தையின் வெற்றியைக் காட்டுகின்றது.

இது உழவர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் நேரடியாக ஒரு தொடர்பை ஏற்படுத்த




வேண்டுமென்கிற ஆர்வத்தோடு அக்கறையோடு ஏற்பாடு செய்யப்பட்ட திட்டமாகும். ''உழவர் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்பது பழமொழி''. ''சுழன்றும் ஏர்பின்னது உலகம்'' என்பது வள்ளுவம். அத்தகைய பெருமைக்குரிய உழவர்களுடைய வாழ்வில் ஏற்பட்டுள்ள நலிவு போக்கவும், அதே நேரத்தில் விலை உயர்வால், காய்கறி விலை கூட உயர்ந்து விட்டதேயென்று தாய்மார்கள் அங்கலாய்ப்பதைத் தவிர்க்கவும் நேரடியாகவே ஒரு தொடர்பை உழவர் பெருமக்களுக்கும் அதாவது உற்பத்தியாளர் களுக்கும் நுகர்வோருக்குமிடையே ஏற்படுத்த வேண்டும். இடையில் இடைத்தரகர் கூடாது என்ற முனைப்போடுதான் இந்தப் பணியை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். இன்றோடு பத்தாவது உழவர் சந்தை உதயமாகியிருக்கின்றது.

இந்தத் தேனி உழவர் சந்தையைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அரிய முயற்சியோடு வெகு விரைவிலே ஏற்பாடுகள் நடைபெற்று திறந்துவைக்கும் வைபவம் இன்று உங்கள் வாழ்த்துக்களோடு நடந்து கொண்டிருக்கின்றது. இதைச் சுற்றியுள்ள சிறு மற்றும் குறு உழவர்கள் சுமார் 600 குடும்பங்களைத் தேர்வு செய்து முதற்கட்டமாக 300 உழவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 300 உழவர்களுக்கும் அடையாள அட்டை வழங்கி ஆண்டு முழுவதும் காய்கறி, பழங்கள் விற்பனை செய்ய உழவர் சந்தையை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படும். ★



# மறத்தமிழனின் மணிமண்டபம்

**– முதலமைச்சர் கலைஞர் திறந்துவைத்தார்.**

பட்டுக்கோட்டையில் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் இன்றைக்குத்தான் நடந்தது போல இருக்கின்ற ஒரு நிகழ்ச்சியும் இடம் பெற்றுள்ளது. அதுதான் என்னுடைய அருமைத்தம்பி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் மறைவு. ஆண்டுகள் பல உருண்டோடிவிட்டன என்றாலும்கூட, மாண்டுவிட்ட அந்த மறத்தமிழர், பாட்டுத் தமிழர், பகுத்தறிவுத் தமிழர், மானங்காத்த தமிழர், மானம் காக்கும் தமிழனை, அந்தத் தம்பியை என்னால் மறந்துவிட இயலாது. கலை உலகத்தில் காலடி எடுத்து வைத்து சின்னாட்கள் பாடல்கள் எழுதினார் என்றாலுங்கூட, எழுதிய பாடல்கள் அத்தனையும் என்றென்றும் தமிழகத்திலே நிலைத்து நிற்கக்கூடிய பாடல்களாக எழுதினார்.

அவர் மறைந்தபொழுது நான் சென்னையில்தான் இருந்தேன். மருத்துவமனைக்கு அவசர அவசரமாக கொண்டு செல்லப்பட்டபோதும் பின் தொடர்ந்து, சில மணி நேரத்திற்குள் அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் அவர் இல்லத்திற்கு ஓடோடிச் சென்றேன். இறுதிச் சடங்குக்கான ஏற்பாடுகளையெல்லாம் உடன் இருந்து கவனித்தேன். ஆனால், இவ்வளவு விரைவாக அந்த இளைய கவிஞன் தமிழ்மக்களிடம் இருந்து விடைபெற்றுக் கொள்வார் என்று யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது.

### மறைந்தும் மறையாத பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

அவரிடத்திலே தமிழக மக்கள் – தமிழ்மக்கள் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு யார் யாருக்கு முற்போக்குக் கொள்கையிலே பற்றும், பாசமும் இருக்கிறதோ அவர்கள் எல்லாம், யார் யாருக்கு பகுத்தறிவுப் பாசறையிலே பயின்ற நினைவு அகலாமல் இருக்கிறதோ அவர்களுக்கெல்லாம், யார் யாருக்கு பொதுவுடைமை கருத்துக்களில் அசைக்க முடியாத நம்பிக்கையும், ஆதரவும் இருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் மறைந்தும், மறையாமல் இருக்கின்ற தம்பி கல்யாணசுந்தரம் என்றைக்கும் ஒரு நினைவுச்சின்னம் தான்.

இன்றைக்கு பட்டுக்கோட்டைக்கு வருகிற வழியில், இங்கே பட்டுக்கோட்டையில் அமைக்கப் பட்டிருக்கின்ற அந்த மணி மண்டபம் மாத்திரமல்ல; எல்லோருடைய மன மண்டபத்திலும் கல்யாணசுந்தரம் வீற்றிருக்கிறார் என்று சொன்னால் அதை மறுப்பதற்கில்லை. இங்கே தம்பி முல்லைவேந்தன் படித்துக் காட்டினார். பட்டுக்கோட்டை மறைந்தபோது நான் முரசொலியில் எழுதிய இரங்கல் கட்டுரையை இங்கே அவர் படித்துக் காட்டினார். அந்நாளில் பெரியாருடைய தொண்டர்களாக நாங்கள் எல்லாம் இருந்து திராவிடர் கழகக் கூட்டங்களை நடத்திய காலகட்டத்தில் எங்கள் மேடைகளில் ஒரு சின்னஞ்சிறிய உருவம், பிஞ்சு உருவம் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தானாக வலியவந்து மேடை ஏறி பாடுவதும், தானே கட்டிய பாட்டுக்களை பாடிக்காட்டுவதும் என்றைக்கும் நெஞ்சை விட்டு நீங்காத நிகழ்ச்சிகளாகும்.

இன்று பட்டுக்கோட்டைக்கு வருகின்ற வழியில் ஒவ்வொரிடத்திலும் நூற்றுக்கணக்கான – ஆயிரக்கணக்கான மக்கள் எங்கள் வண்டியை வழிமறித்து வரவேற்பு வழங்கியபோது, ஓரிடத்தில் நம்முடைய ஒன்றியக் குழுத் தலைவர் வேதரத்தினம் அவர்கள் ஒரு தாளை என்னிடத்தில் கொடுத்து "இதைக்கொஞ்சம் படியுங்கள், படியுங்கள்" என்று சொன்னார். இந்த பரபரப்பான கூட்டத்தில் நான் அதை எப்படி படிப்பது என்றேன். "இல்லை, இது கவிஞர் வீட்டில் கிடைத்தது. படியுங்கள்" என்று சொன்னார். கார் நகர்ந்த பிறகுதான் அதை என்னால் படிக்க முடிந்தது.

அது என்னவென்றால் 1957ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த அரசிளங்குமரி படத்திற்கு திரைக்கதை, வசனம் நான் எழுதிக் கொண்டிருக்கும்பொழுது

அந்தப் படத்திற்கு தம்பி கல்யாணசுந்தரம் பாட்டு எழுதினார். எப்பொழுதுமே அண்ணாவும், நானும் ஒரு படத்திற்கு திரைக்கதை, வசனம் எழுதுகிறோம் என்றால், அதிலே இடம்பெற வேண்டிய பாட்டுக்கள் என்ன கருத்திலே அமையவேண்டும் என்பதில் மிகுந்த ஜாக்கிரதையாக இருப்போம். ஏனென்றால் பாட்டு எழுதுகிறவர்கள் எங்கள் கொள்கைக்கு மாறாக எழுதிவிட்டால் என்ன செய்வது என்பதற்காக இந்த இடத்திலே பாட்டு வரவேண்டும். அந்தப் பாட்டின் கருத்துக்கள் இப்படி இருக்கவேண்டும் என்று எழுதியிருப்போம்.

அப்படி அரசிளங்குமரியிலே முதல் காட்சியில் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றம் பிடித்து ஏற்றப்பாட்டு ஒன்றைப் பாடுவார். அதற்கு எப்படி கருத்து இருக்கவேண்டும் என்பதை பாட்டிற்கான கருத்து இவ்வாறு அமையலாம் என்று எழுதி, அதாவது 1957ஆம் ஆண்டு அதை நான் என்னுடைய கைப்பட எழுதி கையெழுத்திட்டு அதை தம்பி கல்யாண சுந்தரத்திடம் நான் கொடுத்திருக்கிறேன். அவரும் அந்த அடிப்படை கருத்தை வைத்து பாட்டு எழுதினார். அந்தப் பாட்டு அந்தப் படத்திலே சிறந்த பாட்டுக்களில் ஒன்றாக இடம் பெற்றது. இன்றைக்கும் பாடப்படுகின்ற பாட்டு அது.

1957ஆம் ஆண்டு அதற்காக நான் என் கைப்பட எழுதிய அதே தாளை இன்றைக்கு மாலையிலே நான் பார்த்தபோது என்னுடைய பசுமையான நினைவுகள் எப்படியெல்லாம் பதற்றமடைந் திருக்கிறது என்பதை உங்களால் எண்ணிப் பார்க்க முடியாது. என்னால்தான் அதை உணரமுடியும். அவ்வாறு உணர்ந்தேன். அதை எழுதித் தந்துவிட்டு மறுநாள் அந்தப் பாட்டு தயாரானபோது "என்ன அண்ணா, உங்கள் கருத்து சரியாக வந்திருக்கிறதா" என்று என்னிடம் கேட்டார். சரியாக வந்திருக்கிறது என்று கல்யாணசுந்தரத்தை தட்டிக் கொடுத்தேன். இதை நான் சொல்லக் காரணம், அந்தப் பழைய தாளை நான் பார்த்தவுடன் 57ஆம் ஆண்டு நான் எழுதிய என்னுடைய கையெழுத்தைப் பார்த்ததும் என் வண்டியில் வந்த துரைமுருகனும், பொன்முடியும், வீராசாமியும் என்னிடம் சொன்னார்கள். என் கையெழுத்து அப்படியே இருக்கிறது என்று. நானும் அப்படியேதான் அசையாமல் இருக்கிறேன். கையெழுத்து என்ன மாறியாவிடும் என்று எண்ணிக் கொண்டேன்.

இன்றைக்கு அரசின் சார்பில் அந்தத் தம்பிக்கு ஒரு மணி மண்டபத்தை எழுப்பியதில் நான் பெருமையடைகிறேன். இது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்குச் செய்யப்பட்ட பெருமை அல்ல. நமக்கு நாமே செய்து கொண்ட பெருமை. எனக்கு நானே தேடிக்கொண்ட பெருமை. இப்படிப்பட்ட கவிஞர்களை நினைத்து நினைத்து இவர்களைப் போல, இன்னும் பலர் உருவாக வேண்டுமே என்கின்ற அந்த ஆவலை நெஞ்சிலே தேக்கித் தேக்கி நாம் நம்முடைய அரசையும் நடத்த வேண்டும், நம்முடைய சமுதாயத்தையும் நடத்தவேண்டும். நம்முடைய பழக்கவழக்கங்களையும் அவ்வாறு ஆக்கிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் – இங்கே எனக்கு முன்னால் பேசிய தம்பி துரைமுருகன் எடுத்துக் காட்டியதைப் போல, இன்னும் பல கவிஞர்கள் தோன்றக்கூடும். நாம் போன பிறகு நம்மை நினைப்பார் யார்? – என்கின்ற அந்த ஏக்கப் பெருமூச்சோடு கவிஞர்கள் பலர் ஒரு காலத்திலே இருந்து மறைந்திருக்கிறார்கள்.

## நல்ல சிந்தனையுள்ள கவிஞர்களால் இந்தச் சமுதாயம்-உலகம் முன்னேறும்

மகாகவி பாரதி, தேசியக்கவி பாரதி, பாரதியே கூட அவர் இருக்கும்போது யாரும் நினைத்துப் பார்த்ததில்லை. வேதனையோடு ஒன்றைச் சொல்வார்கள். அவ்வளவு பெரிய மகாகவி பாரதி இறந்தபோது, அவரது உடலை சுமந்து இடுகாட்டிற்கு அல்லது சுடுகாட்டிற்கு எடுத்துச்சென்ற பொழுது அதன் பின்னால் சென்றவர்கள் பத்து பேரோ, பதினைந்து பேரோ என்றுதான் இன்றைக்கும் புலவர்கள் புலம்புவார்கள். கவிஞர்கள் கதறுவார்கள். என்ன காரணம்? ஒரு காலத்தில் கவிஞர்கள் அந்த அளவிற்குத்தான் மதிக்கப் பட்டார்கள்.

ஆனால், கவிஞர்களால் இன்றைக்கு இந்த உலகம் முன்னேறும். எழுத்தாளர்களால் உலகம் முன்னேறும். எழுத்தாளர்கள் நல்ல சிந்தனையாளர் களாகவும் இருந்து, கொள்கை பற்றுடையவர் களாகவும் இருந்து, இலட்சியவாதிகளாகவும் இருந்திருப்பார்களேயானால், அவர்களால் நிச்சயமாக சமுதாயம் முன்னேறும்; உலகம் முன்னேறும் என்ற அந்த நம்பிக்கை இன்றைக்கு நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்றது.

அந்த நம்பிக்கை கரும்பின் ஒரு கணுவாக இருந்தவர்தான் நம்முடைய பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள்.

– 15–12–1999 அன்று
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
மணிமண்டபம் திறப்பு விழாவில்
முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய
உரையிலிருந்து .

# தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி **1905–ஆம் ஆண்டு** துவக்கப்பட்டது. நடப்பாண்டில் வங்கியின் செயல்பாடு திட்டங்களை மேலும் வலியுறுத்துகின்ற வகையிலும், விரைவுபடுத்துகின்ற வகையிலும், சில திட்டங்களை வகுத்துள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி சென்னை மாநகரத்தில் 40 கிளைகளிலும், தலைமை அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தின் கிளையிலுள்ள வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவை ஆற்றி வருவதுடன் மாவட்டத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் அனைத்துக் கடன் திட்டங்களுக்கும் தேவையான மறுநிதி அளித்து வருகிறது. குறுகிய கால விவசாயக் கடன் மற்றும் கைத்தறி நெசவாளர்கள் சங்கங்களுக்கும், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் தேவையான நிதியை தேசிய வங்கியிலிருந்து (நபார்டு) பெற்று வருகின்றது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி அகில இந்திய அளவில் மிகச் சிறந்த செயல்பாட்டுத் திறனுடைய வங்கி என்று தேசிய அளவில் தொடர்ந்து தெரிந்தெடுக்கப்பட்டு, பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்று வருகின்றது.

தலைமைக் கூட்டுறவு வங்கி மிக விரைவில் வங்கியின் வாடிக்கையாளர்களுக்குத் துரித சேவை அளிக்கின்ற வகையில் 40 கிளைகள் மற்றும் தலைமை அலுவலகத்தைக் கணிப்பொறி மயமாக்கத் திட்டமிட்டு அதற்கு ஒரு சிறந்த நிபுணர் குழுவை ஏற்படுத்தி உள்ளது. இந்தக் குழு தமிழக அரசு குறிப்பிட்டுக் காட்டியுள்ள நெறிமுறைகள், விதிமுறைகளின்படி அமைக்கப்பட்டு, அந்த விதிமுறைகளின்படி வரும் தமிழ்ப் புத்தாண்டுக்குள் 10 கிளைகளையும், அடுத்தடுத்தக் காலக் கட்டத்தில் மீதியுள்ள 30 கிளைகளையும் கணிப்பொறி மயமாக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மற்ற வங்கிகளிலிருந்து மாறுபடுகின்ற வகையில் 'சென்ட்ரல் செர்வர்' மற்றும் 'லேன்' அமைப்புக்களையும் உள்ளடக்கிய வகையில் கணிப்பொறி மயமாக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது. இந்த வகையில் ஒவ்வொரு கிளையிலும் நடக்கும் அன்றாடப் பணிகளையும், வாடிக்கையாளர்களின் கணக்குகளில் செய்யப்படும் வரவு செலவுகள் அனைத்தையும் தலைமை அலுவலகத்தில் தினம் சரி பார்க்கின்ற வகையிலும் இந்தக் கணிப்பொறித் திட்டம் அமைக்கப்பட இருக்கின்றது.

வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படுகின்றச் சேவைகளை விரிவுப்படுத்தப்படுகின்ற வகையில் இந்த நவம்பர் திங்கள் அல்லது டிசம்பர் திங்களுக்குள் வீடு கட்டுவதற்கும், பழுது பார்ப்பதற்கும், நகைகளின் ஈட்டின் பேரிலும் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தொலைக்காட்சிப் பெட்டி, ஃப்ரிட்ஜ் போன்ற வீட்டிற்கு உபயோகமாக உள்ள பொருட்களை வாங்குவதற்கும், பில் டிஸ்கவுண்டிங் போன்ற கடன் திட்டங்களையும் செயல்படுத்த இருக்கின்றது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தமிழகத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள உபரி வைப்புத் தொகைகளை ஒன்று திரட்டி தேசியமயமாக்கப்பட்ட மற்றும் வணிக வங்கிகள், இந்தியாவில் செயல்படுகின்ற வெளிநாட்டு வங்கிகள், புதிதாகத் துவக்கப்பட்டுள்ள தனியார் வங்கிகளில் இலாபகரமாக முதலீடு செய்வதற்கும், அரசுப் பத்திரங்கள், கருவூலப் பத்திரங்கள் போன்ற இலாபகரமான முதலீட்டில் முதலீடு செய்வதற்கும் தக்க ஏற்பாடுகளைத் தலைமைக் கூட்டுறவு வங்கி செய்து வருகின்றது.

## புனரமைப்புத் திட்டங்கள்

### கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

சர்க்கரை இருப்புத் தேக்கத்தின் அதிகரிப்பினால் நாட்டிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் நலிவடைந்தன. இதனால் நலிவுற்ற சர்க்கரை ஆலைகள் மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடம் தாம் பெற்ற காசுக்கடன் மறுநிதியுதவிப் பயன்படுத்துவதில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தப் பாதிப்பின் காரணமாகக் கரும்பு விவசாய உற்பத்தியாளர்கள் பாதிக்காமலிருக்கவும், சர்க்கரை ஆலைகள் தொடர்ந்து இயங்கவும் மாநில அரசும், தலைமைக் கூட்டுறவு வங்கியும் புனரமைப்புத் திட்டத்தினை உருவாக்கி 9 நலிவுற்ற சர்க்கரை ஆலைகளுக்குத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு





வங்கி உருவாக்கிய புனரமைப்புத் திட்டத்தினை நபார்டு வங்கி அங்கீகரித்தது. இந்த 9 ஆலைகளின் தகுதி பெற்றக் கடன் வரம்பிற்கும் அதிகமான நிலுவைகள் முடக்கப்பட்டன. இவ்வாறு முடக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ.114.62 கோடியில் ரூ.33.29 கோடியை இந்த சர்க்கரை ஆலைகள் ஏற்கனவே திரும்பச் செலுத்தியுள்ளன.

**கூட்டுறவு நூற்பாலைகள்**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 16 நூற்பாலைகள் பஞ்சின் விலையேற்றத்தினாலும், மார்க்கட்டில் நூலிழை விலையின் மாற்றங்களினாலும் மற்றும் பல காரணங்களினாலும் நெருக்கடியில் உள்ளன. இதன் காரணமாக, நூலிழையினைத் தயாரிக்கும் தொடக்கக் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கட்கு நூலிழைக்கானப் பணத்தைத் தர இயலவில்லை. நலிவுற்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு உருவான புனரமைப்புத் திட்டத்தினைப் போல் நலிவுற்றக் கூட்டுறவு நூற்பாலைகட்கும் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் 5 நலிவுற்ற நூற்பாலைகட்கு உருவாக்கப்பட்ட புனரமைப்புத் திட்டங்கள் நபார்டு வங்கி அங்கீகரித்துள்ளது. மற்றுமொரு நூற்பாலைக்கான புனரமைப்புத் திட்டம் நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது.

**கூட்டுறவு மொத்த விநியோகப் பண்டகச் சங்கங்கள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு மொத்த விநியோகப் பண்டகச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் பெரும்பான்மையானவை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகின்றது. நலிவுற்றக் கூட்டுறவுப் பண்டகச் சங்கங்கள் புனரமைப்புத் திட்டத்தினை உருவாக்கத் தலைமைக் கூட்டுறவு வங்கியும், மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகமும் முயற்சி எடுத்து வருகின்றன.

மொத்தமுள்ள 31 கூட்டுறவு மொத்த விநியோகப் பண்டகச் சாலைகளில் 26 பண்டகச் சாலைகள் நலிவுற்றுள்ளன. இவற்றில் 7 சங்கங்களுக்குக் கடன் அங்கீகாரத் திட்ட அனுமதி பெற நபார்டு வங்கிக்குத் திட்டங்கள் அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கெல்லாம் தலைமை வங்கியாகச் செயல்படும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றக் கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கூட்டுறவுக் கடன்கள் வழங்குதல், நிதிநிலை மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் போன்றவற்றில் தலைமைக் கூட்டுறவு வங்கி முன்னணியில் நிற்கிறது ★



# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

உணவு, உடை, உறையுள் ஆகிய இம்மூன்றும் வாழ்வின் அடிப்படைத் தேவைகளாகும். கற்காலம் முதல் நாகரீகம் பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ள இன்றுவரை "வீட்டுவசதி" மனித வாழ்வில் முக்கியமான பங்கினை வகித்து வருவதுடன் நாட்டின் பொருளாதாரம் மேம்பாடடையவும் உதவுகிறது. தனி மனிதன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் சமுதாயத்தில் கௌரவத்தையும், மரியாதையையும் பெற்றுத் தருகிறது.

**தேசிய வீட்டுவசதிக் கொள்கை**

பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப இன்றைக்கு வீட்டுவசதித் தேவைகளும் அதிகரித்துக் கொண்டே போகிறது. எனவே "சொந்தவீடு" என்பது பெரும்பாலானவர்களுக்கு பகல் கனவாக இருந்து வருகிறது.

இரண்டாயிரம் ஆண்டுக்குள் அனைவருக்கும் "வீட்டுவசதி" அளித்திட வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபை திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. இதனடிப் படையில் இன்று உலகம் முழுவதும் அனைவருக்கும் "வீட்டுவசதி" அளிப்பது குறித்துத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நமது இந்திய நாட்டில் மைய அரசும் தேசிய அளவில் "வீட்டுவசதிக் கொள்கைகளை" உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. ஒன்பதாவது திட்ட காலத்தில் தேவையான அளவிற்கு வீட்டுவசதி குடியிருப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்பதே "தேசிய வீட்டுவசதி கொள்கையின்" தலையாய நோக்கமாகும். பல்வேறு வருவாய்ப் பிரிவினர்களும் பயனடையும் வகையில் "வீட்டுவசதித் திட்டங்கள்" நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**குடும்பத்திற்கு ஒரு வீடு**

"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாகட்டும் என சூளுரைத்து "தமிழே தனது உயிர் மூச்செனவும், தமிழர் வாழ்வே தன் வாழ்வெனவுங் கொண்டு இனநலம், மொழிநலம் காக்கும் தொண்டே தன்பிறவிக் கடனென்று" தமிழ்கூறும் நல்லுலகுக்காக தம் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்துக் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களின் அனுபவம், ஆற்றல் மற்றும் தன்னலமற்ற தலைமையின் கீழ் இயங்கி வரும் தமிழக அரசின் தலையாய கொள்கை "குடும்பத்துக்கு ஒரு வீடு" என்பதாகும். இக்கொள்கையினை கூட்டுறவு வீட்டுவசதித் துறையில் மாற்றாரும் போற்றிப்பாராட்டிடும் வகையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் தலைமை நிறுவனம் தான்"தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையமாகும்"

**இணையத்தின் பணிகள்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் கடந்த 40 ஆண்டுகளாக தமிழகத்தின் கிராமிய மற்றும் நகர்ப்புறங்களில் வசித்து வரும் மக்களின் வீட்டுவசதித் தேவைகளை நன்முறையில் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள 523 நகர்ப்புற வீட்டுவசதி சங்கங்கள் மூலம் புதிய வீடு கட்டவும், புதியவீடு மற்றும் அடுக்குமாடி வீடு வாங்கவும் உயர்ந்தபட்சம் ரூ. 7 இலட்சம் வரை கடன் வழங்கி வருகிறது.

கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 193 வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் நலிவுற்ற பிரிவு மக்களுக்குக் கடனாக ரூ.10,000—மும், மானியமாக ரூ.2,000—மும் வழங்கப்படுகிறது. பயனாளிகளின் பங்கு ரூ.2,000 ஆகும். குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.1,00,000—மும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.2,00,000—மும் கடனாக வழங்கப்படுகிறது.

**வழங்கிய கடன்கள்**

இவ்விணையம் துவங்கியது முதல் 30.9.99 வரை கிராமிய மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 10,18,440 வீடுகள் கட்டுவதற்கு ரூ.2,514 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தியத் திருநாட்டிலேயே கூட்டுறவு வீட்டுவசதித் துறை மூலம் ரூ.2,514 கோடி அளவிற்குக் கடன் வழங்கியது இவ்விணையம் தான் என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விழைகின்றோம். புதிய நிர்வாகக்குழு பொறுப்பேற்ற 1.9.98 முதல் 31.8.99 வரை கடந்த ஓராண்டில் மட்டும் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.557 கோடியாகும்.

இவ்விணையம் தொடங்கியது முதல் 1995—96ஆம் ஆண்டு தான் அதிகபட்சமாக ரூ.190 கோடி அளவுக்குக் கடன் வழங்கப்பட்டது. 1996—97ஆம் ஆண்டு ரூ.213



கோடியும், *1997–98*ஆம் ஆண்டு ரூ.*279* கோடியும், *1998–99*–ஆம் ஆண்டு ரூ.*457* கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமிதத்துடன் சுட்டிக்காட்டிட விழைகின்றோம்.

இதே காலத்தில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.*222* கோடியாகும்.

அடமானக் கடன்

தனியார் நிதி நிறுவனங்களிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன் பெற்று அவதியுறும் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் முன்கடன் தீர்த்தல், பழுதுப் பார்த்தல் ஆகிய காரணங்களுக்கு உயர்ந்த பட்சமாக ரூ.*5* இலட்சம் வரை அடமானக் கடன் வழங்கப்படுகிறது.



நிதி ஆதாரம்

புதிய நிர்வாகக்குழுப் பொறுப்பேற்ற *1.9.98* முதல் *31.8.99* வரையிலான ஓராண்டில் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்துப் பெறப்பட்ட நிதியுதவி ரூ.*424* கோடியாகும். இதற்கு சென்ற ஆண்டில் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட நிதியுதவியோ ரூ.*323* கோடியாகும். நிர்வாகக் குழுப் பொறுப்பேற்ற பிறகு ரூ.*101* கோடி நிதி நிறுவனங்களிடமிருந்து அதிகக் கடனாகப் பெறப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் சுட்டிக் காட்டிட விழைகின்றோம்.

முதன்மைச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை

சென்ற *1.9.98* முதல் *31.8.99* வரை முதன்மைச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை ரூ.*321* கோடியாகும். இதற்கு முந்தைய ஆண்டு

இணையத்தின் கணக்குகள் கணினி மயமாக்கம்

இன்றைய வாழ்க்கையில் அறிவியல், தொழில் நுட்பம், கல்வி மற்றும் பல்துறைகளில் கணினியின் ஆதிக்கம் மிகுந்து காணப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இணையத்தின் கணக்குகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

— செங்கை சிவம், எம்.எல்.ஏ.,
பெருந்தலைவர், தமிழ்நாடு
கூட்டுறவு வீட்டுவசதி இணையம்.

திருவாரூர் மாவட்டம்

# முன்னோடி கணினி மாவட்டம்

திருவாரூரில் இந்த மாவட்டத்தை முன்னோடி கணினி மாவட்டமாக அறிவிக்கின்ற முதல் அறிவிப்பு இன்றைய தினம் பிறப்பிக்கப் படுகிறது.

திருவாரூருக்கு ஒரு சிறப்பு உண்டு. புராணீகர்கள் மொழியில் "திருவாரூரில் பிறக்க முக்தி" என்று ஒரு பழமொழி உண்டு. அதைப்போல இங்கே பிறக்கிற கணினி முன்னோடி மாவட்டம் என்ற இந்தத் திட்டமும் சிறந்து விளங்கும் என்று அவர்களுடைய மொழியிலே நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.



**வெள்ளோட்ட நிகழ்ச்சி**

கணினிமயமாக இந்த மாவட்டத்தை முழுமையாக ஆக்கிட வேண்டும் என்ற முயற்சிக்கு முதல் கட்டமாக, முன்னோடித் திட்டமாக, வெள்ளோட்டமாக இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புதிதாக ஒரு தேர் செய்தால் அதை விழா நடத்தி ஓட்டுவதற்கு முன்பு தேரை வெள்ளோட்டம் விடுவார்கள். அதைப்போல கணினி என்கிற தேர் திருவாரூர் மாவட்டம் முழுவதும் அசைந்தாடி அற்புதங்களை விளைவிப்பதற்கு ஒரு வெள்ளோட்ட நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழகத்திலே தகவல் தொழில்நுட்பத்தை வளர்க்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகளை எல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். தமிழ்நாட்டில் 150க்கு மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு 30 ஆயிரம் இளைஞர்கள் தொழில்நுட்ப பட்டதாரிகளாக உருவாகிறார்கள்.

**தகவல் தொழில்நுட்பவியலுக்கு தனித்துறை**

அப்படி உருவாகின்றவர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்தின் அவசியத்தை உணர்த்திட 1997 நவம்பர் திங்களில் ஒரு தனிக் கொள்கை இந்த அரசால் உருவாக்கப்பட்டது. பிறகு 5.10.98 அன்று தகவல் தொழில்நுட்பவியல் துறை தமிழக அரசிலே தனியாக ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 8.10.98 அன்று மாநில அளவிலான தகவல் தொழில் நுட்பப் பணி முனைப்புக்குழு (State level task force information

**technology)** என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அந்தக் குழுவிற்கு முதலமைச்சர் தலைவராகவும், துணைத் தலைவராக முரசொலி மாறனும் நியமிக்கப்பட்டார்கள்.

அதன் பிறகு முரசொலி மாறன் மத்திய அமைச்சராக ஆன பிறகு அந்தப் பொறுப்பைக் கல்வி வல்லுநர் – வெளிநாடுகளில் புகழ் சேர்த்த திரு.அனந்தகிருஷ்ணன் அவர்கள் தற்போது ஏற்று நடத்துகிறார்கள். தமிழ்மென்பொருள் தொழில் மேம்பாடு, பள்ளிகளில் கணினி அறிமுகத்திற்கு பாடத்திட்டம் உருவாக்குதல், அனைத்துத் துறைகளிலும் கணினியைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு உதவும் வகையில் அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒரு துணைக்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குழுக்களின் சீரிய வழிகாட்டுதலுடன் தகவல் தொழில்நுட்பத் துறையின் விரைவான வளர்ச்சிக்குப் பல்வேறு தீவிர நடவடிக்கைகள் தமிழகத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே ஒன்றுதான் இன்றைக்குத் திருவாரூரிலே முன்னோடித் திட்டமாகக் கணினி மாவட்டமாக இதை அறிவிக்கின்ற இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கணினியை தமிழில் பயன்படுத்துகின்ற நிலை தமிழ்நாட்டு மக்களுக்கு வந்தாக வேண்டும். அந்தப் பயிற்சியைப் பெற்றாக வேண்டும் என்று எண்ணிய போது, தமிழ் கணினி உலகம் முழுவதும் ஒரே வடிவத்தில் அமைந்திட வேண்டும் என்பதற்காகச் சிந்தித்து அதைச் செயல்படுத்துகின்ற வகையில் உலக தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு ஒன்றை **1999** பிப்ரவரி திங்களிலே **7, 8** தேதிகளில் சென்னையிலே மிகச் சிறப்பாக நாங்கள் நடத்தியதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த மாநாட்டின் தொடர் நிகழ்வாகத் தரப்படுத்தப்பட்ட தமிழ்விசைப் பலகை **(Standardized Tamil Keyboard layout)** வடிவமைக்கப்பட்டு தமிழக அரசினால் **13.6.99** அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அந்நிகழ்ச்சியின் போது நான் சொன்ன சில வாசகங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

### தகவல் தொழில்நுட்பச் செயல்பாட்டிற்கான முன்னோடித் திட்டம்

தகவல் தொழில்நுட்பச் செயல்பாட்டை திருவாரூர் மாவட்டத்தில் தொடங்கிடயிருக்கிறோம். அத்துடன் தகவல் தொழில் நுட்பச் செயல்பாட்டிற்கான **Information Technology**–க்கு முன்னோடியான ஒரு **Pilot Project**–ஆக திருவாரூர் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து அறிவிக்கிறேன் என்றும், அந்த மாவட்டத்தில் ஏற்படுகின்ற **'Pilot Project'** எல்லாவற்றையும் கணினிமயமாக்கிட அது ஒரு சோதனைக் கூடமாக எடுத்துக் கொள்ளப்படும் என்றும், அதன் செயல்பாட்டினை நம்முடைய தலைமைச் செயலாளர் தலைமையிலே அமைந்துள்ள குழு பரிசீலித்து அதன் பயன்களைப் பரவலாகச் செயல்படுத்த அதிகார பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அறிவிப்பதாகத் தெரிவித்தேன்.

அதனடிப்படையில் இன்றைக்கு திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 7 வட்டங்களிலும் கணினியை முன்னோடியாகப் பயன்படுத்துவது என்றும், அதன் பயன்பாட்டின் விளைவுகளை ஆராய்ந்து மற்ற மாவட்டங்களிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து பரிசீலிக்கப்படலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

### திருவாரூர் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன்?

இத்றகாக திருவாரூர் மாவட்டத்தை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்று கேட்கலாம். ஊருக்காக அல்ல. இங்கே ஆட்சி நடத்துகிற ஆளுக்காக. இந்த மாவட்ட ஆட்சித்தலைவர் உமாசங்கரின் உருவத்தைப் பார்க்கும் பொழுது என்னுடைய வயதையும்., அவருடைய வயதையும் நோக்கும்போது தம்பி உமாசங்கர் என்றுகூட அழைக்கலாம். உமாசங்கர் தலைமைச் செயலகத்திலே என்னைக் கவர்ந்த இளம் அதிகாரிகளில் ஒருவர்.

எப்படியென்றால் அவர் தன்னுடைய செயல்பாடுகளில் பெரும் பகுதியைக் கணினி வாயிலாகவே நடத்தி வந்தார். எனவே அவர் ஆட்சித்தலைவராக இருக்கிற மாவட்டத்தில் தான் இந்த முன்னோடித் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் எண்ணி திருவாரூர் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தேனேயல்லாமல் – ஏதோ சுயநலம் காரணமாக – என்னுடைய மாவட்டத்தில் இதனைச் செய்ய வேண்டுமென்று எண்ணிச் செய்தேன் என்று கருதினால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல. உமாசங்கர் தஞ்சையிலோ அல்லது வேறு எந்த மாவட்டத்திலோ மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்திருந்தால் அந்த மாவட்டத்தைத்தான் கணினி முன்னோடி மாவட்டமாகத் தேர்ந்தெடுத்திருப்பேன்.

எனவே திருவாரூர் மாவட்டம், யார் மாவட்ட ஆட்சித்தலைவர் என்பதைப் பொறுத்து – ஆளைப் பொறுத்து – இந்தத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டதே தவிர – ஆள் என்றால் – முதலமைச்சராக நான் இருக்கிறேன் என்பதால், நான் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக அல்ல. 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்' என்ற வள்ளுவருடைய குறளுக்கேற்ப யாரால் இதைச் செய்து முடிக்க முடியும் என்ற அந்தச் சிந்தனையின் வெளிப்பாடுதான் திருவாரூர் மாவட்டம் முன்னோடி கணினி மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகும்.

### திட்டத்தின் பயன்கள்

திருவாரூர் மாவட்டத்தில், வருவாய்த் துறை – நிலம் தொடர்பாகப் பட்டா வழங்குதல், பட்டா மாறுதல் செய்தல், சாகுபடி மற்றும் அறுவடைப் பதிவுகள் செய்தல் – இவைகள்

எல்லாம் இத்திட்டத்திலே பயன் விளைவிக்கக் கூடியவையாகும்.

ஆதிதிராவிட நலத்துறையில் கல்வி உதவித்தொகை வழங்க இது பயன்படும்.

மூவலூர் மூதாட்டியார் திட்டப்படி ஏழைப் பெண்களுக்கு **10** ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் நிதி வழங்கும் திட்டத்திற்கும் இது பயன்படும்.

மாவட்டத் தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் விவரத்தைப் பெறுவதற்கும் இந்தத் திட்டம் பயன்படும்.

அந்த மருத்துவமனையிலே மருந்துகள் இருப்பு— வழங்கப்படும் மருந்துகள் — இது பற்றியக் குறிப்புகளையும் இத்திட்டத்தின் மூலம் பெற முடியும்.

பணி மருத்துவர் போன்ற விவரங்களையும் பெற முடியும்.

பொதுவிநியோகத் திட்டத்தில் நியாய விலைக்கடைகளில் இருப்பு — விற்பனை விவரம் போன்றவைகளையும் இத்திட்டத்தின் மூலம் உணர முடியும்.

சிறுவணிக மகளிருக்கு வழங்கப்படும் கடன் விவரங்கள் — வசூல் நிலுவை முதலிய விவரங்களையும் புரிந்துகொள்ள முடியும்.

முதியோர் உதவித்தொகை வழங்குதல்— பயனாளிகள் விவரங்கள் — இவைகளையும் இத்திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்த முடியும்.

தரமான மென்பொருள் உருவாக்கப்பட்டால்தான் நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் அது பயன்தரக் கூடியதாக இருக்கும்.

ஆகவே மென்பொருள் உருவாக்குவதிலே அதிக கவனம் அவசியமாகத் தேவை என்பதையும் — அதில் திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் நிச்சயமாகக் கவனம் செலுத்தியிருப்பார் என்றும் நான் நம்புகிறேன்.

அதன் விளைவாக அவருடைய முயற்சியின் கூறாக இன்றைய தினம் திருவாரூரிலே இந்தத் தொடக்கம் அறிவிக்கப்பட்டு கோலாகலமாக இங்கே கொண்டாடப்பட்டிருக்கின்றது.

**மாணவர்களும் பயன் பெறவே மேனிலைப்பள்ளிகளில் கணினிப் பயிற்சி**

நாம் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி விட்டால் மாத்திரம் போதாது. இதிலே பயன் பெறுபவர்கள் விவசாயிகள் மாத்திரமல்ல; அலுவலர்கள் மாத்திரமல்ல; பொதுமக்கள் மாத்திரமல்ல; படிக்கின்ற மாணவர்களும் இதிலே பயன்பெற வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டு — **666** மேனிலைப்பள்ளிகளில் கணினிப் பயிற்சியைத் தொடங்கியிருக்கிறோம். இது இந்தியாவில் எங்கும் தொடங்காமல் தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே பள்ளிகளிலே கணினியைப் பாடமாகத் தொடங்கியுள்ளது. இதிலே அமெரிக்காவிலே நமக்குப் புகழ் கிடைக்கவில்லையென்று மாவட்ட ஆட்சித்தலைவர் வருத்தப்பட்டார்.

நம்முடைய மாநிலத்தில் நாம் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து கொண்டேயிருந்தால் அதைப் பாராட்ட வேண்டியவர்கள் பாராட்ட வேண்டிய காலத்திலே பாராட்டுவார்கள். ஆந்திர முதலமைச்சரைப் பற்றி அவர் குறிப்பிட்டார். ஆந்திர முதல்வர் என்னுடைய அருமையான நண்பர் தான். எனவே அவருக்கு வருகிற புகழ் எனக்கு வந்ததைப் போலத்தான். அவரும் நானும் இணைந்து பல நல்ல காரியங்களை அவருடைய மாநிலத்திலும் இந்த மாநிலத்திலும் திட்டமிட்டு செய்துகொண்டு வருகிறோம்.

**விளம்பரம் செய்வது எதற்காக?**

இவைகளுக்கெல்லாம் இன்னும் விளம்பரம் வேண்டும். நாம் விளம்பரம் செய்வதே சில பேருக்குப் பிடிக்கவில்லை. இன்று கூட ஒரு பத்திரிகையில் பார்த்தேன். உழவர் சந்தை என்று விளம்பரம் செய்கிறார்கள். அதைப் போலவே பெரியார் நினைவு சமத்துவபுரம் என்று சொல்லி விளம்பரம் செய்கிறார்கள். இந்த விளம்பரத்தால் என்ன வந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

விளம்பரத்தால் என்ன, விளம்பரத்தால் கிளிண்டனுடைய பாராட்டே வந்துவிடும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்று உழவர் சந்தை திருத்துறைப்பூண்டியில் ஆரம்பமாகிறது என்று விளம்பரம் செய்தால் உழவர்களுக்கு அது தெரியும். அந்தச் சந்தைக்குச் சென்று நம்முடைய உற்பத்திப் பொருட்களை விற்கலாம் என்று தெரியும். அதற்காகத்தான் விளம்பரம்.

இன்றைக்குப் போலியோ சொட்டு மருந்து போடப்படுகிறது என்று விளம்பரம் செய்தால் தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கு அங்கே சென்று போலியோ மருந்து போட்டுக்கொண்டு வரலாமே என்று தெரிந்து கொள்வார்கள். இதற்காகத்தான் விளம்பரமே அல்லாமல் நம்முடைய ஜகஜாலங்களை, பளபளப்புகளை எடுத்துச் சொல்ல விளம்பரங்கள் அல்ல என்பதையும் விளம்பரம் செய்யாவிட்டால் இந்த நல்ல காரியங்களையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் கிணற்றுத் தவளைகளாகத்தான் அவர்கள் இருக்க நேரிடும் என்பதையும் எடுத்துக்கூறி, இது விளம்பர யுகம், ஆனால் விளம்பரமே யுகமாக இருக்கக் கூடாது. இந்த யுகத்திலே விளம்பரம் என்கிற அந்த நோக்கத்தோடு இந்த அரசு பாடுபட்டு வருகிறது— பணியாற்றி வருகிறது. அதிலே ஒரு அங்கம் தான் இன்றைய விழா.

இந்த விழா இவ்வளவுச் சிறப்பாக நடப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவருக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*— முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15—12—99 அன்று திருவாரூர் மாவட்ட — வட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள் கணினி மயமாக்கல் விழாவில் ஆற்றிய உரை.*

நம் நாட்டில் சர்க்கரைத் தொழில், நெசவுத் தொழிலுக்கு அடுத்ததாக ஒரு பெரிய தொழிலாக உள்ளது. சர்க்கரைத் தொழில் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டிற்குச் சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக உள்ளது. தமிழகத்தில் குறிப்பாகக் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சி மன நிறைவு தருவதாக உள்ளது. தேசிய அளவிலான சர்க்கரை உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு சுமார் 10 சதவீதம் ஆகும். தமிழகத்தில் மொத்தம் 36 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 17 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 3 பொதுத்துறையிலும், 16 தனியார் துறையிலும் உள்ளன. 1998–99–ஆம் அரவைப் பருவத்தில் இவ்வாலைகளின் நாளொன்றைய மொத்த அரவைத் திறன் 99,500 டன்களாகும். இதில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் நாளொன்றைய அரவைத் திறன் 44,150 டன்களாகும்.



கும்மிடிப்பூண்டி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

### தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் செயலாக்கம்

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் சர்க்கரை உற்பத்தியினை அதிகரித்து வருவதுடன் சர்க்கரை உற்பத்தியில் ஒரு நிலையான இடத்தை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. அகில இந்திய அளவில் ஒப்பிடுகையில் தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் ஒவ்வொரு அரவைப் பருவத்திலும் கூடுதல் நாட்கள் அரவை செய்கின்றன. கடந்த 1998–99–ஆம் ஆண்டில் 75.27 இலட்சம் டன்கள் கரும்பு பிழியப்பட்டு, 6.24 இலட்சம் டன்கள் சர்க்கரை 8.28% கட்டுமானத்துடன் உற்பத்தி செய்யப்பட்டது.

### கூட்டுறவு மற்றும் பொதுத்துறைச் சர்க்கரை ஆலைகளின் நிதிநிலைச் செயலாக்கம்

1998–99–ஆம் அரவைப் பருவத்தில் போதுமான அளவாக 75.27 இலட்சம் டன்கள் கரும்பைச் சர்க்கரை ஆலைகள் பெற்றன. வெளிச்சந்தையில் சர்க்கரை விலையில் வீழ்ச்சி, ஆலைகள் பெற்ற கடனுக்காகச் செலுத்த வேண்டிய அதிகப்படியான வட்டி, கடற்கரைப் பகுதிகளிலுள்ள சர்க்கரை ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானக் குறைவு ஆகியவைகளால் சர்க்கரை ஆலைகளுக்கு மிகுந்த பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இவ்வாலை திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் புதுவாயில் கிராமத்தில் அமைக்கப்படும். இவ்வாலை அமைக்க இதுவரை 80.20 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இவ்வாலைக்கு அரசின் பங்கு மூலதனமாக ரூ.700 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கரும்பு விவசாயிகளிடமிருந்து பங்கு மூலதனமாக ரூ.148 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுச் சர்க்கரை இணையம்

## கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் இணை மின் உற்பத்தித் திட்டம்

எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, செய்யார் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அகியவற்றில் உபரியாக மின்சாரம் உற்பத்தி செய்து, அதனை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்க மூன்று இணை மின் உற்பத்தித் திட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன. உயர் அழுத்த கொதிகலன் மற்றும் டர்பைன் மூலம் தற்போது உபயோகப்படுத்தும் எரிபொருளானக் கரும்புச் சக்கையின் அளவையே பயன்படுத்தி, ஆலையில் சர்க்கரை உற்பத்திக்குத் தேவைப்படும் மின் உற்பத்திக்கு மேல் அதிகப்படியான மின்சாரம் உற்பத்தி செய்து அதனை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

## புதிய திட்டங்கள்

கள்ளக்குறிச்சி—1 கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ரூ.2 கோடி திட்ட மதிப்பீட்டில் 1.0 முதல் 1.5 மெகாவாட் வரை உபரி மின்சாரம் தயாரிக்கவும், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ரூ.7.70 கோடி செலவில் முதல் கட்டமாக 5 மெகாவாட் உபரி மின்சாரம் உற்பத்தி செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாலையில் உற்பத்திச் செய்யப்படும் உபரி மின்சாரத்தை எடுத்துக்கொள்ள தமிழ்நாடு மின்சாரம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

## வடிப்பகங்கள்

சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 10 KLPD மற்றும் 55 KLPD ரெக்டிபைடு ஸ்பிரிட் உற்பத்தித் திறனுடன் இரண்டு வடிப்பகங்கள் நிறுவப்பட்டன. சேலம் வடிப்பகம் 27.12.93—இல் தனது உற்பத்தியைத் துவக்கியது.

அமராவதி வடிப்பகம் 8.10.94 அன்று தனது உற்பத்தியைத் துவக்கியது.

## தென் இந்திய சர்க்கரை ஆராய்ச்சி மையம்

தென் இந்திய சர்க்கரை ஆராய்ச்சி மையம் தமிழ்நாடு அரசால் 1987—ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் ஆகியவை தென் இந்திய சர்க்கரை ஆராய்ச்சி மையத்தில் உறுப்பினராக உள்ளன. உறுப்பினராக உள்ள மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் நிதியிலிருந்து இதற்கான நிர்வாகச் செலவுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

## தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம்

தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் மாநில உச்ச அமைப்பாக, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்காகப் பணிசெய்யத் துவங்கியது. இதில் 17 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் மூன்று பொதுத்துறை ஆலைகளும் உறுப்பினர்களாக இணைந்துள்ளன.

## முக்கிய குறிக்கோள்

* இணைக்கப்பட்டுள்ள ஆலைகளில் பணிகளை ஒருங்கிணைக்கவும், ஒழுங்காக நடைபெறச் செய்யவும் உதவுகிறது.
* புதிய ஆலைகள் அமைப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறது
* ஆலைகளுக்குத் தேவையான இடு பொருட்கள் வாங்குவதற்கான ஒப்பந்தங் களைச் செய்து கொடுக்கிறது.
* சர்க்கரை மற்றும் துணைப் பொருட்களான கரும்புச் சக்கை மற்றும் சர்க்கரைப் பாகு ஆகியவற்றை விற்பனைச் செய்வதற்கு நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

## பணிகள்

உறுப்பினர்கள் ஆலைகளுக்குக் கோணிப் பைகள், உரம், பூச்சிக்கொல்லி, சுண்ணாம்பு, வேதியல் பொருட்கள், வழுவு எண்ணெய், பேரிங்குகள், வெல்டிங் எலக்ராடுகள் மேலும் மற்ற உபகரணங்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்து அங்கத்தினர் ஆலைகளுக்கு வழங்கி வருகிறது.

எரிசாராயம், மொலாசஸ், கரும்பு திப்பி, பழைய வாகனங்கள், வெளிச்சந்தை சர்க்கரை போன்றவற்றை டெண்டர் முறை மூலம் விற்றுக் கொடுக்கிறது

தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல், சர்க்கரை ஏற்றுமதி, புதிய சர்க்கரை ஆலைகள் ஆரம்பித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

## உயிரியல் ஆய்வு மையம்

உயிரியல் மூலமாக உரம், பூச்சிக்கொல்லி போன்ற ஆராய்ச்சிப் பணிகளைச் செய்வதோடு உயிரியல் ஆராய்ச்சி மையம் மூலம் உயிர் உரங்கள், உயிர் பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை உற்பத்திச் செய்து அங்கத்தினர் ஆலைகளுக்கும் ஏனையோருக்கும் விற்பனைச் செய்து வருகின்றது. இது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு கூடமாகும். இந்தியாவிலேயே முதன் முதலாக அசிடோபேக்டர் டைசோட்ராபிக்ஸ் என்ற பாக்டீரியாவைப் பிரித்தெடுத்துச் சாதனைப் படைத்துள்ளது. மேலும், ப்ளச்சின், நிமெண்டே போன்ற பூச்சிக் கொல்லிகளைத் தன் சொந்த முறையில் கண்டுபிடித்துத் தயாரித்து விற்பனைச் செய்து வருகின்றது.

ஏனவே சர்க்கரை தொழில் மனிதனின் அன்றாட அத்தியாவசியத் தொழிலாக வளர்ச்சிப் பெற்று இது எங்கும் வியாபித்து உள்ளதை அறியலாம்.

# வேளாண் பொறியியல்

அக்ரோபெட் என்று சுருக்கமாகப் பெயர் பெற்றுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் சென்னையில் **1972**ஆம் ஆண்டு முதல் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. இதற்குத் துணையாக மாவட்ட அளவிலானக் கூட்டுறவு வேளாண் பணிச் சங்கங்கள் **20**—ம் வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு மையங்கள் **191**—ம் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையமும் மற்றும் அதன் சார்புடைய வட்டார மற்றும் மாவட்ட அளவிலான சங்கங்களும் 5 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் வேலையற்றப் பொறியாளர்களுக்கும் மற்றும் திறன் வாய்ந்த தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்து அதன் மூலம் வேளாண் பெருங்குடி மக்கள் பயன்பெற வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இணையமும், வட்டார மற்றும் மாவட்ட மையங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு

★ மண் தள்ளும் இயந்திரங்கள், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள், தெளிப்பான்கள், ஆயில் என்ஜின், பாறை துளையிடும் கருவி, ஏர் கம்பரஸர் மற்றும் விசைத் துளைகள் போன்றவற்றை வாடகைக்கு அளித்தல்.

★ வேளாண் மக்களுக்கும், அரசு துறைகளுக்கும் மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களுக்கும் வேளாண் கருவிகளைச் சீர்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றப் பணிகளைச் செய்தல்.

★ வேளாண் உபகரணங்கள் மற்றும் கைக்கருவிகள் ஆகியவற்றைத் தயாரித்து வேளாண் மக்களுக்கு விநியோகம் செய்தல்.





★ இரசாயன உரம், இயற்கை உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற தரமான வேளாண் இடுபொருட்களை விநியோகம் செய்தல்

★ ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், இரும்புக் கதவுகள் மற்றும் சன்னல்கள் தயாரித்து விநியோகம் செய்தல், நீர் தேக்கத் திட்டங்கள், தூர்வாரும் பணிகள், குளங்கள் ஏரிகளை ஆழப்படுத்தி சீரமைத்தல் போன்ற அரசு வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்குதல்.

★ டிராக்டர்களுக்கு டிரைலர்கள் தயாரித்தல், டீசல் பெட்ரோல் பங்குகள் அமைத்து உட்கிராமங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் செய்தல்.

★ தானியங்கள், பூச்சி, புழு, பூஞ்ஞானங்களால் பாதிக்கப்பட்டு சேதமடையாமல் இருக்கவும், வருடம் முழுவதற்கும் தேவைப்படும் தானியங்களைச் சேமித்து வைக்கவும் தானியக் குதிர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுதல் போன்ற பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இணையமும் சார்புடைய சங்கங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு பணிகளைச் செய்தாலும், இயந்திரங்களை வாடகைக்கு விடும் பணிகளில் இணையம் 10 புல்டோசர்களைக் கொண்டு தரிசு நிலங்களைச் சமன் செய்து சாகுபடிக்குக் கொண்டு வருவதுடன், தூர்வாரும் பணிகள் மற்றும் ஏரி குளங்களை ஆழப்படுத்திச் சீர் அமைக்கும் பணிகளுக்கு வாடகைக் கட்டணமாக மணிக்கு ரூ.750 வசூலிக்கப்படுகின்றன.

5 டிராக்டர் டோசர்களைக் கொண்டு சிறிய அளவில் நிலங்களைச் சமன்செய்து கரை அமைக்கும் பணிகளைச் செய்ய வாடகையாக மணிக்கு ரூ.225 பெறப்படுகின்றது.

வேளாண் மக்களுக்கும், அரசுத்திட்டங்களுக்கும், ஆழ்துளை விசைக் கருவியைப் பயன்படுத்தி ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க வாடகையாக ஒரு மீட்டருக்கு ரூ.160 பெறப்படுகின்றது.

5 சாலை உருளைகளைப் பயன்படுத்திக் கிராமப்புறச் சாலைகள் அமைக்க வாடகையாக நாள் ஒன்றுக்கு ரூ.1,000—ம் பெறப்படுகின்றது.

4 ஒருங்கிணைந்த நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களை விவசாயிகளுக்கு அளித்து வாடகையாக மணிக்கு ரூ.1,200 பெறப்படுகின்றது. இந்த நெல் அறுவடை இயந்திரங்களால் குறைந்த செலவில், குறுகிய காலத்தில் சேதாரமின்றி நெல் அறுவடை செய்து வேளாண் பெருங்குடி மக்கள் பெரிதும் பயன்பெற்று வருகின்றனர்.

சார்புச் சங்கங்களில் 10 டிராக்டர் டோசர்கள், ஒரு சாலை உருளை, 245 டிராக்டர்கள் மற்றும்

டிரைலர்கள், 81 பவர் டில்லர்கள், ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் கருவி, 4 பாறை உடைக்கும் கருவிகள், 50 ஆயில் என்ஜின் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ப குறைந்த வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. வேளாண் மக்களின் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளைச் சீர் செய்யவும் பராமரித்தலுக்கும், இணையத்தைச் சார்ந்த 118 சங்கங்களில் பட்டரை இயந்திரங்களான கடைசல் இயந்திரம், பற்றவைக்கும் இயந்திரம், துளையிடும் இயந்திரம், கிரைண்டர்கள், கம்ப்ரசர்கள் ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

12 மாவட்டச் சங்கங்கள் வாகனங்களைக் கழுவும் கருவி, ஹைட்ராலிக் ராம்ப் முதலியன கொண்டு சர்வீஸ் செய்யும் பணிகளையும், பழுது பார்க்கும் பணிகளையும் செய்து வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் மாதனூர் கிராமத்திலும், தஞ்சை மாவட்டத்தில் மல்லிப்பட்டிணம் கிராமத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்தில், மணல்மேல்குடி கிராமத்திலும், கடலூர் மாவட்டம் கடலூரிலும், டீசல் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட வேளாண் உபகரணங்கள் மற்றும் கைக்கருவிகளை இணையம் சார்பு மையங்களின் மூலம் உள்ளூர் தேவைகளுக்கேற்ப தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகின்றது. அரசு அனுமதித்துள்ள வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்களான தழைமிதிக்கும் கருவிகள், கடலை உடைக்கும் கருவிகள், நிலம் சமன்படுத்தும் தகடுகள், சேறு கலக்கும் கருவிகள், ஒரு வழிக் கலப்பைகள், கரை அமைக்கும் கலப்பைகள், கடப்பாரை, மண்வெட்டி மற்றும் மண்ணைக் கொத்தும் கருவிகள் போன்றவற்றைத் தயாரித்து விவசாயிகளுக்கு மானியத் தொகையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. விவசாயிகளின் தேவைக்கேற்ப குறைந்த விலையில் அரசு மானியத்துடன் கைத்தெளிப்பான்கள், விசைத்தெளிப்பான்கள், மற்றும் தானியக் குதிர்கள் வழங்கப்படுகிறது.

இணையத்தின் வணிக நடவடிக்கைகளை விரிவாக்கி விவசாயிகள் பயன் அடைய, இணையம் விழுப்புரத்தில் கிடங்கு வசதியுடன் கூடிய விற்பனை நிலையம் அமைத்துள்ளது. இதன் மூலம் ஆயில் என்ஜின் மற்றும் மின்மோட்டார் பம்பு செட்டுகள், கைத்தெளிப்பான்கள், விசைத் தெளிப்பான்கள், தார்ப்பாய்கள், பைப்புகள் அதற்குண்டான உபகரணங்கள், இந்தியா மார்க் கைப்பம்புகள், டிராக்டர் உதிரி பாகங்கள், டயர்கள், ட்யூபுகள் மற்றும் பேட்டரிகளை வேளாண் மக்களுக்கு தரம் குறையாமல் விநியோகம் செய்து வருகின்றது.

---

**கடன்பெற்று வேளாண்மை புரிகின்ற**
**முயற்சிக்கெல்லாம்**
**உடன்பட்டு உறுதுணையாய்**
**நிற்கின்ற அரசு காண்க!**

**- முதலமைச்சர் கலைஞர்**

கடந்த 1998—99—ஆம் ஆண்டில் காவேரி ஆற்றுக் கழிமுக மாவட்டங்களில் உள்ள 'ஜி' பிரிவு கால்வாய்களில் வளர்ந்திருந்த நெய்வேலி காட்டாமணிக் களைகளை நவீன தொழில்நுட்ப முறையில் குறுகிய காலத்தில் சுமார் 3344 ஹெக்டர் நிலப்பரப்பில் ரூ.2.54 கோடியில் வெற்றிகரமாகப் போர்க்கால அடிப்படையில் அடியோடு ஒழித்து வேளாண் உற்பத்தியில் பசுமைப் புரட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு களில் கடுமையான வறட்சி காலத்தில் மக்களுக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கிட அரசு போதுமான அளவு ஆழ்துளை கிணறுகளை அமைத்துச் சீரிய பணி செய்து முடித்துள்ளது. சென்ற ஆண்டில் பொதுப்பணித் துறையினரால் செயலாக்கப்பபட்ட காவேரி ஆற்றுப்பாசனக் கால்வாய்களில் தூர்வாரும் பணியினை இவ்விணையம் செய்து முடித்ததுடன் நடப்பு ஆண்டிலும் 38.5 இலட்சம் ரூபாய் மதிப்பிற்குத் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

எனவே அக்ரோபெட் என்று அழைக்கப்படும் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையமும் அதனைச் சார்ந்த சங்கங்களும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்குத் தானிய உற்பத்தியில் நல்ல வளர்ச்சியைக் காண்பதற்கும் பெரிதும் பாடுபட்டு வருகின்றன. தரமானப் பொருட்களைப் பெற்று நவீன இயந்திரங்களை உபயோகப்படுத்தி செலவினைக் குறைத்து, அதிக வருவாயைக் குறுகிய காலத்தில் பெற்றிட வேளாண் பெருங்குடி மக்கள் அந்தந்த மாவட்ட மற்றும் வட்டார மையங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயனடைகிறார்கள். ★

இமயம் முதல் குமரி வரை பரவிக் கிடக்கின்ற நம் இந்தியத் துணைக்கண்டம், அந்நியர் ஆட்சிப் பிடியிலிருந்த அந்த நாட்களில், சுதந்திர தாகத்தை நம் மக்களிடையே உருவாக்கிட பயணம் மேற்கொண்ட அண்ணல் காந்தியடிகள், 'அந்நிய ஆதிக்கத்தை ஒழித்திட அணி திரள்வோம் வாரீர்' – என சுதந்திர முழக்கமிட்ட அந்தக் காலகட்டத்தில், பெண் விடுதலை குறித்தும் அவர்களது உரிமை குறித்தும், பெண்கள் விழிப்புணர்வு பெறவேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்திக் கொண்டேயிருந்தார் என்றால் அது மிகையன்று.

அப்படிப்பட்ட தருணங்களில் "காலங்காலமாகவே நம் நாட்டுப் பெண்களை நம் சமூக அமைப்பில் ஆண்களுக்குக் கீழாகவே வைத்து அடிமைப்படுத்தியே வருகிறோம். உரிமை பெற்று வாழக் கருதுகிற ஒரு சமூக அமைப்பில் இது ஏற்புடையதன்று; கண்டிப்பாகக் களையப்பட வேண்டிய ஒரு சமூக அவலமாகும்" என்று தேசப்பிதா காந்தியடிகள் குறிப்பிடத் தவறவில்லை.

பால்ய விவாகம், பெண்கல்வி, வரதட்சிணை ஒழிப்பு ஆகியவற்றைச் சிலாகித்துப் பேசி பெண்களிடையே ஒரு புதிய எழுச்சியை உருவாக்கக் கருதிய காந்தியடிகள், "சகிப்புத்தன்மையின் சிகரமாக விளங்குகின்ற நம் இந்திய மாதர்கள், உரிமைகளைக் கோரிப் பெறாதது மட்டுமல்லாமல் தங்களுடைய சக்தியின் ஆற்றலை உணராமலேயே பல நூற்றாண்டுகளாக ஒரு இயந்திரத்தனமான வாழ்க்கை முறையிலேயே உழன்று கொண்டிருக்கிறார்களே" என்று தன் வேதனையை வெளிப்படுத்தவும் தவறவில்லை.

"புறத்தோற்றத்தில் மட்டுமே என்னால் ஆண்களையும், பெண்களையும் வித்தியாசப்படுத்திப் பார்க்க முடிகிறதேயன்றி வேறு வகையில் என்னால் பிரித்துப் பார்க்க முடியவில்லை; ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கப்பட வேண்டும்" என்று தன்னுடைய அவாவை அண்ணல் காந்தியடிகள் வெளிப்படுத்தியுள்ளார்.

பெண்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமெனில், முதலில் மூடப்பழக்க வழக்கங்களையும் ஆணுக்குக் கீழ்தான் பெண் என்ற தாழ்வு மனப்பான்மையும் அறவே விட்டொழிக்கப்பட வேண்டுமென்று" தந்தை பெரியார் அறைகூவல் விடுத்தார்.

"பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாக, உரிமை பெற்றவர்களாக மாறினால்தான் சமுதாயமும், நாடும் அறிவார்ந்த நிலையை எட்டி ஓர் உன்னத வளர்ச்சியைப் பெற்றதாக இருக்குமென்று" பேரறிஞர் அண்ணா வலியுறுத்தியுள்ளார்.

காந்தியக் கனவுகளை நனவாக்கிடும் வகையிலும், தந்தை பெரியாரின் சிந்தாந்தங்களையும் பேரறிஞர் அண்ணாவின் அரிய இலட்சியங்களையும் செயலாக்கங்களாக உருப்பெறச் செய்திட முதல்வர் கலைஞர் அவர்களின் இடையறா உழைப்பினை எவர்தான் மறுத்திடுவர்.

அந்த அடிப்படையில், மகளிர் முன்னேற்றத்திற்கென கலைஞரின் சிந்தையில் உதித்த திட்டங்களாக **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்றப் பெண்களின் திருமண**

# "பெண்டிர் பெருஞ்சிறப்புப் பெற"
# கலைஞர் அரசின்
# மகளிர் திட்டம்

**– இரா. பரதன்,** எம்.ஏ.,

நிதியுதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் – விதவை மறுமணத் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், தமிழக அரசு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பயிற்சி அளித்தல், ஆதரவற்ற பெண்களின் சமூக – பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டும் வகையில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சிந்தையில் உதித்த இத்தகு திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளையில், பெண் படித்தவளாக, விழிப்புணர்ச்சி பெற்றவளாகப் பரிணாம வளர்ச்சியினைப் பெற்றிருத்தல் மட்டுமே அவள் சமூக நிலையில் சரிநிகர் சமமாகக் கருதப்படுவாளா? என்று வினா எழுப்பினால்? அது கேள்விக்குறியாகவே தொக்கி நிற்கும்.

ஏனெனில் நம்முடைய சமூக அமைப்பில் அது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் 'சமூக அந்தஸ்து' என்பது அவரவரது பொருளீட்டும் தன்மையை அல்லது சொத்து உடைமையை அடிப்படையாகக் கொண்டதாக மட்டுமே அமைந்து விடுகிறது என்பது மறுக்க இயலா ஒன்றாகும்.

எனவே தான் முதல்வர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபடி, **பெண்ணைப் படித்தவளாக – விபரம் அறிந்தவளாக உருவாக்குவதில் காட்டுகிற அதேவேகத்தைப் பொருளியல் நோக்கில், பெண்ணை உரிமையுடையவளாக ஆக்குவதில் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் காட்டி வருகிறார்.**

நம்முடைய அமைப்பில் காலங்காலமாகச் 'சொத்துரிமை' என்பது முதலில் ஆணுக்குத் தான் என்ற நிலை மட்டுமல்லாமல் குடும்பத்திற்கு வேண்டிய அடிப்படை தேவைகளை ஆணின் சம்பாத்தியத்தை அல்லது ஆணின் சொத்துடைமைகளிலிருந்து பெறப்படுகின்ற பொருளாதாரத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற நிலை; இவைதான் மேலோங்கி நிற்கின்றன. இதனாலேயே குடும்ப அமைப்பில் 'ஆண் எடுத்ததுதான் முடிவு'; 'இதை ஏற்றுக்கொள்ள வேண்டியது பெண்ணின் கடமை' என்பது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு, பெண்ணை ஆணுக்குக் கீழ் என்ற நிலையில் அழுத்தி வைக்கப்படுகிற அவலம் தொடரத்தான் செய்கிறது. எனவே, எடுக்கின்ற காரியங்களை ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுத்து, தனக்கே உரிய புயல்வேக அடிப்படையில் செயல்வடிவம் தருகிற ஆற்றலைப் பெற்ற





முதல்வர் கலைஞர் அவர்கள் மகளிரை உரிமை பெற்றவர்களாக ஆக்குவதில் எடுத்த சிரத்தையின் அடிப்படையில்தான், இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக **பெண்களுக்குச் சொத்துரிமை தரும் சட்டம், வேலைவாய்ப்பில் 30% பெண்களுக்கான தனி ஒதுக்கீடு** என்பன தமிழகத்தில் சட்ட வடிவமாக்கப்பட்டுள்ளன.

பெண்ணுக்கு உண்மையிலேயே உரிய சமூக அந்தஸ்து கிட்டவேண்டுமெனில், முதலில் குடும்பத்தில் அவளுடைய நிலை உயர்த்தப்பட வேண்டும். என்றைக்குக் குடும்பச் சுமையை ஏற்பதில் ஆணுக்கு நிகராகத் தோள் கொடுக்கத் தயாராகிறாளோ! அன்றுதான் அவளுடைய நிலை உயர்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறாயின் குடும்பத் தலைவியானவள் தன்னுடைய அன்றாட இல்லப்பணிகளை முடித்து எஞ்சியிருக்கிற நேரத்தைப் பொருளீட்டப் பயன்படுத்த வேண்டும். இதை நடைமுறைப்படுத்துவது எப்படி? என்ற வினாவிற்கு விடையாக முதல்வர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் **தமிழ்நாடு பெண்கள் திட்டம்.**

ஏற்கெனவே 5 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட 'ஐபாட்' எனும் பன்னாட்டு நிதிநிறுவன உதவியுடன் செயற்படுத்தப்பட்ட திட்டம் 1998இல் முடிவுற்றது. எனினும், இத்திட்டம், கிராமப்புறப் பெண்களுக்கு நல்வாய்ப்பாக இருக்குமென்பதைக் கண்டறிந்த முதல்வர் கலைஞர் அவர்களால், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 'தமிழ்நாடு மகளிர் திட்டம்' என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டு ரூ.8 கோடி நிதிஒதுக்கீடும் செய்யப்பட்டது.

மகளிர் திட்டம் இந்நிதியாண்டில் ரூ.33 கோடி நிதி ஒதுக்கீட்டில், தமிழகத்தில் (சென்னை தவிர்த்து) 28 மாவட்டங்களிலும் செயற்படுத்தப் படுகிறது.

இவ்வரிய திட்டத்தின் பயனாக, ஒவ்வொரு சிற்றூரிலும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இதில் 12 முதல் 20 பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப் படுகின்றனர். தங்களுக்குள் தகுதியுள்ள பெண்களை, ஊக்குநராகவும், பிரதிநிதியாகவும் தேர்வு செய்து கொள்கின்றனர். தொண்டு நிறுவனங்களின் மூலம் உரிய பயிற்சிகளைப் பெறுகின்றனர்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், எந்தவொரு புதிய திட்டத்தையும் கிராமப்புறங்களுக்கு எடுத்துச் சென்றால் முதலில் கேட்கப்படுவது யாதெனில் இதில் மானியம் எவ்வளவு கிடைக்கும்? எவ்வளவு கடன் கிடைக்கும்? என்பதாகத்தான் இருக்கும். ஆனால், மாறாக, பெண்கள் திட்டத்தில் முதலில் பயிற்சி, அடுத்தது குழு உறுப்பினர்கள் தங்களது சேமிப்புப்

பணத்தை குழுவில் சேர்த்து, குழுச் சேமிப்பை உருவாக்கவேண்டும் என்பதுதான்.

அவ்வாறு சேமிக்கப்பட்ட பணத்தைக் குழு உறுப்பினர்களது அவசியத் தேவைகளுக்குக் குறைந்த வட்டியில் கடன்களாகத் தரப்படுகின்றன. இந்த முழுமுதற் செயற்பாடு, அதாவது சேமிப்புக் கணக்கினை வங்கியில் தொடங்கப்பட்ட பின்னர்தான் அந்தக் குழு ஒரு முழுமையான அங்கீகாரம் பெற்ற குழுவாகக் கருதப்படுகிறது.

அதன்பின்னர், குழு உறுப்பினர்களின் ஏகோபித்த முடிவிற்கேற்ப தனிநபர் கடன்கள் வங்கிகள் மூலம் பெறப்பட்டு சுயதொழில்களை உருவாக்கிக் கொள்ள முடிகிறது.. வாய்ப்பிற்கேற்பக் குழுவாகவும் சுயதொழில்கள் தொடங்கப்படுகின்றன.

கடைக்கோடியில் இருக்கிற குக்கிராமத்துப் பெண்ணும் சுயஉதவிக்குழுவில் அங்கம் பெற்றபின், வங்கிக்குச் செல்ல முடிகிறது. ஒன்று சேர்ந்து திட்டமிட முடிகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக அவசர அவசியத்திற்கு – எந்த நேரமானாலும் குழுவிலிருந்து குறைந்த வட்டிக்குப் பணம் பெறமுடிகிறது என்ற இந்த மகோன்னத நிலை எண்ணிப் பார்த்திட முடியாத ஒரு சுயநம்பிக்கையைக் கிராமபுறத்துப் பெண்ணிடம் உருவாக்கியிருக்கிறது என்பது ஒரு வியத்தகு பௌதிக மாற்றமல்லவா?

### மகளிர் திட்டம்

மதுரை மாவட்டம், ஒத்தக்கடைக்கு அருகிலுள்ள பனைக்குளம் என்னும் கிராமம். அச்சிறூரில் மல்லிகை, ரோஜா, தாமரை, காளியம்மன் என்னும் பெயர்களில் 4 குழுக்கள். அவற்றில் 72 கிராமப்பெண்கள் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள். இக்குழு உறுப்பினர்களைச் சந்தித்தபொழுது குழு உறுப்பினர் இதயத்துனிஸா கூறுகிறார் ''குழுக்கள் அமைக்கப்பட்டவுடன் முதல் பணியாக குழு உறுப்பினர்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குக் கையெழுத்துப் போடப் பழகிக் கொடுத்தோம். படிப்படியாக அவர்களுக்கு வாசிப்புத் தெரியுமளவுக்குச் சொல்லித்தர முயற்சிக்கிறோம். குழுவில் சேர்ந்ததினால் எங்களுக்கு ஒரு சுயநம்பிக்கை கிடைத்திருக்கிறது. என்னை எடுத்துக் கொண்டால் , நான் கணவனால் கைவிடப்பட்டவள். ஒரு ஏழை முஸ்லிம் குடும்பத்தில் பிறந்த எனக்கு இந்தத்திட்டம் இல்லாதிருந்தால் தனிமைக்குத் தள்ளப்பட்டிருப்பேன். ஆனா, அமைப்பு இருக்குறதுனால எனக்குப் பெரிய தைரியமே வந்திருக்கு. நல்லது, கெட்டதுனா அவசர நேரத்துல பணத்துக்காக 'அண்டா–குண்டா'வைத் தூக்கிக்கிட்டு அநியாய வட்டிக்கு அடமானம் வைக்கனும்னு அவசியமில்லை. மன்றப் பொது நிதியிலிருந்து குறைந்த வட்டிக்குக் கடன் கெடச்சிருது" என்று நம்பிக்கையோடு தெரிவித்தார்.

மேலும், இக்குழு உறுப்பினர்கள் அநேகமாக விவாசயத் தொழில் செய்யும் கூலிகள் என்ற நிலையிலிருப்பவர்கள். குழு நிதிக் கையிருப்பின் தைரியத்தில் 2 ஏக்கர் நிலத்தை ஒத்திக்கு எடுத்து பெண்கள் குழுவே விவசாயம் செய்துள்ளது. மேலும், வங்கி உதவியோடு டிராக்டர் வாங்கலாம் என்றிருக்கிறோம் என்கிறார் உறுப்பினர் திருமதி. பாண்டீஸ்வரி. "டிராக்டரை வாங்கி என்ன செய்ய போகிறீர்கள்?" என்று கேட்டால், வாடகைக்கு விட்டுக் குழுவிற்கு வருமானம் சேர்க்கப் போகிறோம் என்று கூறிய தைரியம் எப்படி? எங்கிருந்து? உற்பத்தியானது என்பது, வியக்கவைக்கும் செய்தியாகும்.

இராமநாதபுரம் மாவட்டம் தேவிப் பட்டணத்திற்கு அருகில், தொலைதூரக் கிராமமான மாதவனூர், அந்தச் சிற்றூரிலும் 4 சுயஉதவிக்குழுக்கள் உள்ளன. அதில் 80 ஊரகப் பெண்கள் அங்கம் வகிக்கின்றனர். முகவை மாவட்டத்து மண்வாசனையோடு கூடிய அந்தக் கரிசல் கிராமத்துப் பெண்கள், ஒரே குரலாக "எங்கள் குழந்தைகள் அனைவரையும் படிக்க வைக்கிறோம்" என்றது செவிக்குத் தேனல்லவா?

அது மட்டுமல்லாமல் அந்த ஊராட்சியின் தலைவர் திருமதி. தேவி சந்திரபோஸ், இம்மகளிர் சங்கத்தில் ஒரு பழைய உறுப்பினர். மகளிர் குழுவில் இவர் அங்கம் வகிப்பதால் ஊராட்சியின் செயல்பாடுகளை மகளிரே வைத்துள்ளனரோ? என வியக்கவைக்கிறது. காரணம் மகளிர் அமைப்பில் முடிவு செய்து, ஊராட்சி மன்றத் தீர்மானமாகி, அவ்வூரின் ஊரணியைச் சுற்றி இரும்பு முள்வேலி போடப்பட்டதைக் காட்டியபொழுது, இந்த மகளிர் கூட்டம் குழுச்செயற்பாடு என்ற நோக்கில் (பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுகிறது என்றாலும்) வீட்டுப்பயனுக்கு அதாவது துணிதுவைக்க, பத்துப்பாத்திரம் தேய்க்க எடுத்துச் செல்லும் ஊரணித் தண்ணீர் கூடச் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு அவர்களிடையே விரவியிருப்பது நம்மை ஆச்சரியத்திலாழ்த்துகிறது.

திருப்புல்லாணி ஒன்றியம், முத்துப்பேட்டை கிராமத்தில், சகாய அன்னை மகளிர் மன்றத்தைச் சேர்ந்த பெண்களும், மீனவர் குடியிருப்பில் இந்திரா மன்ற உறுப்பினர்களும், ஒரே வண்ணத்தில் சீருடையோடு குழுமியிருந்தார்கள். ஏன் இந்தச் சீருடை என்று கேட்டால், "நாங்கள் ஒன்று சேர்ந்திருக்கிறோம்; எங்களுக்குள் 'சாதி–மத' வேற்றுமையில்லை என்பதை உணர்த்தவே இந்தச் சீருடை" என்று அவர்கள் கூறியது மெய்சிலிர்க்கச் செய்தது.

இந்திரா மன்ற மீனவப் பெண்கள் குழுமியிருந்த, அவர்கள் குடியிருப்புப் பொதுஇடத்தைக் கண்ணுற்றபொழுது, தங்கள் இல்லங்கள், அதைச்

சுற்றியுள்ள பொது இடங்கள், அவைகளின் சுத்தமான பராமரிப்பு ஆகியவை இது மீனவக்குடியிருப்பா? என வியக்க வைத்தது.

அதுமட்டுமல்ல, அவர்களோடு கலந்துரையாடியபோது, அக்குடியிருப்பில் ஆண்கள் தானுண்டு, தன் வலைபின்னும் வேலையுண்டு என்று அவர்களது பணிநிமித்தக்கவனமும், அந்த மீனவக் கிராமத்து அமைதிச்சூழலும் அங்கே மகளிர் மன்றம் என்ற மந்திரம் செய்த மாயம் தான் என்னே! என்று நம்மைப் பிரமிக்க வைத்தது உண்மையே.



இது ஒரு புறமிருக்க, அந்த ஏழை மீனவக் கிராமத்துப் பெண்கள், இந்த அமைப்பில் சேர்ந்ததால் ஏற்பட்ட பலன் என்ன? என்று கேட்டால் "வலையையும், படகையும் வாடகைக்கு எடுத்து, சம்பாதித்ததில் 2/3 பங்கு போக மீதிதான் வீட்டுக்குவரும். ஆனால், மன்ற உறுப்பினர்களாகி, மகளிர்க்கு வலை வாங்கக் கடனுதவி கிடைத்துள்ளதால் 70 சதவிகிதம் வீட்டிற்கு வருமானம் கிடைக்கிறது" என்ற அவர்களது பதில் திருப்திகரமாக வெளிவந்தது. அதோடு மட்டுமன்று, அடுத்த திட்டம் என்னவென்றால், "சொந்தமாகப் படகுவைத்துக் கொள்ளப் போகிறோம். அப்பொழுது 100% வருமானமும் வீட்டுக்கு வரும்" என்ற அவர்களது உரத்த குரலான பதிலில் நம்பிக்கை மிளிர்கிறது.

எனவே முதல்வர் கலைஞரால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மகளிர் திட்டம் குக்கிராமத்துப் பெண்ணின் அன்றாட வாழ்க்கையில் பல அற்புதங்களை சாதித்துள்ளது. அவர்களிடையே ஒற்றுமை; ஒருமித்த முடிவு; நிலைக்கேற்ற வருமானம் பெறத்தக்க வாய்ப்பு; தேவைகளறிந்து திட்டமிடல்; உள்ளூர் நலம் பெற ஊர்நலப் பொதுச்சிந்தனை; வருமான நிலையில் புதிய நம்பிக்கை; எதையும் எதிர்கொள்ளலாம் என்ற உறுதி ஆகிய புதிய பரிமாணத்தையும், ஒரு புதிய எழுச்சியையும் கிராமத்து பெண்களிடையே உருவாக்கியிருக்கிறது.

ஆம்! இது வெறும் மிகையல்ல, முற்றிலும் உண்மையே. ஆணுக்கு நிகராகப் பெண்ணின் நிலை உயரவேண்டும்; அவளது ஆற்றல் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்; அவள் முழு உரிமை பெற்றவளாகப் பரிணமிக்க வேண்டும் என்ற நோக்கில் முதல்வர் கலைஞர் அறிவித்து நடைமுறைப்படுத்துகின்ற இதுபோன்ற வழிகாட்டும் திட்டங்களால் 'பெண்டிர் பெருஞ்சிறப்புப் பெறுவர்' என்பது உறுதியல்லவா?

**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்.**

பிறருக்கு உதவிடும் பெருந்தன்மையாம் ஒப்புரவு உடையவனிடம், செல்வம் சேர்ந்தால் அது ஒரு நல்ல மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து..*

# பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

சமூக நலத்துறையில் இடம் பெறும் பல்வேறு நலத் திட்டங்களில் பெண்களுக்காகப் பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை அளிப்பது என்பது முக்கியமான பணியாகும்.

இக்கூட்டுறவு சங்கங்களின் முக்கிய நோக்கம் குடும்ப வருட வருமானம் ரூ.12,000/—க்கும் குறைவாக அதாவது வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள பெண்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை அளிப்பதாகும்.

இக்கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் யாவும் அரசு சார்ந்த திட்டங்கள் மூலம் விற்பனைச் செய்யப்படுகிறது. இதனால் நிலையான சந்தை வாய்ப்பு/வருமானம் பெற்று வருகின்றனர்.

## மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்

1. மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் .......... 78
2. ஊட்டச்சத்து மற்றும் இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் .......... 26
3. சாக்குக்கட்டித் தயாரிக்கும் மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் .......... 5
4. பெண்கள் எழுதுபொருள் தயாரிக்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் .......... 20
5. இதர சங்கங்கள் .......... 6

மொத்தம் .......... 135

## தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

சமூக நலத்துறையின் கீழ் 78 மகளிர் தையல் கூட்டுறவு சங்கங்கள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் 37,633 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயனடையும் 1 முதல் 8—ஆம் வகுப்புப் பள்ளி மாணவ மாணவியர் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் பயிலும் மாணவ மாணவியர் ஆகியோருக்கு வழங்கப்படும் சீருடைகள், இந்த 78 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வழங்குகின்றன.

இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தானியங்கி துணி வெட்டும் கருவிகள் அரசு இலவசமாக வழங்கியுள்ளது. துணிகள் அனைத்தும் அந்தந்த மாவட்டத்திலுள்ள துணி வெட்டும் மையத்தில் வெட்டப்பட்டு, வெட்டப்பட்ட துணிகளைச் சீருடைகள் தைப்பதற்காக இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

1998—99—ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூ.463.06 இலட்சம் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குத் தேவையான துணிப்பைகள் / விவசாயத் துறைக்குத் தேவையான துணிப்பைகள் மற்றும் இதர வகைகளில் ஆர்டர்கள் பெற்று உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

## ஊட்டச்சத்து மற்றும் இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்)

ஆறு மாதங்களுக்கு மேல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், கருவுற்றப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் கீழ் உள்ள மையங்களுக்குத் தேவையான இணை உணவுகள் இத்துறையின் கீழுள்ள 26 இணை உணவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தயாரித்து வழங்கப்படுகிறது. 1998—99 ஆம் ஆண்டு 7724.03 மெட்ரிக் டன் சத்தணவு தயாரித்து வழங்கியதற்குச் சுமார் ரூ.44.76 இலட்சம் இச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சுமார் 1,652 மகளிர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் செயல்படுத்தத் தேவையான நிதி உதவிகளை உலக வங்கி ஸ்வீடன், சர்வதேச நிதி உதவி நிறுவனம், இந்திய அரசு மற்றும் தமிழக அரசு அளித்து வருகிறது.

## சாக்குக்கட்டித் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

இத்துறையின் கீழ் தற்பொழுது 5 சாக்குக்கட்டித் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் 132 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். 1998—99—ஆம் ஆண்டில் ரூ.0.05 இலட்சம் கூலியாகச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## எழுதுபொருள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

இத்துறையின் கீழ் 20 எழுது பொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் 13 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தங்கள் வியாபாரத்தை



அபிவிருத்திச் செய்யும் பொருட்டு அச்சு இயந்திரம் இருப்பதோடு இடும் இயந்திரம் மற்றும் காகித உறை தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை அரசு செலவில் வழங்கப்பட்டன. மதிய உணவுத்திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் அனைத்துப் பதிவேடுகளும் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மற்றும் இதர அரசு நிறுவனங்களுக்குத் தேவையானப் பதிவேடுகள் இச்சங்கத்தின் மூலம் உற்பத்திச் செய்யப்பட்டு விற்பனைச் செயயப்பட்டு வருகிறது.




இச்சங்கங்களில் சுமார் 1,**014** மகளிர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு ***1998–99***–ஆம் ஆண்டில் ரூ.***5.12*** இலட்சம் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.



## இதர சங்கங்கள்

### கயிறு சங்கங்கள்

தஞ்சை மாவட்டத்தில் நல்லூரிலும், திரு. நாகேஸ்வரத்திலும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன. இதில் நல்லூரில் உள்ள சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிருக்குக் கயிறு தயாரிக்கும் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் கீழ் உள்ள **3** உற்பத்தி நிலையங்கள் மூலம் தென்னை நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுப் பின்னர் அவர்களைச் சங்கத்தில் உறுப்பினர்களாக்கி வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இந்தியக் கயிறு வாரியம் இச்சங்கத்திற்கு **20%** தள்ளுபடியில் விற்பனைச் செய்ய ஊக்கம் அளித்து வருகிறது. இவ்வாரியம் நல்லூரில் மாதிரி கயிறு கிராமம் அமைக்கத் திட்டமிட்டு ரூ.***2.95*** இலட்சம் வழங்கியுள்ளது. மேற்கண்ட இரண்டு கயிறு சங்கங்களில் **1000** மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். ***1998–99***–ஆம் ஆண்டில் ரூ.***3.41*** இலட்சம் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர மேலும் **4** சங்கங்கள் வேறு சில தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளன. அவைகளின் ஒட்டு மொத்த செயல்பாடுகளில் முன்னேற்றம் வேண்டியிருப்பதால் அவைகளின் செயல்பாட்டை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ★

காவிரி நதி பாயும், இயற்கை எழில் கொஞ்சும், தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்றழைக்கப்படும் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது, தஞ்சாவூர் கலைத்தட்டுத் தயாரிப்போர் குடிசைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம். இச்சங்கம் தஞ்சாவூர் மாவட்டத்தில் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. தஞ்சாவூர் கலைத்தட்டுக்களை உலகிலேயே ஆசியா கண்டத்தில் இந்தியாவில் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும்தான் தயார் செய்கிறார்கள்.

இந்தக் கலைத்தட்டுச் சோழவள நாட்டினை ஆண்ட மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜி ஆண்ட காலத்திலேயே வடஇந்தியாவில் இருந்து கொணரப்பட்டது. அப்போது தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களைக் கொண்டு புராணக் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள், இயற்கைக் காட்சிகள் பித்தளைத் தகட்டில் பதியப்பட்டு வந்தது.

இதுவே பொருளாதாரக் காரணத்தால் பித்தளைத் தகட்டில் வெள்ளி செம்பினால் ஆன உருவங்களைப் பதியப்பட்டு வந்தன. இதனைக் கம்மாள இனத்தைச் சார்ந்த விஸ்வகர்மா வகுப்பினர் செய்து வந்தார்கள். இக்கலை வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

## அமைப்பு

வரலாற்றுச் சிறப்புமிக்க அபூர்வக் கலையைக் காக்கவேண்டி, இச்சங்கம் 1957—இல் பதிவு செய்யப்பட்டு 24.11.57 முதல் செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் இச்சங்கத்தில் 29 உறுப்பினர்கள் இருந்தனர். தற்பொழுது 176 உறுப்பினர்கள் உள்ளனர்.

## நிர்வாகம்

1996—97—ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் மூலம் 10 பேர் கொண்ட நிர்வாகக் குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டு இச்சங்கத்தை நிர்வாகம் செய்து வருகிறது.

## செயல்பாடு

உறுப்பினர்களிடமிருந்து கலைத்தட்டுக்கள் கொள்முதல் செய்து சங்கம் விற்பனையை மேற்கொள்கிறது. இதற்குச் சங்கம் கச்சாப் பொருட்களை வழங்குவது இல்லை. இது வெறும் கொள்முதல் மற்றும் விற்பனைச் சங்கம். இதில் கிடைக்கும் இலாபத்தில் நிர்வாகச் செலவு போக மீதமுள்ள நிகர இலாபத்தில் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்த தொகைக்கேற்ப இலாபம் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின்படி பங்கிடப்படுகிறது.

உறுப்பினர்களிடமிருந்து கலைத்தட்டுக்களைக் கொள்முதல் செய்து பூம்புகார் விற்பனை நிலையங்கள், சென்ட்ரல் காட்டேஜ் இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா, அரசு நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றிற்குக் கடன் விற்பனை செய்து வருகிறது.

தமிழ்நாடு சட்டப்பேரவை வைர விழாவின்போது, தமிழக அரசிற்கு 1050 எண்ணிக்கைக் கொண்ட கலைத்தட்டுகள் செய்துக் கொடுக்கப்பட்டது.

உறுப்பினர்களுக்கு அவர்களின் பங்குத் தொகையையும், பெறப்பட்ட ஆர்டரையும் அனுசரித்துக் கலைத்தட்டுக்கள் செய்ய முன்பணம் வழங்கப்படுகிறது. சங்கம் நடைமுறை மூலதனத்திற்காகத் தாய்கோ வங்கியில் காசுக்கடனாக ரூ.3 இலட்சம் பெற்று இயங்கி வருகிறது.

## சிறப்புச் செய்திகள்

1. 1980—81—ஆம் ஆண்டு மாநிலத்தில் சிறந்த சங்கமாகத் தேர்வு




2. 1986—87—ஆம் ஆண்டும், 1988, 1991, 1996, 1997—98—ஆம் ஆண்டுகளிலும் மாநிலத்தில் சிறந்த சங்கமாகத் தேர்வு.

இச்சங்கம் தொடர்ந்து இலாபகரமாக இயங்கி வருகிறது. தற்பொழுது வியாபாரத்தைப் பெருக்க வேண்டி கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் விழாக்களுக்கும், கூட்டுறவு வார விழாவிற்கும் இச்சங்கத்தில் கலைப்பொருட்களுக்கு முன்னுரிமை தந்து வாங்கி வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கலைத்தட்டுக்கள் பொருத்திய ஸ்டாண்டுகள், கலைக் கடிகாரங்கள், ஷீல்டுகள், சாவிக் கொத்துகள், கலைக்குடம், கலைச்சொம்பு, கலை நகைப்பெட்டி ஆகியவைகளை இச்சங்கம் விற்பனைச் செய்து வருகின்றது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் வழங்கும், மாநில அளவில் வழங்கும் விருதுகளைச் சங்கத்தில் கொள்முதல் செய்தால் விற்பனையைப் பெருக்க உதவவும் முடியும் என்பது திண்ணம். ★



தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

மு. கருணாநிதி
முதலமைச்சர்.

நாள்: 12-12-1999.

அன்புடையீர்,

பல்வேறு மாவட்டங்களில் மகளிர் குழுக்கள் செயல்படும் மாண்பைக் கண்டேன்; மகிழ்ச்சி கொண்டேன்.

பெருந்தகை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் கண்ட கனவு இந்த ஆட்சியில் நிறைவேறி பெண்கள் தம் உரிமைகளை வென்றெடுக்கும் ஒப்பற்ற நிகழ்வை என் கண்களாலேயே காணும் பெரும் பேறு பெற்றேன்.

தமிழக அரசு மகளிருக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவர் தம் வாழ்வில் ஒளியூட்டி, அவர்கள் மேன்மையடைய வேண்டும் என்று அயராது பாடுபடுவது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த உன்னத நோக்கம், உயரிய இலக்கு, பெண்கள் குழுக்களாக சேர்ந்து ஒருமித்த உணர்வோடு செயல்படும்போது தான் கைகூடும் என்பதால் தான் மகளிர் குழுக்களை அமைப்பதை இந்த அரசு முனைப்பாக செயல்படுத்தி வருகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பயன்படுத்தி இந்த இலட்சியப் பாதை அமைந்த வண்ணமிருக்கிறது.

நீங்கள் அனைவரும் சிறு சேமிப்பு, தொழில் முனைப்பு என்பதோடு நின்றுவிடாமல், ஆர்வமாக சுகாதாரம், நலவாழ்வு, தாய்-சேய் நலம், தடுப்பூசிகள், ஐயோடின் கலந்த உப்பு, உடல் நலம் பேணுதல், ஊட்டச் சத்து போன்றவற்றையும் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை கூடும்போது கலந்து பேச வேண்டும். வலிவும், பொலிவும் பெற்ற பெண்கள் சமுதாயம் அமைவது பற்றி உங்கள் கூட்டங்களில் பேசித் தெளிவு பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மகளிர் குழுக்கள் முன்வந்தால் நியாய விலைக் கடைகளை நடத்தும் பொறுப்பை ஒப்படைக்கவும் ஆணை பிறப்பித்திருக்கிறேன்.

அரசின் இன்னபிற திட்டங்களையும் முழுமையாக உணர்ந்து மற்றவர்களுக்கு நீங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த, மக்கள் சாசனத்தையும், மற்ற நலத் திட்டக் கையேடுகளையும் மகளிர் குழுக்களுக்குக் கட்டாயம் விநியோகிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருக்கிறேன்.

மகளிர் குழுவில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பொருளாதாரத்திலும் சமூக மேம்பாட்டிலும் உயர்ந்து தமிழகம் சாதனை படைக்க உங்கள் ஒவ்வொருவருக்கும் என் வாழ்த்துகளை இக்கடிதத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். 21-ஆம் நூற்றாண்டில் தமிழக மகளிர் தரணிக்கே வழி காட்ட வேண்டுமென்பது எனது தணியாத ஆவல்.

நல்வாழ்த்துகளுடனும், நம்பிக்கையுடனும்

அன்புள்ள,

(மு.கருணாநிதி)

# மகளிர் சிறுவணிகக் கடன் உதவித் திட்டம்

*"எங்களுக்கு விடிவு காலம் பிறந்தது"*

*"என்னால் இப்பொழுது சேமிக்கவும் முடிகிறது"*

*"பையனை நல்லா படிக்க வைக்கப் போறேன்"*

*"முதலமைச்சர் மகராசனா இருக்கணும்"* என்று *மகளிரிடையே மாபெரும் வரவேற்பு*ப் பெற்ற

''மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்'' இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில் தான், 1.1.1999 அன்று *முதல்வர்* கலைஞர் அவர்களால் சென்னை, சேப்பாக்கத்தில் தொடங்கி வைக்கப் பட்டது.

இத்திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மகளிர் பலர் மிகவும் பயனடைந்து வருகிறார்கள். இதனால் அவர்களுடைய சிறுவியாபாரம் செழிக்க ஆரம்பித்துள்ளது. அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது.

மகளிர் சிறுவணிகக் கடன் உதவித் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளப் பலரை அவர்கள் வியாபாரம் செய்யும் இடத்துக்கேச் சென்று பேட்டி கண்டோம். அப்போது அருகே வியாபாரம் செய்து கொண்டிருந்த பெண்கள் பலரும் ஓடி வந்து இத்திட்டம் குறித்து ஆவலுடன் விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

பொதுவாக, சிறு வியாபாரம் செய்யும் மகளிர் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்துள்ள இத்திட்டம், பலருக்கும் இன்று பயனளித்து வருகிறது. ''ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்கிற வகையில், இத்திட்டத்தினால் பயன்பெற்ற மகளிர் சிலரை நேரடியாகச் சந்தித்தோம். அவர்கள் தாம் பெற்றப் பயனை நம்மோடு பகிர்ந்து கொண்டார்கள்.

★ ★ ★

சென்னை, புரசைவாக்கம் கூட்டுறவு நகர வங்கியில், மகளிர் சிறுவணிகக் கடன் உதவி பெற்று கைக்குட்டை வியாபாரம் செய்து வரும் 55 வயதான திருமதி டி.டி.வசந்தா அவர்கள் கடந்த 22 ஆண்டுகளாக இந்த வியாபாரம் செய்து வருகிறார். அவர் கூறுகிறார்:

''இந்த வியாபாரம் தொடங்கிய போது, பணத்துக்காக ரொம்பவும் கஷ்டப்பட்டேன். பிறகு 'தண்டல்' வாங்கி வியாபாரம் செய்து வந்தேன். ரூபாய் ஆயிரம் கடன் வாங்கினேன். தினமும் பத்து ரூபாய் வட்டி கொடுக்க வேண்டும். ஆனால் எனக்குக் கட்டுப்படி ஆகலே. அசல் மட்டும் அப்படியே இருந்தது. என்ன செய்யறதுன்னே புரியாம இருந்தபோது, இன்னொரு தண்டல்காரரிடம் இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கினேன். அவர் முன்னூறு ரூபாய் எடுத்துக் கொண்டு, ஆயிரத்து எழுநூறு ரூபா கொடுத்தார். தினசரி ரூபாய் இருபது வீதம், நூறு நாட்களுக்கு இந்தத் தொகையைக் கட்டி வந்தேன். கட்டாம போனா, வாங்கின தொகைக்கும் சேர்த்து வட்டி கட்டணும். இதனால் நான் ரொம்பவும் கஷ்டப்பட்டேன். பல சமயங்களில் சாப்பாட்டுக்குக் கூட வழி இல்லாம இருந்தது. அது மட்டுமல்ல, குடியிருந்த வீட்டுக்குக் கூட வாடகை தரமுடியாத நிலை இருந்தது.



எங்களுக்காக ஒரு சங்கம் இருக்கு. அது மூலமாக எங்களைப் போன்ற பெண்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிறுவணிகக் கடன் கொடுப்பதாக அறிந்தோம். பிறகு புரசைவாக்கம் வங்கியை அணுகினோம். அவங்க ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தாங்க. தினசரி பத்து ரூபா கட்டி வருகிறேன்.

தற்போது கைக்குட்டை வியாபாரம் ரொம்பநல்லா நடக்குது. முன்ன போலக் கஷ்டம் இல்லே. வயிறார சாப்பிடறோம். முதலமைச்சர் கலைஞர் மவராசானா இருக்கணும்''.

இப்போது இவர் பாவாடை போன்ற உள்ளாடைகள் மற்றும் துண்டுகள் முதலானவற்றை வியாபாரம் செய்ய முனைந்துள்ளார். இதற்கு ரூ.5,000 கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று அவர் கூறியபோது எதிர்காலத்தில் அவருக்கு இருந்த நம்பிக்கைப் பளிச்சிட்டது.

★ ★ ★

திருமதி எம்.சந்திரா, பழம், கரும்பு வியாபாரம் செய்பவர். 50 வயதைக் கடந்த



இவருக்கு ஒரே ஒரு மகன் மட்டும் உள்ளார். அவர் மீன் வண்டி ஓட்டி வருகிறார். கடந்த 20 ஆண்டுகளாகக் கரும்பு மற்றும் பழம் வியாபாரம் செய்து வருகிறார்.

''நானும் எல்லாரையும் போல முதல்லே தண்டல்காரரைத்தான் அணுகினேன். ஆயிரம் ரூபா வாங்கினால் நூறு ரூபாயைப் பிடித்துக் கொண்டு தொளாயிரம் ரூபாயைத் தான் கொடுப்பாங்க. தினமும் பத்து ரூபா கட்டணும். கட்டத் தவறினா, நூத்துக்கு வட்டி போடுவாங்க. இப்படி என்னைப் போல கஷ்டப் படறவங்களுக்கு முதலமைச்சர் அய்யா, கூட்டுறவு வங்கி மூலமா கடன்கொடுக்க வழி செய்திருக்காங்க. அவர் நல்லா இருக்கணும்.

''பொங்கல் பண்டிகை வர்றதாலே, இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுத்தா வியாபாரத்தை விருத்தி செய்ய வசதியாக இருக்கும்''

இவருக்கு முயற்சி இருக்கிறது. வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. மகளிர் சிறு வணிகக்கடன் திட்டம் தற்போது இவருக்குக் கைக்கொடுத்து வருகிறது என்றால் அது மிகையல்ல.

★ ★ ★

திருமதி கு.சரஸ்வதி, சென்னை புரசைவாக்கத்தில் உள்ள தாணா தெருவில், ஐந்து ஆண்டுகளுக்கு முன் காய்கறி வியாபாரம் செய்து வந்தார். அதனால் நஷ்டம் ஏற்படவே, இப்போது பூ வியாபாரம் செய்து வருகிறார். 55 வயதான இவருக்கு 4 பெண்களும், 2 ஆண்களும் உள்ளனர். பெரிய குடும்பம் எப்படியோ கஷ்டப்பட்டு 3 பெண்களுக்குத் திருமணம் முடித்து விட்டார். அவர் கூறுகிறார்:

''முதல்லே நான் வியாபாரத்தை ஆரம்பிக்க தினசரி தண்டல்காரரிடம் நாலாயிரம் ரூபாய் கடன் வாங்கினேன். தினமும் நாற்பது ரூபாய் வட்டி கட்டிக்கொண்டு வந்தேன். அசலை எப்படிக் கொடுக்கப் போகிறோமோ என்ற கவலை என்னை வாட்டியது. இப்பதான் எனக்கு விடிவு காலம் பிறந்தது.

''தற்போது கூட்டுறவு வங்கியிலே ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியுள்ளேன். தினமும் பத்து ரூபா கட்டிக்கிட்டு வர்றேன். இப்ப வியாபாரம் நல்லா நடக்குது, லாபமும் கிடைக்குது. கடன் இல்லாம குடும்பத்தை நடத்தி வர்றேன்.

''எனக்கு மேலும் கடன் கொடுத்து உதவினா, எங்க பையன்களை நல்லா படிக்க வைப்பேன். வறுமையிலே வாழ்ந்த எங்க குடும்பம் இப்ப சாப்பாட்டுக்குக் கஷ்டம் இல்லாம நடந்து வருது. அதுக்கு அரசாங்கத்தோட இந்தத் திட்டம் தான் காரணம்''



இப்படி அவர் தன்னம்பிக்கையோட சொன்னபோது, வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டுள்ளதை நம்மால் உணர முடிந்தது.

★ ★ ★

**''இப்படி என்னைப் போல கஷ்டப்படறவங்களுக்கு முதலமைச்சர் அய்யா, கூட்டுறவு வங்கி மூலமா கடன் கொடுக்க வழி செய்திருக்காங்க. அவர் நல்லா இருக்கணும்''**

**"இந்தத் திட்டத்தாலே இப்ப என் குடும்பம் வறுமை இல்லாம இருக்கு. பெண்ணையும் தொடர்ந்து படிக்க வைக்கணும் என்கிற ஆசையும் எனக்கு இருக்கு. முதலமைச்சர் கருணையினாலே எங்க குடும்பம் பிழைக்கணும்"**

திருமதி வி. தனபாக்கியம், வயது 40. இவர் கடந்த 20 ஆண்டுகளாக, சென்னை புரசைவாக்கத்தில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறார். இவருக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர். மகன் +1 படித்துக் கொண்டு இருக்கிறார்.



"முதல்லே நான் ஊரில் இருந்து சொந்தமா காய்கறி கொண்டு வந்து வியாபாரம் செய்து வந்தேன். முதல் போட கையில் பணம் இல்லே. தண்டல்காரரிடம் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி வியாபாரம் செய்து வந்தேன். தினசரி பத்து ரூபா செலுத்தி வந்தேன். ஆனா கஷ்டம் தீராம இருந்தது. அப்பதான், மகளிர் சிறுவணிகக் கடன் பற்றி அறிந்தேன். உடனே இந்தப் பகுதியிலே, இருக்கிற கூட்டுறவு வங்கியிலே விண்ணப்பம் கொடுத்தேன். ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தாங்க. அதை வச்சி இப்ப வியாபாரத்தை நல்லபடியா நடத்தி வர்றேன். நான் தவறாம தவணையைக் கட்டி வர்றதாலே, எனக்கு மேலும் கடன் தருவாங்க என்கிற நம்பிக்கை இருக்கு. இந்தத் திட்டத்தாலே இப்ப என் குடும்பம் வறுமை இல்லாம இருக்கு. பெண்ணையும் தொடர்ந்து படிக்க வைக்கணும் என்கிற ஆசையும் எனக்கு இருக்கு. முதலமைச்சர் கருணையினாலே எங்க குடும்பம் பிழைக்கணும்"

சிறுவணிகக் கடன் திட்டம், இவரைப் போன்ற சிறு வியாபாரிகளுக்குப் பெருந்துணையாக இருந்து வருவதைக் கண்கூடாகக் காண முடிந்தது.

★ ★ ★

திருமதி து.ரங்கநாயகி, வயது 40, இவர் சென்னை சைதாப்பேட்டையில் வளையல் வியாபாரம் செய்து வருகிறார். இதில் தினசரி ரூ.100 வருமானம் கிடைக்கிறது. இவருக்கு ஒரு மகன் உள்ளார். இவர் 10-ஆம் வகுப்பு வரை படித்துள்ளார்.

"இந்தத் தொழில் எங்களுக்குப் பரம்பரைத் தொழில். ஆனா, மற்றவங்களைப் போல தண்டல்காரர்களிடம் அநியாய வட்டிக்குக் கடன் வாங்க விரும்பவில்லை. பாங்க்கில் கடன் வாங்கவே விரும்பினேன். அதன்படி, கூட்டுறவு வங்கியில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கினேன். இத்தொழிலில் கிடைக்கும் வருமானத்தில் வீட்டுச் செலவு போக மீதியைத் தவறாமல் கட்டி வருகிறேன்.

"அதிக வட்டியும், வட்டிக்கு வட்டியும் கட்டிக் கஷ்டப்படாமல், கூட்டுறவு பாங்கில் கடன் பெற்று இப்போது தொல்லை இல்லாமல் வியாபாரத்தைச் செய்து வருகிறேன்.



"வறுமையிலிருந்து விடுபட, வளையல் வியாபாரம் தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற, இந்தக் கடன் உதவித்திட்டம் கைகொடுத்து வருகிறது என்கிறார் மகிழ்ச்சியுடன் இவர்.

★ ★ ★



திருமதி எஸ்.தாட்சியாயினி, வயது 45, இவருக்கு ஒரு பெண் மட்டும் இருக்கிறார். இவர் 8ஆம் வகுப்பு படிக்கிறார்.

கடந்த 4 ஆண்டுகளாக மண்பானை வியாபாரத்தோடு, தட்டுமுட்டுச் சாமான்களையும் விற்பனைச் செய்து வருகிறார். தினசரி வருமானம் ரூ.100 முதல் ரூ.200 வரை கிடைக்கிறது. இத்தொழில் செய்வதற்கு முன் இவர் இளநீர் வியாபாரம் செய்து வந்தார்.

''நான் தனியாரிடம் தண்டல் கடன் வாங்கி வியாபாரம் செய்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். தற்போது கூட்டுறவு பாங்கில் கடன் வாங்கி வியாபாரம் செய்து வருகிறேன். இதுவரை நான்கு தடவை கடன் வாங்கி ஒழுங்காகப் பணம் கட்டி வருகிறேன். அதனால் தற்போது எனக்கு இரண்டாயிரம் ரூபா கடன் கொடுத்தார்கள். தினசரி இருபது ரூபா செலுத்தி வருகிறேன். வியாபாரமும் நல்லபடியாக நடப்பதால், முன்பு போல கஷ்டம் இல்லாமல் இருக்கு, வீட்டுச் செலவு போகக் கொஞ்சம் மிச்சம் பிடித்து என்னால் இப்போது சேமிக்கவும் முடிகிறது'' என்று கூறும் இவர், தமது மகளை நன்றாகப் படிக்க வைக்கப் போகிறேன் என்று மன நிறைவோடு கூறுகிறார்.

★ ★ ★

மதுரை

அகிம்சாபுரம் 3-வது தெருவில் வசித்துவரும் கணேசன் மனைவி திருமதி. லட்சுமி அம்மாள் கடந்த 25 ஆண்டுகளாக வாழைப்பழம், வாழையிலை வியாபாரம் செய்து வருகிறார். இவருக்கு 2 பெண்ணும், 2 ஆணும் உள்ளனர். இவரது கணவன் நான்கு பிள்ளைகளையும் லெட்சுமியையும் விட்டுவிட்டு சென்று விட்டார். கணவனைப் பிரிந்து பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் லெட்சுமியம்மாள் மத்திய கூட்டுறவு வங்கி செல்லூர் கிளையில் கடன் பெற்று வியாபாரம் செய்துவருகிறார். ''பேங்ல கடனை குறைந்த வட்டிக்கு பெற்று எனது வியாபாரம் விருத்தியடைய ஏதுவாக இருக்கிறது. எனது கணவன் என்னுடன் இல்லை என்ற விபரத்தையும் துயரச்செய்தியையும் எனது குடும்ப சூழ்நிலையையும் கேள்விப்பட்ட பேங்க் மேனேசர் கடன் வழங்க உடனடியாக ஏற்பாடு செய்தார். பெற்ற கடன் 500 ரூபாயும் கட்டி விட்டேன். இப்போது 1000 ரூபாய் வாங்கியுள்ளேன். நாள்தோறும் 10 ரூபா வீதம் கட்ட வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். இதுபோன்ற குறைந்த வட்டிக்கும் கெடுபிடியில்லாமலும் கடன் கொடுக்கின்ற அரசாங்கம் என்னை போன்ற ஏழை பெண்களுக்கு பெரிதும் உதவி செய்கிறது என்று கூறியதோடு



இதனால் எங்களுக்கு வாங்கிய கடன் திருப்பிக் கொடுப்பது மட்டுமில்லாம எங்களுக்கு சேமிப்புக் கணக்கும் வளர்ந்துக்கிட்டே வருகிறதை பார்க்கும்போது எங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது'' எனக் கூறினார்.

★ ★ ★

**''அதிக வட்டியும், வட்டிக்கு வட்டியும் கட்டிக் கஷ்டப்படாமல், கூட்டுறவு பாங்கில் கடன் பெற்று இப்போது தொல்லை இல்லாமல் வியாபாரத்தைச் செய்து வருகிறேன்''**

கோரிப்பாளையம் பகுதியில் மாரியம்மன் கோயில் நடுத்தெருவில் வசித்து வரும் கந்தசாமி என்பவரின் மனைவி திருமதி.குருவம்மாள் எம்.டி.சி.சி. வங்கியின் தல்லாகுளம் கிளையில் மகளிர் சிறுவணிகக்கடன் பெற்று இட்லிக்கடை நடத்தி வருகிறார். அவர் கூறியதாவது, ''நான் இந்த தொழிலில் 30 வருடமாக உள்ளேன். இந்தக் கடன் வாங்குறதுக்கு முன்னால தவணைக்காரங்க கிட்டத்தாங்க 500 ரூபா வாங்குவேன். அவங்க 75 ரூபா எடுத்துக்கிட்டு 425 ரூபாதான் குடுப்பாங்க. அத 50 நாள்ல 10 ரூபா வீதம் செலுத்துவேன். அதனால தவணையக் கட்டுறதே பெரிய கஷ்டமுங்க. எப்படியாவது பொழுத ஓட்டணுமே. அதனால வாயக்கட்டி வயித்தக்கட்டி கடனை கட்டணுங்க ஆனா இப்ப எம்.டி.சி.சி. பேங்ல கடன் வாங்குனதுக்குஅப்புறம்கஷ்டமில்லாம கடனத் திருப்பிச் செலுத்துறதும் இல்லாம, எங்களுக்கு சேமிப்பு பழக்கத்தை பழக்கிவிடுவது எங்களுக்கு மிச்சமா இருக்கு. அதோட நிம்மதியா பொழப்ப ஓட்டுறோம். ஒரு நாளைக்கு ரூபாய் 100 முதல் 150 ரூபாய் வரை வருமானம் கிடைக்குது. அதனால வாங்குன கடன கட்டுறதோடு பிழைப்பும் நல்ல இருக்கு. 500 ரூபா கடன கட்டிட்டேன் இப்ப ரூபாய் 1000 மறுபடி கடன வாங்கி தொழிலையும் அபிவிருத்தி செய்து இருக்கேன். நல்லபடியா வாழ்வ நடத்திக்கிட்டிருக்கேன்''.



★ ★ ★

**''எங்களுக்கு வாங்கிய கடன் திருப்பிக் கொடுப்பது மட்டுமில்லாம எங்களுக்கு சேமிப்புக் கணக்கும் வளர்ந்துக்கிட்டே வருகிறதை பார்க்கும்போது எங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது''**

செல்லூர் பகுதியில் அம்பேத்கார் தெருவில் வசித்துவரும் கே. பாண்டியின் மனைவி திருமதி. ஜெயா செல்லூரிலுள்ள மார்க்கெட்டில் கடந்த 8 வருடமாக காய்கறி வியாபாரம் செய்து வருகிறார். வியாபாரம் செய்ய கந்துவட்டிக்காரரிடம் 10 வட்டி என்ற அடிப்படையில் கடன் பெற்று கடனையும் அடைக்க முடியாமல் வியாபாரத்தையும் செய்ய முடியாமல் வாடிய நிலையில் உள்ள ஜெயாவிற்கு வரப்பிரசாதமாக கிடைத்த இத்திட்டத்தினால் பெற்ற பயனை பெருமையோடு கூறுவது ''மகளிர் சிறுவணிகக் கடன் வழங்கும் திட்டத்தை பொதுமக்களாலும் பேப்பர் மூலமா தெரிஞ்சுகிட்ட நான் கடன் வாங்க தயங்கிதயங்கி செல்லூரில் உள்ள எம்.டி.சி.சி. பாங்கிற்குள் இருந்த அதிகாரிக்கு பெரிய கும்பிடு ஒன்றை போட்டு, அய்யா காய்கறி யாவாரம் பண்ணிக்கிட்டிருக்கேன். வெளிில கடன் வாங்கி அதிக வட்டி கொடுத்து வதங்கிப்போயிட்டேன். அரசாங்கத்துல கொடுக்கிற திட்டத்துல எனக்கு 500 ரூவா கடன்கொடுங்கய்யா எனக் கேட்டேன். கடன ஒழுங்கா திருப்பிக் கட்டணும். கொறஞ்ச வட்டி கடனக் கட்டக் கட்ட தொடர்ந்து கடன் வாங்கிக்கலாம் என்று கூறி போட்டாவுடன் நாளைக்கு வாங்க எனச் சொன்னார். போட்டோ மாத்திரம் கொடுத்தேன். கையெழுத்த வாங்கிக்கிட்டு பணத்த ரொக்கமாக 500 ரூபா கொடுத்தாங்க. காய்கறி யாவாரம் தொடர்ந்து நடத்தினேன். ஒரு நாளைக்கு 5 ரூபா வீதம் முழுத்தொகையும் கட்டி முடித்து விட்டேன். கடன அடச்சதே எனக்கு தெரியல இப்ப யாவாரத்த விருத்தி செய்ய மேலும் 1000 ரூபா கடன் வாங்கியிருக்கேன். இப்ப எங்க வீட்டுல ரெண்டு குழந்தைக, நானு, என் புருசன் எல்லாம் சந்தோசமாக இருக்கோம்''.



★ ★ ★

மகப்பூபாளையம் அன்சாரி நகர் 1ஆவது தெருவில் வசித்துவரும் திரு.அமனுல்லா அவர்களின் துணைவி திருமதி. ரஹ்மத் நிஷா, இவர் ஊதுபத்தி செய்யும் தொழிலில் 12 வருட அனுபவம் மிக்கவர். இவர் ''வெளியில் தவணைக்கு வட்டிக்கடைக்காரரிடம் வாங்கும்போது ரூ.500 வாங்கினால் ரூபாய் 60 முதல் 75 வரை பிடித்தம் செய்துகொண்டு மீதத்தைக் கொடுப்பார். அதாவது அதிக காலம் கடன் வாங்குவதால்தான் இந்த வட்டி என்றும் எப்போதாவது வாங்கினால் இதைவிட அதிகமான வட்டி வாங்குவார்கள்'' என்று கூறினார். மேலும் கூறுகையில், ''இந்த தொழிலுக்கு ஒரு நாளைக்கு 150 ரூபாய் வரை மொதல் தேவை. தற்போது நான் வாங்கியுள்ள 1000 ரூபாய் என்பது அன்றாடம் தொழில் செய்ய போதுமானதாக இருக்கு. மேலும் எனது தொழிலை அபிவிருத்தி செய்வதோடு, நறுமணமிக்க ஊதுபத்தி தொழில் செய்யும் எனது வாழ்க்கையிலும் நறுமணம் கமழும் இந்த தொழிலுக்கு ஒரு நாளைக்கு ரூபாய் 30 முதல் 40 ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். எனது கணவரும் உறுதுணையாக இருந்து பத்தி விற்பனை செய்து வருகிறோம்'' என்றார்.



★ ★ ★

திருமதி ஜெ. நபிஷா, 133, அன்சாரி நகர் 1ஆவது தெருவில் வசிக்கும் இவர் கடையில் கருவாடு விற்கும் சிறுதொழில் செய்கின்றார். இவருக்கு திரு. ஜெய்லாணி என்ற கணவர் உள்ளார். இவர்களுக்கு 3 மகன்களும் 1 பெண்ணும் இருக்கிறார்கள். இந்தத் தொழிலை கடந்த 20 வருடமாக செய்து வருவதாகவும், கருவாடு வியாபாரத் தொழிலுக்கு தனது கணவர் உறுதுணையாக இருப்பதாகக் கூறும் நபிஷா மேலும் கூறும்போது, ''எனது தொழிலுக்கு சிறு யாவாரக் கடனாக முதல்ல 500 ரூபா வாங்கினேன். அத தவணப்படி கட்டிட்டேன். அதற்கப்புறம் இப்போ 1000 ரூபாயா வாங்கியிருக்கேன். அதையும் தவண தவறாமல் கட்டிருவேன். இப்போ எனது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையா இருப்பதோட தினமும் வயிறார சாப்பிடுறோம். கடனுக்காக அடுத்தவரிடம் கூனிக்குறுகி நிற்காம இருக்கிதற்கு வழி வகுத்ததே இந்த கூட்டுறவு வங்கிதாங்க'' என்றார்.



"பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாக, உரிமை பெற்றவர்களாக மாறினால்தான் சமுதாயமும், நாடும் அறிவார்ந்த நிலையை எட்டி, ஓர் உன்னத வளர்ச்சியைப் பெற்றதாக இருக்கும்".



– பேரறிஞர் அண்ணா

மகளிர் தம் நிலையை மேம்படுத்துவதற்கும் அதே நேரத்தில் சேமிக்கும் பழக்கத்தை அவர்களிடம் உருவாக்குவதற்கும் மகளிர் சிறு வணிகக்கடன் திட்டம் பெரிதும் பயன்பட்டுள்ளது என்பதற்கு இவர்கள் சான்றாக திகழ்கிறார்கள்.

★ ★ ★

# மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப - நவீன தொழில்நுட்பத்துடன் உணவு உற்பத்தி

**- முதலமைச்சர் கலைஞர்**

"ஓதுவாரெல்லாம் உழுவார் தலைக்கடைக்கே" என்பது பழமொழி. படித்தவர்களாக இருந்தாலும்கூட அவர்கள் எல்லாம் விவசாயிகளுடைய பின்னால்தான் போக வேண்டும் என்பது பழமொழி. அந்தப் பழமொழியை நிரூபிக்கின்ற வகையிலே தான் எத்தகைய அமைச்சர்களாக இருந்தாலும் அவர்கள் எல்லாம், முதலமைச்சர் உட்பட, முக்கால் பகுதி அமைச்சரவையே இன்றைக்கு விவசாயத்துறையின் பின்னால் வந்திருப்பதற்குக் காரணம் இந்தத்துறை ஒரு முக்கியமான துறை – உழவுத்துறை. அந்தத் துறையின் சார்பில் நடை பெறுகின்ற இந்தச் சீர்மிகுக் கண்காட்சியைத் தொடங்கி வைக்கும் இந்த நாளில் ஆயிரக் கணக்கில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களை யெல்லாம் நான் வரவேற்று, பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறேன்.

இது இன்னும் நான்கைந்து நாட்களுக்கு இங்கே நடை பெறுவதின் நோக்கமே கிட்டத் தட்டப் பத்தாண்டு காலத்திலே இது போன்ற கண்காட்சிகள் இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே பல இடங்களில் நடைபெற்றிருந்தாலுங்கூட, இப்போது தான் தமிழகத்திலே முதன் முதலாக விவசாயிகளுக்கான, உழவுத் தொழிலுக்கான இந்தக் கண்காட்சியை நாம் நடத்துகின்ற அந்தப் பெருமையைப் பெற்றிருக்கிறோம். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட கண்காட்சிகள் அடிக்கடி நடைபெற வேண்டும் என்ற ஒரு கருத்தினை வேண்டுகோள் வடிவத்திலே அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் இங்கே வைத்தார்கள்.

நான் இந்த நிகழ்ச்சியிலே உறுதியளிக்கிறேன். அகில இந்திய அளவிலே ஒவ்வொரு ஆண்டும் என்று முடியாவிட்டாலுங்கூட இரண்டாண்டுக்கு ஒரு முறை யாவது இந்தக் கண்காட்சியைத் தமிழகத்திலே நடத்துவதற்கு அந்தக் கண்காட்சியிலே வெளிநாட்டிலேயிருந்து கூட விவசாயத் திறமைப் பெற்றவர்கள் வந்து கலந்து கொள்வதற்கான வழிவகை நிச்சயமாகச் செய்யப்படும் என்ற உறுதியினை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்திலே இன்றைக்கு சுமார் 56 இட்சம் ஹெக்டேரில் தீவிர வேளாண்மை நடைபெற்று வருகிறது. இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஐந்தாண்டுத் திட்டங்கள் – பசுமைப் புரட்சித் திட்டங்கள் போன்றவைகளால் உணவு உற்பத்தியில் நாம் ஓரளவுக்குத் தன்னிறைவு பெற்றுள்ளோம். முழுஅளவிற்கு நாம் தன்னிறைவு பெறவில்லை.

**மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப நவீன யுக்திகளைக் கையாண்டு உணவு உற்பத்தியை பெருக்கவும், விவசாய வளர்ச்சிக்கான முதலீட்டை அதிகப்படுத்தவும் முயற்சி மேற்கொள்வோம்.**

நெல், கரும்பு, பயிறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், இதர தானியங்கள், பழங்கள், காய்கறிகள், நறுமணப் பொருள்கள், வணிக மலர்கள் முதலியன தொன்று தொட்டு தமிழகத்திலே பயிரிடப் பட்டு வருகிறதென்றாலும், அதன் தரம் உலக வணிகத்திற்கேற்ற அளவிலே இன்னும் அமையவில்லை என்ற குறை நமக்கு இருக்கின்றது. அந்தத் தரத்தை உருவாக்குவதற்கான ஒரு முன் முயற்சிதான் இந்தக் கண்காட்சி என்பதையும் அந்தத் தரத்தை உயர்த்துவதற்கு நம்முடைய உழவர் பெருமக்கள் பயிற்சி பெற வேண்டும். அந்தப் பயிற்சியை பெறுவதற்கு ஒரு ஊக்கமாக இந்தக் கண்காட்சி அமையும் என்ற நம்பிக்கையும் எனக்கு நிச்சயமாக இருக்கின்றது.

### உணவு உற்பத்தித் திறனில் தமிழகம் முதலிடம்

புதிய புதிய தொழில் நுட்பங்களை நம்முடைய தமிழக விவசாயப் பெருமக்கள் கடைப்பிடித்திட வேண்டும்,. அப்போது தான் உற்பத்தியை மேலும் பெருக்கிட முடியும். இன்றைக்கு நான் ஒன்றை மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்வேன். இந்தியாவிலே பல மாநிலங்களோடு நம்முடைய தமிழ் மாநிலம் போட்டியிட்டு உற்பத்தித் திறனில் – உணவு உற்பத்தித் திறனில் இதுவரையில் மூன்றாவது இடத்திலே, ஐந்தாவது இடத்திலே தான் இருந்தது. இந்த ஆண்டு உற்பத்தித் திறன் வேறு மாநிலங்களில், பெரிய மாநிலங்களாக இருக்கலாம், பரப்பளவில் பெரிய மாநிலங்களாக இருக்கலாம். ஆனால் உற்பத்தித் திறனைப் பொறுத்தவரையிலே இந்தியாவிலே

இன்றைக்கு முதல் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு இருக்கின்றது என்பதையும், அதற்குரிய பணிகளை தமிழக அரசு மும்முரமாகச் செய்து இந்த வெற்றியைக் கண்டிருக்கின்றது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நவீன் வேளாண்மைச் சாகுபடி நுட்பங்களைக் குறித்து விழிப் புணர்வையும் விவசாயிகளிடத்திலே நாம் உருவாக்க வேண்டும். தமிழகத்தில் வேளாண்துறையிலேச் செய்கின்ற முதலீட்டையும் பெருமளவில் அதிகரிக்கச் செய்ய வேண்டும். இதற்கெல்லாம் மேலாக நோய் நொடிகளால் பூச்சி தாக்குதலால் வேளாண்மைத் துறைக்கு ஏற்படுகின்ற பெரும் இழப்பை — ஆபத்தைத் தவிர்ப்பதற்கு என்னென்ன மாறுதல்களை நாம் செய்ய வேண்டும், எத்தகைய எதிர் நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும் என்பதற்கும் இந்தக் கண்காட்சி நிச்சயமாக பயன்படும், பயன்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையிலே உணவு தானிய உற்பத்தியில் — நான் முதலிலே இந்திய அளவிலே தமிழகம் எந்த அளவிற்கு இருக்கின்றது என்று குறிப்பிட்டேன். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் உள்ள ஒரு ஒப்பீட்டை உங்கள் முன்னால் வைக்க நான் விரும்புகிறேன்.

*1995—96*—இல் மொத்த உணவு உற்பத்தி — நான் உணவு உற்பத்தி என்று குறிப்பிடும்போது, அரிசி அத்துடன் சேர்ந்த வேறு பல உணவு தானியங்கள் எல்லாம் சேர்ந்து *67.96* இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியாயிற்று.

*1996—97*—இல் *76.45* இலட்சம் மெட்ரிக் டன், *1997—98*—இல் *95* இலட்சம் மெட்ரிக் டன், *1998—99*—இல் *103* இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை நாம் எட்டியிருக்கிறோம்.

இதில் அரிசி என்ற தனி உணவுத் தானியத்தைப் பொறுத்தவரையில் *1994—95*—இல் அரிசி உற்பத்தி *76.86* இலட்சம் டன் என்ற நிலையில் இருந்து, *1995—96*—இல் *52.06* இலட்சம் டன் எனக் குறைந்தது. அதற்குப் பிறகு *1996—97*—இல் இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு *60.61* இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலே உயர்ந்து *97—98*—இல் *73.86* இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலே வளர்ந்து, *1998—99*—இல் *82.15* இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலே உயர்ந்திருக்கின்றது. *1999—2000*—இல் *100* இலட்சம் மெட்ரிக் டன் அதாவது *1* கோடி மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் பெருமிதத்தோடு இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வளர்ந்து வருகின்ற மக்கள் தொகை வளர்ச்சியைப் பற்றி எண்ணும் பொழுது நம்முடைய உற்பத்தி போதுமானதல்ல என்பதை நம்முடைய மத்திய இணை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல — அதை ஏற்றுக் கொள்கின்ற வகையிலே நான் சொல்ல விரும்புகிறேன். மேலும் பத்தாண்டு காலத்தில் நம்முடைய உணவுத் தேவை 50 சதவிகிதம் அதிகரிக்கக்கூடும். 2020ஆம் ஆண்டில் இப்போது இருக்கின்ற உணவுத் தேவையைப் போல இரண்டு மடங்கு கூடுதலாக உணவு தேவைப்படும்.

### பத்தாயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள்

அதைச் சமாளிக்க உணவு உற்பத்தியில் நம்முடைய நாடு அதிக அக்கறை காட்ட வேண்டியிருக்கின்றது. அதற்குத் தான் தரிசு நிலங்களையெல்லாம் விளை நிலங்களாக மாற்ற ஒரு முனைப்பான முயற்சியை தமிழக அரசு மேற்கொண்டு அதற்காக டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்களுடைய தலைமையிலே ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து, *96*—ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்ட அந்தக் குழு, *97*—ஆம் ஆண்டு தன்னுடைய அறிக்கையினை அரசுக்கு அளித்து, இப்பொழுது ஒரு நீண்ட காலத் திட்டத்தை வடிவமைத்து அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலை உணர்வு மையமும், வேளாண்மைப் பல்கலைக் கழகமும் இணைந்து செயற்திட்டத்தை உருவாக்கியிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு

> உண்மையான கவிதை, அருமையான செல்வம். அதனால்தான் உலகம் நலம் பெறுகிறது.
>
> — பாரதியார்

செயல் வடிவம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழகத்திலே இப்பொழுது பத்தாயிரம் ஹெக்டர் நிலப்பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே நவீன யுக்திகளைக் கையாளவும் உற்பத்தியை மேலும் மேலும் வளர்ந்து வருகின்ற மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப பெருக்கிடவும் நவீன யுக்தியோடு உணவு உற்பத்திக்கான விவசாய வளர்ச்சிக்கான முதலீட்டை அதிகப்படுத்தவும் நாம் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள அதற்கு ஊக்கமும் உற்சாகமும் பெற்று வழிவகைகளை எடுத்துக்காட்டிட இந்தக் கண்காட்சி பயன்படுமென்று நான் நம்புகிறேன்.

இந்தக் கண்காட்சிக்கு வருகை தந்து சிறப்புரையாற்றிய நம்முடைய மத்திய வேளாண்மைத்துறை இணை அமைச்சர் திரு சத்திய நாராயணா அவர்கள் அவருடைய உரையின் இறுதியிலே என்னைப் பற்றிக் குறிப்பிட்ட சில வார்த்தைகளுக்காக நான் என்னுடைய நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் ஒன்று சொன்னார். இந்தியாவின் முதுகெலும்பாக நான் இருக்கிறேன் என்று சொன்னார். நான் என்றால் அதைத் தமிழ்நாடு என்று எடுத்துக் கொள்கிறேன். முதுகெலும்பில் அதிகச் சுமையை சுமத்தாமல் முதுகெலும்பு வளையாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கின்றது என்பதை எடுத்துக்கூறி விடைபெறுகிறேன்.

*— தமிழ்நாடு வேளாண்மைக் கண்காட்சியினை 8—12—1999 அன்று சென்னையில் துவக்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.*

★ ★ ★



# மகாகவி பாரதிக்கு...

- இருகூரான்

"மெல்லத் தமிழினிச் சாகும்..."
என்ற கோபத்தோடு
மரித்த –
முறுக்கு மீசை பாரதியே!

தமிழையும் தமிழனையும்
எழுந்து நிற்க வைத்துள்ள
காலப் பதிவு –
கடலின் ஓலமாய் உன்
காதுக்குக் கேட்கிறதா?

சுவடி ஓலைகளிலும்
பண்டிதர் சொற்களிலும்
வாழ்ந்த வள்ளுவன் –
எல்லா இடங்களிலும்
உட்கார்ந்தே தானிருந்தான்!

கன்னித்தெய்வம் குமரிஅம்மை
கால்கடுக்கக்
காத்துக் கொண்டிருக்கிறாள்
வெகுகாலம்!
இது முக்கடல் நாயகியின்
குமரித் தவம்.

இங்கேதான் –

முப்பால் நாயகனும்
கடல்களுக்கு அப்பால்
பார்த்துக் கொண்டே இருக்கிறான்.
இது குறளின் தவம்.
தமிழின் கடைத் திறப்பு.
எழுந்து நிமிர்ந்து
முக்கடல் நடுவே கர்வமாய்
நின்று –
மீதி நான்கு கடல்களையும்
பார்க்கிற கவின்மிகு காட்சி!

ஐயா, பாரதி! இது உன் கண்களில்
தெரிகிறதா?

உலகைச் சுருக்கிடும்
தகவல் வலைக்குள்
வள்ளுவம் முதலாய் அனைத்தும்
தமிழ்வழி செலுத்தும்
சாத்தியக் கூறும்...
இணைய உத்தியும்
தொடங்கி விட்டதால் –

இனிய தமிழ் அணங்குக்கு
இல்லை இல்லை தளர்வு என்னும்

சரிதம் புதிது
சமைந்துள்ள செய்தியேனும்
தெரியுமா பாரதி?

வள்ளுவனைப் புகழ்ந்தவன் நீ!
உனக்கும் முன்னோர்
வள்ளுவத்தை அகழ்ந்து...ஆய்ந்து
ஆழப் பார்வை
பார்த்தது பழங்கதை!

அனைவரும் ஏற்கும்
பொதுநீதி அளித்தது வள்ளுவம்,
இதனை –
ஓதுவோர் மனத்தின் உள்ளே
ஒவ்வொரு நாளும்
விழுப்பம் பெறுவது ஒழுக்கப் பண்பு!
இனிவரும் தலைமுறையேனும்
இஃதே தமிழ் மறை என்றெண்ணி
முற்றோதி மனனப் படுத்தினால்
நாடு சிறக்கும் என்பது திண்ணம்.

இதற்குத் தான் புதுவழி கண்டார்
ஐந்தமிழறிஞர், முதல்வர் கலைஞர்!

இவர் –
குறளுக்கு ஓவியமும் உரையும்
கொடுத்த உள்ளத் தூரிகை!
வள்ளுவக் கீர்த்தியை
வானத்துக்கு நிமிர்த்தவே
உளி வலி பொறுத்த சிற்பப் பாறை!

ஐயா பாரதி!

இந்த ஈராயிரத்தின்
சத்தியச் சாட்சியம் உன் கண்ணுக்குத்
தெரிகிறதா?
தமிழும், தமிழரும் தலை நிமிர்ந்தது
இப்போதேனும்
உனது கோப விழிகளைக்
குளிர்விக்கிறதா?

அப்படியானால் –

'இல்லை தமிழுக்கு இனிச் சாவு'
என்றே அழுத்தமாய் –
நீ எப்போது வந்துதான்
எழுதப் போகிறாய்? என்ன தயக்கம்?
எங்களைப் போல் நீயும் எழுந்து நில்லேன்!



# கைவினைஞர் பயிற்சித் திட்டம்

ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்நாட்டின் தொழில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் திறமை வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்குவது அவசியமாகும். சிறந்த கைவினைஞர்களை உருவாக்கும் பணியில் தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 53 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 580 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 17,200 பயிற்சியாளர்களும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 60,376 பயிற்சியாளர்களும் பயின்று வருகின்றனர். இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் 35 பொறியியல் தொழிற் பிரிவுகளிலும், 15 பொறியியல் சாரா தொழில்பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய இரு மாவட்டங்கள் தவிர மற்ற 27 மாவட்டங்களிலும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. மொத்தம் உள்ள 53 தொழிற்பயிற்சி நிலையங்களில் மகளிருக்கு மட்டும் என கிண்டி, அம்பத்தூர், கோயம்புத்தூர், புள்ளம்பாடி, கடலூர், திருப்பூர், சேலம், திண்டுக்கல், மதுரை, மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. அதில் 1,800 மகளிருக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் எஞ்சியுள்ள 43 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மகளிருக்கு 30% இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளியிறுதி வகுப்பு தேறிய/தவறியவர்கள் மற்றும் பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்கள் இப்பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

14 முதல் 25 வயது நிரம்பியவர்கள் பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு வயது வரம்பு 14 முதல் 27 ஆகும்.

பயிற்சியாளர்கள் சேர்க்கையில் கீழ்க்குறிப் பிட்டவாறு, இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படுகிறது.

| | சதவீதம் |
|---|---|
| 1. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 18 |
| 2. பழங்குடியினர் | 1 |
| 3. மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 20 |
| 4. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 30 |
| 5. நேரடிப்போட்டி (Open Competition) | 31 |

முன்னாள் இராணுவத்தினர் அவர்களின் பிள்ளைகள் மற்றும் அகதிகளுக்குப் பயிற்சியில் சேரச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுகிறது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழிற் பிரிவுகளில் 1999–2000 கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கையில் கிராமப்புற மாணவர்களுக்கு 15% இடஒதுக்கீடு வழங்கி 1999–ஆம் ஆண்டு முதல் மாணவர் சேர்க்கையில் அமுல்படுத்தப்படுகிறது.

### பயிற்சிக் கட்டணம்

பயிற்சிக் கட்டணம் இல்லை. பயிற்சியில் சேரும் போது காப்புக் கட்டணமாக **(Caution Deposit)** ரூ.100 வசூலிக்கப்படுகிறது. சிறப்புக் கட்டணமாக தொழிற் பிரிவிற்கு ஏற்றாற் போல் ஆண்டுக்கு ரூ.360–லிருந்து ரூ.600 வரை வசூலிக்கப்படுகிறது.

### உதவித் தொகை

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகையினை உயர்த்தி வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டு பயிற்சி பெறும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.16,100–க்கு மிகாமல் உள்ளவர்களில் 1/3 பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.50–ம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு மாதம் ரூ.150–ம், பழங்குடியினர் அனைவருக்கும் மாதம் ரூ.175–ம் வழங்கப்படுகிறது.

### அகில இந்திய தொழிற்தேர்வு

தொழிற்பயிற்சி நிலையங்களில் ஓராண்டு முதல் மூன்றாண்டு வரை பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிவின் போது அகில இந்திய அளவில் தொழிற் தேர்வு ஜுலை மாதத்தில் நடத்தப்படுகிறது. தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய தொழிற்சான்றிதழ் **(N.T.C.)** வழங்கப்படுகிறது.

ஆண்டு தோறும் ஏறக்குறைய 30,000 பேர் தேர்ச்சிப் பெறுகின்றனர். இவர்களில் 50 சதவீதத்தினர் பல்வேறு அரசுத்துறை மற்றும் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். பலர் சுயமாகத் தொழில் மையங்களை ஏற்படுத்திக் கொள்கின்றன.

பயிற்சியாளர்களை மேலும் ஊக்குவிக்கின்ற வகையில் மாநில அளவில் 24 தொழிற் பிரிவுகளில் திறனாய்வும், முதலாவதாக வரும் சிறந்த பயிற்சியாளருக்கு முதலமைச்சர் விருதாக ரூ.5000 மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த பயிற்சியாளரை உருவாக்கியப் பயிற்றுநருக்கும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.



## நல்லாசிரியர் விருது

ஆண்டு தோறும் சிறந்த 10 பயிற்று நர்களுக்கும், இரண்டு முதல்வர்களுக்கும் ரூ.500 மதிப்புள்ள இந்திர விகாஸ் பத்திரமும் பாராட்டுச் சான்றிதழும் நல்லாசிரியர் விருதாக வழங்கப்படுகிறது.

## பாடத்திட்டங்கள்

தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றாற் போல், மாறிவரும் தொழிற்சாலைகளின் தேவைக்கு ஏற்றாற் போல் புதிய தொழிற்பிரிவுக்ள் அவ்வப்போது துவங்கப்படுவதுடன் பாடத் திட்டங்களும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் 7 தொழிற்பிரிவுகளில் பாடப்புத்தகங்கள் முதற்கட்டமாக தமிழில் மொழி பெயர்த்து, பயிற்சியாளர்களுக்கு வழங்குதல் சம்பந்தமாக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. உலக வங்கி உதவியுடன் 31 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.38.29 கோடி செலவில் நவீனப்படுத்தப் பட்டுள்ளன. மேலும் 21 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்ரூ.12.24 கோடி செலவில் 1997–98 மற்றும் 1998–99 ஆகிய ஆண்டுகளில் முழுமையாக மாநில அரசு செலவில் நவீனப்படுத்தப் பட்டு வருகின்றன.

## அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள்

1996–ஆம் வருடம் வரை மாநிலத்தில் 438 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வந்தன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கை முடிவின்படி தொழிற்பயிற்சி நிலையம் ஏதும் இல்லாத ஊராட்சி ஒன்றியங்களில் தொழிற் பயிற்சி நிலையம் மூன்று ஆண்டுகளில் துவங்க அரசாணை வழங்கப்பட்டது. தற்போது அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களின் எண்ணிக்கை 580 ஆக உயர்ந்துள்ளது. அரசாணை முழுமையாக 1999—இல் செயல்படுத்தப்படும் பொழுது மேலும் பல தொழிற்பயிற்சி நிலையங்கள் புதிதாக ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால், தமிழ்நாட்டிலுள்ள எல்லா கிராமங்களிலும் தொழிற்பயிற்சி பெற வாய்ப்புள்ளது.

## தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்

தொழிற்பயிற்சி நிலையங்களில் அகில இந்திய தொழிற் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற பயிற்சியாளர்களைச் சம்பந்தப்பட்ட தொழிற் பிரிவுகளில் அவர்களுடைய திறமையை மேலும் மேம்படுத்தும் பொருட்டு தொழிற் சாலைகளில் ஒன்று முதல் நான்கு வருடங்கள் வரை தொழிற் பழகுநர் பயிற்சி அளிக்கப் படுகிறது. தொழிற் சாலைகளில் பொருட்கள் உற்பத்தி செய்வதில் பயிற்சி பெறுவ துடன் அரசு தொடர் அறிவுரை மையங்களில் சம்பந்தப்பட்ட தொழிற்பிரிவு சார்ந்த கருத்தியல் பாடங்கள் பயிற்றுவிக்கப் படுகிறது. தொழிற்



பழகுநர் பயிற்சி பெறுபவர் உற்பத்திப் பொருட்கள்பற்றிய பயிற்சி பெறுவதால் பயிற்சி முடித்த பின் தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் போது நம்பிக்கையுடன் தொழில் மேற்கொள்ள தன்னம்பிக்கை ஏற்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 139 தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 30.6.99ன் படி 2115 தொழிற்சாலைகளில் 17,808 தொழிற் பழகுநர்கள் பயிற்சிபெற்று வருகின்றனர். பயிற்சி முடிந்தவுடன் அகில இந்திய தொழிற் பழகுநர் தேர்வு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடத்தப்பட்டு தேர்ச்சி பெறும் தொழிற்பழகுநர்களுக்கு அகில இந்திய தொழிற்பழகுநர் சான்றிதழ் (N.A.C.) வழங்கப்படுகிறது. வருடத்திற்கு ஏறத்தாழ 4,328 பேர் தேர்ச்சிப் பெறுகின்றனர். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ.680 முதல் ரூ.1020 வரை உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அகில இந்திய திறனாய்வுத் தேர்வு—11 தொழிற்பிரிவுகளில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. சிறந்த தொழிற் பழகுநராக அகில இந்திய அளவில் தேர்வு செய்யப்படும் நபருக்கு ரூ.10,000 ரொக்கத் தொகையும், சான்றிதழும் வழங்கப்படுகிறது. மாநில/மண்டல அளவில் தேர்வு பெறும் சிறந்த தொழிற் பழகுநருக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.



## தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்

தொழிற்சாலைகள் அதிகம் உள்ள நகரங்களில் அமைந்துள்ள வடசென்னை, கிண்டி, அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, மேட்டூர்அணை, திருச்சி மற்றும் ஓசூர் ஆகிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிலாளர்கள் நலன் கருதி மாலை 5 மணி முதல் 8 மணி வரை வகுப்புகள் நடத்தப்படுகிறது. தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் இவர்கள் கருத்தியல் சம்பந்தமாக அறிவு பெற்று தங்கள் பணியினைத் திறம்படச்செய்ய உதவிடும் பொருட்டு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. செப்டம்பர் இரண்டாம் வாரம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, டிசம்பர் முதல் நாள் பயிற்சி ஆரம்பமாகிறது. பொறிப்பகுதி பொருத்துநர், கடைசல் பிடிப்பவர், இயந்திரப் பணியாளர், மின்சாரப் பணியாளர், கம்பியாள், பற்றவைப்பவர், கட்டிடப்பட வரைவாளர், கம்மியர் (மோட்டார் வண்டி) போன்ற தொழிற்பிரிவுகளில் ஒரு வருடம்/இரண்டு வருடங்கள் கருத்தியல் பாடம் கற்றுத் தரப்படுகிறது. தேர்ச்சி பெறும் பயிற்சியாளருக்கு மாநில அரசால் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## தொழிற்பள்ளிகள்

தமிழ்நாட்டில் தற்போது 225 தொழிற்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இத் தொழிற்பள்ளிகளில் பொறியியல் மற்றும் பொறியியல் சாராத் தொழிற் பிரிவுகளில் ஓராண்டு முதல் இரண்டு ஆண்டுகள் வரை பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலான தொழிற்பள்ளிகள் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. எட்டாம் வகுப்பு முடித்தவர்கள் மற்றும் பள்ளி இறுதித்தேர்வில் தேறிய/தவறியவர்கள் மற்றும் ப்ளஸ் 2 தேறியவர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். ஜூலை மாதம் பயிற்சி துவங்குகிறது. இத்தொழிற் பள்ளிகளில் பெஞ்ச் பிட்டர், வெல்டிங் டெக்னிஷியன், எலக்ட்ரிகல் டெக்னிஷியன், மெக்கானிக் ஆட்டொமொபைல், ஆட்டோ எலெக்ட்ரிஷியன், துணிவெட்டுதல் மற்றும் தையல் வேலை, பூத்தையல் மற்றும் ஊசி வேலைப்பாடு, கணினி, சமையற்கலை, டெலிபோன் —டெலக்ஸ் இயக்குபவர் போன்ற தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற்பள்ளிகளில் தற்போது சுமார் 6,500 பயிற்சியாளர்கள் பயிற்சிப் பெற்று வருகின்றனர். இத்தொழிற்பள்ளிகளுள் 50 தொழிற்பள்ளிகள் அரசின் மானியம் பெற்று வருகின்றன. இத்தொழிற் பள்ளிகளில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு மாநில அரசால் தொழிற்தேர்வுகள் நடத்தப்பட்டுத் தேர்ச்சிப் பெறும் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

சிறந்த கைவினைஞர்களை உருவாக்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் பணிகள் பாராட்டுக்குரியன.

★ ★ ★

# இதயம் மகிழ்ந்திட வா புதிய ஆண்டே

□ கவிசக்தி

புதிய வருடத்துடன்
புதிய நூற்றாண்டும்
இரட்டைக் குழந்தைகளாய்
பிரசவிக்கும் வேளையில்...

இந்தியத் தாயவளின்
இதயத் துடிப்புகளில்
இன்பநாதம் ஒலிக்கட்டும்
அன்புஒளி சுடரட்டும்

கடந்த நூற்றாண்டுகளில்...
பல
சாதனைகளும்
சோதனைகளும்
வேதனைகளும்
உலக வாசலின் முன்
கோலமிட்ட போதிலும்,

இதுவரை,
அமைதியை நிலைநாட்ட
அகிம்சையாலும் முடியவில்லை
ஆயுதத்தாலும் முடியவில்லை

துன்பங்களும்
துயரங்களும்
உலகின் சுழற்சியில்
ஒளிந்துகொண்டு
ஒப்பாரி வைக்கின்றன.

இனிவரும்,
நூற்றாண்டிலாவது
புதுயுகம் மலர்ந்து
புதுசுகம் மணந்து

உலக அமைதிக்கு
உன்னத ஆண்டாய்
உதயமாகி வரட்டும்

இதயம் மகிழ்ந்திட
இன்பங்கள் தரட்டும்.



# புத்தாண்டே வருக!

– வலசை ப. கணேசன்

இருபத் தோறாம் நூற்றாண்
டென்னும்
இனிமை விரைந்து வந்திடுக!
குறளின் கொள்கை குவலயம்
யாவும்
கொண்டு நடத்திட வந்திடுக!
உளமே வருத்தும் சாதிப் பூசல்
உயிரை உலகில் எரித்திடவும்
பரபரப் போடே எதிர்பார்க் கின்ற
பரிதிப் பூவே மலர்ந்திடுக!
நரித்தன செயலை வெறித்தனப்
போக்கை
நாட்டினின் றழித்திட வந்திடுக!

துரைத்தனம் நடத்தும் வல்லடி
வழக்கைத்
தொலைத்திட புத்தாண் டேவருக!
அறமும் மறமும் அனைவர்
வாழ்வில்
அரும்பிட வேநீ வந்திடுக!
உறவும் நட்பும் உணர்வாய்த்
தோன்றும்
ஊக்க மாகவே வந்திடுக!
திறமும் தரமும் தொழிலில்
பூண்டு
சிறந்திட புத்தாண் டேவருக!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

## கோ-ஆப்டெக்ஸ் -ன் நல்வாழ்த்துகள்

# அன்றும் இன்றும் என்றும்
# கோ-ஆப்டெக்ஸ்



**கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:**

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

பதிவு எண். M.8676
Licence No.TN/MS(C)/PP-23

